24 பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=
கொழும்பு - 30/=.

உதயன்

சுடர்: 29 கதிர்: 200 வள்ளுவர் ஆண்டு: 2045 வைகாசி 31, சனி 14.06.2014

stay connected with: uthayan.print uthayanprint
Uthayan - A lively National Tamil Daily



அதிரடியால் கலக்கினார் நெய்மர்

பக். 23

28°C

தெளிவான வானிலை
கடற்கரைப் பகுதிகளில் சில வேளைகளில் பலத்த காற்று வீசக்கூடும்

# ஐ.நா. விசாரணைகள் கண்டிப்பாக நடக்கும்

## இலங்கையின் மறுப்புக் குறித்து கவலையில்லை என்கிறார் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பேச்சாளர்




ஜெனிவா, ஜூன் 14
இலங்கையில் நடைபெற்றன என்று கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளுக்கு இலங்கை அரசு ஒத்துழைக்காதுவிடினும், நன்கு பரீட்சிக்கப்பட்ட நம்பகமான வழிமுறைகள்மூலம்விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று அறிவித்துள்ளது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை. இலங்கை விவகாரம் குறித்துக்கருத்துத்தெரிவிக்கும்போதே, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் பேச்சாளர் ரூபேர்ட் கொட்வில்லி மேற்கண்டவாறு

20 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நாவின் விசாரணைக்கு கனடா ஆதரவு

லண்டன், ஜூன் 14
இலங்கையில் நடைபெற்றன என்று கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரால் அமைக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவுக்குப் பூரண ஆதரவை வழங்குவதோடு, இலங்கை தற்போது பயணித்துக் கொண்டிருக்கும் எதேச்சதிகாரப் பாதையில் இருந்து அந்த நாட்டை மாற்றுவது குறித்த விடயத்தில் தொடர்ந்தும் அர்ப்பணிப் போடு உள்ளோம் - என்று தெரிவித்துள்ளார் அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பைர்ட்.
லண்டனில்நடைபெறும்மோதல்களில் பாலியல் வன்முறை குறித்த சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்ட ஜோன் பைர்ட் 'தமிழ் கார்டியனுக்கு' கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
"எதேச்சதிகாரப் பாதையிலிருந்து இலங்கையை விலகச் செய்வது குறித்து நாங்கள் தீவிரஅக்கறை காட்டி வருகின்றோம். இலங்கை இந்த மாநாட்டில் கலந்துகொண்டிருந்தால் அது நன்றாக இருந்திருக்கும்.

20 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையின் முயற்சியை விளங்க மறுக்கும் நாடுகள்

### கவலை வெளியிடுகின்றார் ரவிநாத் ஆரியசிங்க



ஜெனிவா, ஜூன் 14
இலங்கை அரசின் மனிதாபிமான முனைப்புகளைச் சில சர்வதேச சக்திகள் உதாசீனம் செய்கின்றன என்று கவலை வெளியிட்டுள்ளார் ஐ.நா. சபைக்கான இலங்கையின் வதிவிடப்பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க.
இலங்கையின் மனிதாபிமான மீட்புப் பணிகள் குறித்துப் பல்வேறு தரப்புகளும் பாதகமான விமர்சனங்களை முன்வைத்து வந்தபோதிலும், அவற்றையெல்லாம் அரசு பொய்ப்பித்துக் காட்டியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
போர் முடிவடைந்த பின்னர் காணப்பட்ட சவால்களுக்கு அரசு வெற்றிகரமாக முகம் கொடுத்து வருகின்றது. போர் வலயத்தில் உள்ள மக்களின் வாழ்வாதாரம் மேம்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.
ஆயினும் சர்வதேச சமூகத்தின் சில தரப்புகளால் வெளியிடப்பட்டுவரும் விமர்சனங்கள் இலங்கைக்கு மட்டுமன்றி, எமக்கு உதவிகள் வழங்கி வரும் சர்வதேச நாடுகளுக்கும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன என்றும் அவர் கவலை வெளியிட்டுள்ளார். (ந)

## நைஜீரியாவுக்கு இலங்கை பயிற்சி

நைரோபி, ஜூன் 14
பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை குறித்து இலங்கையின் உயர் இராணுவக் குழு ஒன்று நைஜீரிய இராணுவத்துக்குப் பயிற்சிகளை வழங்கியுள்ளது. இலங்கையின் உயர் இராணுவ அதிகாரியான ஜெகத் ஜெயசூரிய தலைமையிலான குழுவே இந்தப் பயிற்சிகளை வழங்கியுள்ளது. அந்தக் குழுவில் இராணுவ மற்றும் கடற்படை உட்பட்ட புலனாய்வு அதிகாரிகளும் இடம்பெற்றிருந்தனர்.

20 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய வியாபாரியிடம் பண மோசடி

யாழ்ப்பாணம், ஜூன் 14
தம்மிடம் புடவைகளைக் கொள்வனவு செய்த குடாநாட்டைச் சேர்ந்த வியாபாரி ஒருவர், அதற்குரிய 20 ஆயிரம் ரூபாவைத் தர மறுக்கின்றார் என்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார் இந்திய புடவை வியாபாரி ஒருவர். யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ்

20 ஆம் பக்கம் பார்க்க



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொலிவியா நாட்டைச் சென்றடைந்துள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. ஜி-77 நாடுகளின் உச்சி மாநாடு எதிர்வரும் 14 மற்றும் 15ஆம் திகதிகளில் சந்தா க்ரூஸ் நகரில் நடைபெறவுள்ளன. அதில் கலந்துகொள்வதற்காகவே ஜனாதிபதி பயணம் மேற்கொண்டிருந்தார். அவர் தற்போது குறித்த நகரத்தை சென்றடைந்துள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (ந)

## ஐ.நா. விசாரணை குழுவுக்கு எதிரான பிரேரணை மீது 18 இல் வாக்கெடுப்பு

### எதிர்த்து வாக்களிக்க தமிழ்க் கூட்டமைப்பு முடிவு

கொழும்பு, ஜூன் 14
இலங்கையில் இடம்பெற்றன என்று கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவை நாட்டுக்குள் அனுமதிக்கக் கூடாது என்று வலியுறுத்தி ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களால், நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்பட்ட தீர்மான வரைவு மீது எதிர்வரும் 17, 18 ஆகிய திகதிகளில் சபையில் விவாதம் நடத்தப்படவுள்ளது. நேற்று முற்பகல் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது இதற்கான முடிவு

20 ஆம் பக்கம் பார்க்க

## விடுதலைப் புலிகளை தடைசெய்தமை சரியா?

### ஆராய்வதற்கு இந்தியாவில் அமைக்கப்படுகின்றது தீர்ப்பாயம்



புதுடில்லி, ஜூன் 14
இந்தியாவில் முன்னர் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் கட்சி தலைமையிலான அரசால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இந்தியாவில் 5 ஆண்டுகள் தடை விதித்தமை சரியானதா என்பதை ஆராய்வதற்கு தீர்ப்பாயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான தகவல் இந்திய மத்திய உள்துறை இணைச் செயலாளரினால் கடந்த வாரம் வெளியிடப்பட்

20 ஆம் பக்கம் பார்க்க

## அரச பணியாளர்கள் அனைவரும் அரசையே ஆதரிக்க வேண்டுமாம்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜூன் 14
வடக்குத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் அரச உத்தியோகத்தர்கள் அரசையே தேர்தலில் ஆதரிக்கின்றனர். ஏனைய மாகாணங்களில் உள்ளதைப் போன்று இங்குள்ள அரச உத்தியோகத்தர்களும் அரசையே ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுள்ளார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.
யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிகாரிகளுடனான சந்திப்பு யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"வடக்கு மாகாணத்தில் தான்

20 ஆம் பக்கம் பார்க்க

## ஒன்றுகூடும் உரிமை இலங்கையில் இல்லை

### ஜெனிவா கூட்டத்தொடரில் குற்றச்சாட்டு




ஜெனிவா, ஜூன் 14
அமைதியாக ஒன்று கூடும் உரிமை இலங்கையில் மறுக்கப்படுகின்றது என்று முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள் என - இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதியாக ஒன்றுகூடுதல் மற்றும் இணைதலுக்கான சிறப்பு அறிக்கையாளர் மைனா கியாய்.
தற்போது நடைபெற்றுவரும் ஐ.நா.மனித உரிமைகள்

20 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# விசாரணைகளை மறுப்பது குற்ற ஒப்புதலாக அமையும்

## ஐக்கிய தேசியக் கட்சி அறிவுரை கூறுகின்றது

கொழும்பு, ஜூன் 14

"இலங்கைப் போரின் இறுதி ஏழு ஆண்டுகளில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்தவிருக்கும் ஐ.நா. குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை என்று இலங்கை அறிவிப்பதானது, குற்றத்தை ஒப்புக்கொள்வதாகவும், தன்னுடைய தரப்பு நியாயத்தை முன்வைப்பதற்கான சந்தர்ப்பத்தை இழப்பதாகவும் அமைந்துவிடும்."- என்று சுட்டிக்காட்டியுள்ளது ஐ.தே.கட்சி.

இந்தச் செயலானது இந்த நாட்டுக்காகப் பல தியாகங்களைப் புரிந்த இராணுவத்துக்கு அநீதி இழைப்பது மட்டுமல்லாமல், சர்வதேச நடவடிக்கைகள் மூலம் பாதிக்கப்படப்போகும் நாட்டு மக்களுக்கு இழைக்கப்படும் பெரும் துரோகமாகவும் அமைந்து விடும் என்றும் அந்தக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

> புலிகளை எல்லாம் அரசு தனது பக்கத்தில் வைத்துக் கொண்டு, நாட்டின் முன்னேற்ற சக்தியினரை பயங்கரவாதிகள் என்றும் நாட்டைக் காட்டிக்கொடுத்தோர் என்றும் அரசு முத்திரை குத்துகின்றது என்றும் ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டுகின்றது.

இதுதொடர்பாக அந்தக் கட்சி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

"விடுதலைப் புலிகளால் இழைக்கப்பட்ட அட்டூழியங்கள் குறித்தும் இந்த விசாரணைக்குழு ஆராயும் என்பதால் அதற்கு ஒத்துழைக்க வேண்டும். குறைந்த பட்சம் புலிகளினால் இழைக்கப்பட்ட குற்றங்கள் பற்றிய விடயங்களையாவது விசாரணையாளர்களிடம் அரசு முன்வைக்க முன்வர வேண்டும்.

புலிகளின் ஆயுதச் சுவீகரிப்பாளரும் பிரபாகரனுக்குப் பின்னர் புலிகளின் தலைவராகத் தன்னைத்தானே பிரகடனப்படுத்திக் கொண்டவருமான கே.பி., புலிகளின் முன்னாள் துணைத் தலைவரும் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவர்களுள் ஒருவருமான கருணா போன்றோர் அரசின் மத்தியில் உள்ளனர்.

இத்தகைய தனியாள்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா கொலை முயற்சி, கிழக்கு மாகாணத்தில் சரணடைந்த அறுநூறு பொலிஸார் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் போன்றவற்றுடன் தொடர்புண்டு. பொறுப்புக்கூறலை அங்கிருந்து ஆரம்பிக்கலாம். அதைவிடுத்து, புலிகளை எல்லாம் அரசு தனது பக்கத்தில் வைத்துக் கொண்டு, நாட்டின் முன்னேற்ற சக்தியினரைப் பயங்கரவாதிகள் என்றும் நாட்டைக் காட்டிக்கொடுத்தோர் என்றும் அரசு முத்திரை குத்துகின்றது"- என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-சி)

# படைக்கு ஆள்சேர்ப்பதை தவறென்று கூற முடியாது

## யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கூறுகின்றார்



வலி.வடக்கு, ஜூன் 14

இராணுவத்துக்குப் பொலிஸார் ஆள்களைச் சேர்ப்பதில் எந்தவகையான தவறும் இல்லை. இதுவரையில் இராணுவத்தினர் பொலிஸாரிடம் அவ்வாறான கோரிக்கைகள் எதனையும் விடுக்கவில்லை. பொலிஸாரும் இராணுவத்துக்கு ஆள்களைச் சேர்க்கவில்லை - இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று வாராந்த செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. அப்போது "யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் பொலிஸார் இராணுவத்துக்கு ஆள்சேர்க்கும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றார்கள் என்று கூறப்படுகின்றதே?" என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

"பயங்கரவாதத்துக்குப் பொலிஸார் ஆள்களைச் சேர்க்கவில்லை. இலங்கை இராணுவத்துக்கே பொலிஸார் ஆள்களைச் சேர்ப்பதாகக் கூறப்படுகின்றது. பொலிஸார் இராணுவத்துக்கு ஆள்களைச் சேர்ப்பதில் எந்தத் தவறும் இல்லை.

ஆயினும் ஆள்களைத் திரட்டித் தருமாறு இராணுவத்தினரால் இதுவரை எம்மிடம் கோரப்படவில்லை"- என்று தெரிவித்துள்ளார். (ற-86)

# மது ஒழிப்பு தினக் கொடி விற்பனை

வரணி, ஜூலை 14


புகைத்தல் மற்றும் மது எதிர்ப்பு தினத்தையொட்டி வரணி மாசேரி பிரதேசத்தில் கொடிவிற்பனை நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் தலைமையில் சமுர்த்திப் பயனாளிகள் வீடு வீடாகச் சென்று கொடி விற்பனையில் ஈடுபட்டனர்.

இதன் மூலம் கிடைக்கும் நிதியின் மூலம் சமுர்த்திப் பயனாளிகளின் குடும்பங்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்த உள்ளன என்று குறித்த பிரதேச சமுர்த்தி அலுவலர் தெரிவித்தார்.

குறித்த கொடியில், "நாட்டைக் கட்டி எழுப்புவோம். போதைப் பொருளை ஒழித்து வாழ்வை எழுச்சி பெறச் செய்வோம்" என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

(வ-122)




யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் உள்ள மணிக்கூட்டுக் கோபுர சுற்றுவளைவில் பஸ்ஸொன்றும் வான் ஒன்றும் நேற்று விபத்துக்குள்ளாகின. யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருந்து வவுனியா பயணித்த இ.போ.ச. பஸ்ஸும், சாரதிகளுக்குப் பயிற்சியளிக்கும் தனியார் நிறுவனம் ஒன்றின் வாகனமுமே விபத்துக்குள்ளாகின. விபத்தில் வானுக்கு சிறு சேதங்கள் ஏற்பட்டன என்று கூறப்படுகின்றது. (ற-86)

# இலங்கை மீனவர்கள் விடுதலை

சென்னை, ஜூன் 14

தமிழகத்தில் விடுதலை செய்யப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் 39 பேரும் நாளை மறுதினம் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

இந்த மீனவர்களை கங்கேசன்துறைக்கு அருகிலுள்ள சர்வதேச கடற்பரப்பில் இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கவுள்ளனர் என்று கடற்றொழில் அமைச்சின் தமிழ் ஊடக ஒருங்கிணைப்பாளர் எஸ்.டீ சதாசிவம் தெரிவித்தார்.

சென்னை புழல் சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 26 இலங்கை மீனவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டதுடன், மேலும் 13 மீனவர்கள் இரு தினங்களுக்கு முன் விடுவிக்கப்பட்டனர்.

தமிழக சிறையில் 2 இலங்கை மீனவர்கள், வழக்கு விசாரணைகள் நிறைவடையாமையால் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். (ற)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் காடழிப்பு கட்டுப்பாட்டுக்குள்

கிளிநொச்சி, ஜூன் 14

முல்லைத்தீவு மாவட்டத்தின் காடழிப்புச் செயற்பாடுகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன என்று மாவட்ட வன வளப் பாதுகாப்புத் திணைக்களம் கூறுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த காலங்களில் காடழிப்பு மிக வேகமாக இடம்பெற்று வந்தது. அதனால் பெருமளவான இயற்கை வளம் அழிந்து சூழல் பாதிப்பு ஏற்படும் அபாய நிலை காணப்படுகின்றது என்று பலராலும் சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட வனவளத் திணைக்களத்தினரிடம் கேட்டபோது, "மாவட்டத்தின் காடழிப்பு தற் போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் வனவளத் திணைக்களத்தின் கீழ் இருவட்டார அலுவலகங்கள் உள்ளன. அதில் ஒலுமடு வட்டார அலுவலகம் மாங்குளம் பகுதியிலும், முல்லைத்தீவு வட்டார அலுவலகம் முள்ளியவளையிலும் இயங்கி வருகின்றன. என்று அவர்கள் தெரிவித்தனர். (வ-55)

**Work on a Cruise Liner**
(சர்வதேச பயணிகள் கப்பலில்)
**or in Australia**

* Study in Malaysia, Job placement on International Cruise liner
* Paid Monthly allowances
* Free Food & Accommodation

iCS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம் 021 4926222
107-B 1/1, Galle Road, Colombo - 6
4343322, 077 3013060

# கடந்த வாரம் மட்டும் திருட்டுப்போனவை ரூபா 10 லட்சம் பெறுமதியானவையாம்

## கணக்கிட்டுக் கூறுகின்றனர் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஜூன் 14

கடந்த வாரம் இடம்பெற்ற கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களில் சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் அபகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பின்போதே இந்தத் தகவலை அவர் வெளியிட்டுள்ளார்.

நாவற்குழிப் பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்தில் 60 ஆயிரம் ரூபா பெறு மதியான தங்கச் சங்கிலி ஒன்று திருடப்பட்டுள்ளது. அது தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டு எதிர் வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கோண்டாவில் கிழக்குப் பகுதியில் கடந்த 6 ஆம் திகதி 4 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் கடந்த 9ஆம் திகதி வீடொன்றில் இருந்து ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. அதேதினத்தில் வரணியில் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று திருடப்பட்டுள்ளது.

கொடிகாமம், கச்சாய் வீதியில் உள்ள வீடொன்றில் கடந்த 6 ஆம் திகதி 3 லட்சத்துக்கு 20 ஆயிரம் பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளன. நாரந்தனை கிழக்கில் 18 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆடுகள் கள்வாடப்பட்டுள்ளன. இது தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் - என்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் அங்கு குறிப்பிட்டார். (ற-4)

## தாய் சேய் பரிசோதனை நிலையம் செயற்பட உரிய கட்டடம் இல்லை

வலி.வடக்கு,ஜூன் 14

நல்லூர் வடக்கு, தாய் சேய் பரிசோதனை நிலையத்துக்கு உரிய கட்டடம் இன்மையால் அலைந்து திரியும் நிலைக்கு உள்ளாகியுள்ளதாக சுகாதார வைத்தியதிகாரி பணிமனை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலத்தில் பருத்தித்துறை வீதியில் யாழ்ப்பாணம் மாநகர சபை வளாகத்தில் அமைந்துள்ள கட்டடத்தில் குறிப்பிட்ட தாய்சேய் பரிசோதனை நிலையம் நீண்ட காலமாக இயங்கியதாகவும் குறிப்பிட்ட கட்டடத்தை தற்போது பொலிஸாரின் பயன்பாட்டுக்கு மாநகர சபை வழங்கியமையால் அதனைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக நிலையான இடமின்றி அலைந்து திரியும் நிலை காணப்படுவதாகவும் இதனால் உரிய முறையில் தாய், சேய் நிலையத்தின் செயற்பாடுகள் நடைபெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-86)

## வடக்கில் கால்களை இழந்தோருக்கு தன்னியக்க செயற்கைக் கால்கள்

### சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தால் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 14

வடமாகாணத்தில் கால்களை இழந்தோருக்கு தன்னியக்க செயற்கைக் கால்கள் பொருத்துவதற்கு சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முழங்காலுக்கு மேல் அல்லது கீழ் கால்களை இழந்தவர்களுக்கு தன்னியக்க செயற்கைக் கால்கள் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன. முதற் கட்டமாக வடமாகாணத்தைச் சேர்ந்த 100 பேருக்கு செயற்கைக் கால்கள் பொருத்தப்பட்டுள்ளன.

**முழங்காலுக்கு மேல் அல்லது கீழ் கால்களை இழந்தவர்களுக்கு தன்னியக்க செயற்கைக் கால்கள் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன.**

நீர்கொழும்பு ஒரியன்ற் லயன்ஸ் கழகம், சாவகச்சேரி லயன்ஸ் கழகம் ஆகியவை இணைந்து மேற்கொள்ளும் செயற்றிட்டங்களில் ஒன்றான இந்தத் திட்டத்தில் கால்களை இழந்த செயற்கைக் கால் தேவைப்படுவோர் உடனடியாக சாவகச்சேரி நவீன சந்தையில் உள்ள விமலாஸ் வணிக நிலையத்தில் அல்லது சாவகச்சேரி மருத்துவமனையில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவுகள் மேற்கொள்வோரின் அளவுகள் பெறப்பட்டு அடுத்த மாத முற்பகுதியில் செயற்கைக் கால்கள் பொருத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

300 பேருக்கு தன்னியக்க செயற்கைக் கால்கள் இந்தியாவிலிருந்து தருவிக்கப்படவுள்ளதால் இந்த செயற்கைக் கால்களைப் பொருத்த விரும்புபவர்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ,பிரிவு கிராம அலுவலரின் கடிதம் ஆகியவற்றுடன் வருகைதந்து பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## தனியார் கல்வி நிலையங்கள் இயங்குவதற்கு கட்டுப்பாடு

### வலி.தென்மேற்கு பிரதேசத்தில்

வலி.தென்மேற்கு, ஜூன் 14

மாணவர்களின் சமய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள தனியார் கல்வி நிலையங்கள் வெள்ளிக்கிழமைகளில் மாலை நேரத்திலும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை நேரத்திலும் மூடப்படவுள்ளன.

இதற்கான தீர்மானம் வலி. தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசசபையின் மே மாதத்துக்கான தொடர்கூட்டம் தவிசாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

தனியார் கல்வி நிலையங்கள் வாரத்தில் ஏழு தினங்களும் தொடர்ந்து இயங்கி வருவதால் மாணவர்கள் ஆலயங்களுக்குச் செல்ல முடியாத நிலை தோன்றுகின்றது. இதனால் மாணவர்கள் மத்தியில் சமயப் பற்றும் ஆன்மிக அறிவும் நாளுக்கு நாள் குன்றி வருவதுடன் எதிர்காலத்தில் பெரிய விளைவுகளை ஏற்படுத்தும் சூழல் உருவாகும். இவ்வாறு சுட்டிக்காட்டிய தவிசாளர் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இது குறித்து ஆராயப்பட்டதாகவும் உள்ளூராட்சித் திணைக்களத்தின் உதவியுடன் தனியார் கல்வி நிலையங்களைக் குறிப்பிட்ட தினங்களில் மூடுவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதையடுத்து வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள தனியார் கல்வி நிலையங்கள் வெள்ளிக்கிழமைகளில் மாலைநேரத்திலும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை நேரத்திலும் மூடுவதென்று தீர்மானிக்கப்பட்டது. (வ-115)

## அதிகாரிகள் ஆதரவுடன் சட்டவிரோத மீன்பிடி

### நடவடிக்கை எடுக்குமாறு பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் கோரிக்கை

வலி.தென்மேற்கு.ஜூன் 14

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த தென்மராட்சிப் பிரதேச மீனவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச கடற்பரப்பில் அதிகாரிகளின் ஆதரவுடன் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபட்டு வருவதாகக் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்துக்குத் தெரிவித்துள்ள பச்சிலைப்பள்ளி கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளது.

சாவகச்சேரி பகுதியிலுள்ள மீனவர்கள் கிளாலி கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தித் தொடர்ந்து தொழிலில் ஈடுபடுவதால் மீன்பிடித் தொழிலையே நம்பி வாழ்ந்து வரும் கிளாலியைச் சேர்ந்த மீனவர்கள் பல வழிகளாலும் பாதிக்கப்படுவதுடன் போதிய வருமானமின்றி வாழ்க்கை நடத்த முடியாமல் திண்டாடுகின்றனர்.

கடந்த மாதம் பூநகரி பிரதேசத்தில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்துவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டபோதும் தொடர்ந்தும் அந்தத் தொழிலில் தென்மராட்சி பிரதேச மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களின் சட்டவிரோத தொழில் குறித்து யாழ். மாவட்ட, 'கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்துள்ள மேற்படி சமாசம் இந்தத் தொழிலை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு அதிகாரிகளைக் கோரியுள்ளது. (வ-115)

## யாழ். மருத்துவபீட முதலாவது பீடாதிபதி ஞாபகார்த்தமாக கலையரங்கு திறப்பு

### இன்று அமைச்சர் எஸ்.பி.வருகிறார்



எஸ்.பி.திஸநாயக்க

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தின் முதலாவது பீடாதிபதி பேராசிரியர் கூவா ஞாபகார்த்த கலையரங்கத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணை வேந்தர் வசந்தி அரசரட்ணம் தலைமையில் நடைபெற வுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீட வளாகத்தின் பிரதான கட்டடத் தொகுதிக்கு அருகில் அமைந்துள்ள இக் கட்டடத்துக்கான அடிக்கல் 1980 ஆம் ஆண்டு நடப்பட்டு தற்போது இந்தப் பணி நிறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுமார் 25 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட செலவில் நவீன வசதிகள் மற்றும் மண்டபத்தினுள் குளிரூட்டிகள் பொருத்தப்பட்டு இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடத் தொகுதியை உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க திறந்து வைக்கவுள்ளார். (ஒ-86)

## தேவாலயம் முன்பாக தகராறு ஏழு பேருக்கு விளக்கமறியல்

### அவர்களுடன் தொடர்புடையவர் என்று தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

உடுவில் மல்வம் பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றின் முன்பாகத் தகராறில் ஈடுபட்டனர் என்று தெரிவித்து 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு உடந்தையாக இருந்தார் என்று பொதுமக்களால் குற்றஞ்சாட்டப்படும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபரால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் சுன்னாகம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்தவராவார்.

**குழப்பம் விளைவித்தவருக்கு ஆதரவாக இருந்துவந்தார் என்று கூறப்படும் சுன்னாகம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்**

மல்வம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து, குறித்த தேவாலயத்துக்கு முன்பாக இரு இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்த முயற்சிக்கப்பட்டுள்ளது. குறித்த இரு இளைஞர்களும் தேவாலயத்துக்குள் ஓடியுள்ளனர். அதையடுத்து தேவாயலத்துக்குள் பிரச்சினை ஏற்படக் கூடாது என்பதற்காக தேவாலயத்தின் கதவுகள் மூடப்பட்டன. அதையடுத்து துரத்தி வந்தவர்கள் தேவாலய குருவுடன் முரண்பட்டுள்ளனர். சம்பவ இடத்தில் கூடிய அந்தப் பகுதி மக்கள் குருவுக்கு ஆதரவாக, துரத்திச் சென்றவர்களுடன் முரண்பட்டுள்ளனர்.

அப்போது துரத்திச் சென்றவர்கள் "தம்மை யாரும் எதுவும் செய்ய முடியாது. தமக்கு எதிராகப் பொலிஸாரும் நடவடிக்கை எடுக்க மாட்டார்கள்"- என்று அங்கிருந்த மக்களுடன் தகராறில் ஈடுபட்டனர் என்று மக்கள் கூறுகின்றனர். இந்த விடயம் சுன்னாகம் பொலிஸ் நிலையம் வரை சென்றது.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டதுடன் குழப்பத்தில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் 7 பேரைக் கைது செய்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் குழப்பம் விளைவித்தவருக்கு ஆதரவாக இருந்துவந்தார் என்று கூறப்படும் சுன்னாகம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கூறுகின்றனர். குறித்த 7 பேரும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு, எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்துப் பொலிஸார் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ள நிலையில், சந்தேகநபர்களைப் பிணையில் விடுவிக்குமாறு மல்லாகம் நீதிமன்றில் சட்டத்தரணி மூலம் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. எனினும் அதற்குப் பொலிஸார் கடும் ஆட்சேபனை தெரிவித்ததால் அவர்களின் பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. (ற-4)

## சிறுவர் நிதியத்தால் மாணவருக்கு கல்வி நிதி

தென்மராட்சி, ஜூன் 14

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி நிலையைக் கருத்தில்கொண்டு இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினர் வாழ்வாதார உதவியாக ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளனர்.

இரு குடும்பங்களுக்கு தலா 40 ஆயிரம் ரூபாவும் ஒரு குடும்பத்துக்கு 30 ஆயிரம் ரூபாவும் நேற்று வெள்ளிக்கிழமை பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை அபிவிருத்தி உத்தியோகத்தரால் கையளிக்கப்பட்டன.

குடும்பத்தின் வறுமை நிலை குறித்து பிரதேச செயலர் சிறுவர் நன்னடத்தைப் பிரிவு மூலம் தமது பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்த வாழ்வாதார உதவி வழங்குமாறு கோரியதை அடுத்து இந்த உதவிக் கொடுப்பனவு நேற்று வழங்கப்பட்டன.

கொடிகாமம், மிருசுவில் வடக்கு, கைதடி தெற்கு ஆகிய பகுதிகளைச்சேர்ந்த குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக கொடுப்பனவு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## சந்தேகத்தின் பேரில் மட்டும் கடந்த வாரம் 58 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 14

கொள்ளை மற்றும் திருட்டுகளில் ஈடுபடுபவர்களைக் கைது செய்ய பொலிஸார் கடந்த வாரம் மேற்கொண்ட கைது நடவடிக்கைகளில் சந்தேகத்தின் பேரில் மட்டும் 58 பேர் கைதாகினர் என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகர் பி.விமலசேன தெரிவித் தார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

கொலைக் கொள்ளைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 4 பேரும் திருட்டுக் குற்றச்சாட்டில் 10 பேரும் அனுமதிப் பத்திரம் இன்றி மது விற்பனை செய்த குற்றச்சாட்டில் 27 பேரும் அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் 10 பேரும் கொள்ளை தொடர்பில் ஒருவரும் மது போதையில் கலகம் விளைவித்த குற்றச்சாட்டில் 3 பேரும் பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டில் 10 பேரும் கத்தியால் வெட்டிக் காயப் படுத்திய குற்றச்சாட்டில் 10 பேரும் வீட்டினுள் அத்துமீறிப் புகுந்த குற்றச்சாட்டில் ஒருவரும் திருட்டு மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டில் ஒருவரும் கைதாகியுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-4-86)

# உள்நாட்டுப் பிரச்சினைகளை வெளிநாடுகள் தீர்க்க முடியா

## நிதியமமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 14

ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சரியான முறையில் அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதன் ஊடாகவே இனப்பிரச்சினைக்கு உரியதீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும். பல்வேறு விதமான தீர்வுத் திட்டங்கள் அவ்வப் போது முன்வைக்கப்படுகின்றன. ஆயினும் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு வெளிநாடுகளில் இருந்து தீர்வைக் காண முடியாது- என்று தெரிவித்துள்ளார் நீதியமைச்சரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம்.

இலங்கைக்கான கொரிய குடியரசு தூதுவர் வொன் சாம் சாங்க், அமைச்சர் ஹக்கீமை சந்தித்து நேற்றுக் கலந்துரையாடினார்.

அதன்போதே நீதியமமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



கொரியத் தூதுவருடனான சந்திப்பின்போது

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"பெரும்பான்மையானோரின் முடிவுகளை ஏற்றுக்கொள்ளக் கூடிய பிரித்தானியாவின் வெஸ்ட் மின்ஸ்டர் மாதிரியிலான நாடாளுமன்ற முறைமையே இலங்கையில் நடைமுறையில் இருந்து வருகிறது. இங்கு இலங்கையில் உரிய காலத்தில் தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன. பல கட்சி ஜனநாயகம் நிலவி வரும் இந் நாட்டில் ஒவ்வொரு கட்சியும் தத்தமது அபிப்பிராயங்களையும், நிலைப்பாட்டையும் முன்வைப்பதற்கு முழுமையான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் கூட்டரசில் பல கட்சிகள் அங்கத்துவம் வகிக்கின்றன.

இலங்கையில் சில அரசியல் ரீதியான தகராறுகள் தோன்றிய போதிலும் கூட, ஒரு போதும் இந்த நாடு இராணுவ ஆட்சியின் கீழ் இருக்கவில்லை. ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட நாடாகவே இந் நாடு தொடர்ந்தும் இருந்து வருகிறது. ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சரியான அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்படுவதன் ஊடாகவே இனப் பிரச்சினைக்கு உரிய தீர்வை காணலாம். பல்வேறு விதமான தீர்வுத் திட்டங்கள் அவ்வப்போது முன்வைக்கப் பட்டு வருகின்றன. எவ்வாறாயினும், உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு வெளிநாடுகளில் தீர்வுகளைக்காண முடியாது."- என்று தெரிவித்துள்ளார். (ற-10)

# பல்கலைக்கழகத்தினுள் அச்சுறுத்தும் சுவரொட்டி

## ஒட்டியோர் எவரும் இதுவரை கைதாகவில்லையாம்

வலி.வடக்கு, ஜூன் 14

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டியவர்கள் தொடர்பில் தகவலெதும் கிடைக்கவில்லை. அதனால் அதுகுறித்து இது வரை எவரும் கைது செய்யப் படவில்லை - இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.பொலிஸ் நிலையத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன.

நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் யாழ்.பொலிஸ் நிலையத்தில் செய்தியாளர் சந்திப்பின்போது, "பயங்கரவாதத்துடன் தொடர்புடைய துண்டு பிரசுரங்கள் ஒட்டியவர்கள் என்று கூறி உடனுக்குடன் கைதுகள் நடைபெறுகின்றன. அதேவேளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குள் பேராசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் ஒட்டப்பட்ட துண்டுபிரசுரங்கள் தொடர்பில் யாரேனும் கைது செய்யப்பட்டிருக்கின்றனரா?" என்று செய்தியாளர்கள் கேட்டிருந்தனர். அதற்கு அடுத்தவாரம் பதிலளிப்பதாக அப்போது கூறப் பட்டது.

இந்தநிலையிலேயே நேற்று மேற்குறித்தவாறு தெரிவித்துள்ளார் யாழ்.பொலிஸ் நிலையத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்:

"பல்கலைக் கழகத்துக்குள் துண்டுப்பிரசுரம் ஒட்டப்பட்டமை தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் மூலமாக விசாரணைகள் நடைபெற்று வருகின்றது. பல்கலைக் கழகத்துக்குள் சென்று புலனாய்வு செய்யமுடியாது. அந்தச் சம்பவம் தொடர்பில் தகவலெதும் எமக்குக் கிடைக்கவில்லை"- என்று தெரிவித்தார். (ற-4)

# சிறுவர் உழைப்புக்கு எதிரான வாரம்

வாகரை, ஜூன் 14

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால் ஜூன் 09ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை சிறுவர் உழைப்பிற்கு எதிரான தேசிய செயற்பாட்டு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஜூன் 12 ஆம் திகதி கடைப்பிடிக்கப்படும் சர்வதேச சிறுவர் உழைப்பு ஒழிப்பு தினத்தை முன்னிட்டே இந்தப் பிரகடனம் மேற்கொள்ளப்பட் டுள்ளது.

இதுதொடர்பான நிகழ்வு நேற்றுமுன்தினம், வாகரை பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகியின் வழிகாட்டலில், பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் கே.ரவிச்சந்திரன் தலைமையில் வாகரை பிரதேச செயலகத்தில் நடை பெற்றது. அதில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் வீ.யோகராஜா, மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே.ஹாபீலா, முன்பள்ளிப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.தவநீதன், வட்டவான் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் கே.சுதேஸ், உளவல துணையாளர் வீ.பிரபாகரன் உட்பட பிரதேச சிறுவர் பாதுகாப்பு அமைப்புக்களின் அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-10)



அராலி கிழக்கு ஆவாரம்பிட்டி முத்துமாரி அம்மன் ஆலயத்தின் எட்டாம் நாள் திருவிழாவான நேற்று, அம்பாளுக்கு நூற்றுக் கணக்கான பலாப்பழங்கள் வெட்டிப் பெரும் படையல் செய்யப்பட்டது. அம்பாள் வெளிவீதியில் நடப்பட்டிருந்த கமுக மரத்திலான கொடிக்கம்பத்துக்கு வந்து அருள்தந்தபோது, பக்தர்கள் பலாப்பழங்களை வெட்டி பொங்கல் படைத்து அருள்வேண்டினார்கள். (ற-86)

# பொலிஸ், அதிரடிப்படைக்கு ஆள்கள் பற்றாக்குறையாம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ்.மாவட்டத்தில் பொலிஸாருக்கும், விசேட அதிரடிப்படையினருக்கும் ஆளணிப் பற்றாக்குறை நிலவுகிறது. தேவையான அளவு ஆளணி வசதி இல்லை. இதனாலேயே பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினரும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.விமலசேன.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொலிஸாருடன் இராணுவத்தினர் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். அதனால் இங்கு பொதுமக்கள் மத்தியில் அச்சமான நிலை தொடர்வதாக பலராலும் கூறப்படுகிறது. அதனால் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து செயற்படுவதனைத் தவிர்க்குமாறு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் சுட்டிக்காட்டப்பட்டது. அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்:

"யாழ்.மாவட்டம் பரந்த பிரதேசமாக உள்ளதனால் அதற்கேற்ப பணியில் ஈடுபடவேண்டியுள்ளது. விசேட அதிரடிப் படையினருக்கு இங்கு ஒரு முகாம் மாத்திரமே உள்ளது. பொலிஸாருக்கு மாத்திரமன்றி விசேட அதிரடிப்படையினருக்கு யாழ்ப்பாணத்தில் பற்றாக் குறை நிலவுகிறது. அதனாலேயே இராணுவத்தினருடன் இணைந்து பொலிஸார் செயற்படுகின்றனர். அதனைத் தவிர்க்க முடியாது"- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# உளச்சார்பு பரீட்சை கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 14

அடுத்த மாதம் நடைபெறவுள்ள உளச்சார்புப் பரீட்சைக்கான முன்னோடிக் கருத்தரங்கு யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது என்று ஏற்பாட்டுக்குழுவினர் பரீட்சார்த்திகளுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

சப்ரகமுவா பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞானபீட தமிழ் மாணவர்களால் இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ற-4)

# சுற்றறிக்கையை மாற்றியமைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

யாழ்ப்பாணம், ஜூன் 14

பிரதேச அரசியல் தலைமைகளின் வழிகாட்டலில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அனுப்பப்பட்ட சுற்றறிக்கையை பிரதேச அரச அரசியல் தலைமையின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று மாற்றியமைத்துள்ளார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் அரச கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான சில்வேஸ்திரி அலென்ரின், முருகேசு சந்திரகுமார், யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலாளர்கள், ஈ.பி.டி.பியின் பிரதேச அமைப்பாளர்கள் கலந்து கொண்ட கூட்டம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம் பெற்றது.

இந்தக் கூட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால், நடைமுறைப்படுத்தும் வேலைத் திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது. இதன் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளரால் வாசிக்கப்பட்டது.

அதில், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வேலைத் திட்டங்கள் பிரதேச அரசியல் தலைமைகளின் வழிகாட்டலில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதனை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதேச அரச அரசியல் தலைமையின் வழிகாட்டலில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மாற்றியமைத்தார். (ற-5)

# இலங்கைக்கு எதிரான விசாரணையை தமிழ்நாட்டில் இருந்து நடத்துங்கள்

## பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்து

சென்னை, ஜூன்.14

இலங்கைக்கு எதிரான போர்க் குற்ற விசாரணையை தமிழ் நாட்டில் நடத்த வேண்டும் என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைப் போரில் ஒன்றரை லட்சம் அப்பாவி தமிழர்கள் இனப்படுகொலை செய்யப் பட்டதற்கு நீதி பெற்றுத் தருவதற்கான முயற்சிகளில் இது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். இதை பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-



இலங்கையில் நாட்டையும் இழந்து, உரிமைகளையும் இழந்த தமிழர்கள் தங்களது உறவுகள் கொல்லப்பட்டதற்காவது நீதி கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

இலங்கைக்கு எதிரான போர்க் குற்ற விசாரணையை கொழும்பில் நடத்த ராஜபக்ஷ அரசு மறுத்துவிட்ட நிலையில், அந்த விசாரணையை தமிழ்நாட்டில் நடத்தவும், இலங்கைப் போரில் பாதிக்கப்பட்டு உலகம் முழுவதும் தஞ்சமடைந்துள்ள தமிழர்களும், தமிழகத்தில் உள்ள ஈழ அகதிகளும் விசாரணையில் அச்சமின்றி பங்கேற்கவும் மத்திய அரசு அனுமதிக்க வேண்டும். இதற்காக தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்று பட்டு குரல் கொடுக்க வேண்டும்"- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

# டெங்கு நோயாளர் இதுவரை 13,556


கோப்புப்படம்

கொழும்பு.ஜூன் 14
2014ஆம் ஆண்டில் முதல் ஆறு மாத காலத்தில் நாடு முழுவதிலும் 13,556 டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவு தெரிவித்துள்ளது. இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் 60 வீதமானவர்கள் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று அந்தப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டின் 22 ஆவது வாரத்திலேயே அதிகளவானவர்கள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஆறு மாதங்களில் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 5,184 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த மாதத்தின் இதுவரையான காலத்தில் 819 டெங்கு நோய் தொற்றுக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் கொழும்பு மாவட்டத்தில் 452 டெங்கு தொற்று நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் 92 டெங்கு தொற்றுநோயாளர்களும், ஏனைய பகுதிகளில் 360 டெங்கு தொற்று நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஆறு மாதங்களில் கொழும்பு மாவட்டத்தில் அதிகூடுதலான டெங்கு பாதிப்பு பதிவாகியுள்ளது. 1,675 டெங்கு நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ச)

# விசாரணைக்குழுவுக்கு பதிலளிக்க நான் தயார்

## பொன்சேகா தெரிவிப்பு


சரத் பொன்சேகா

கொழும்பு.ஜூன் 14
போர்க் காலத்தில் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றச் சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக்குழுவுக்கு பதிலளிக்க தயார் என்று ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை மீதான விசாரணை தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை. இலங்கைக்கு வருகைதரும் குழு என்னிடமே விசாரணையை மேற்கொள்ள வேண்டும்.

அன்று போர்க் காலத்தில் எனதுதலைமையிலேயே போர் முன்னெடுக்கப்பட்டது. படையினர் எந்தவொரு போர்க்குற்றத்தையும் மேற்கொள்ளவில்லை என்பதை நான் உறுதிப்படுத்துகிறேன். இது தொடர்பில் எந்தவொரு நீதிமன்றத்துக்கும் சென்று பதிலளிக்க நான் தயார்.

இராணுவத்தின் நற்பெயரைப் பாதுகாக்க நான் கடமைப்பட்டுள்ளேன். அதனால், எந்தவொரு குழு இலங்கைக்கு வந்தாலும் பயப்படத் தேவையில்லை.

அந்த குழுவுக்கு பதிலளிக்க நான் தயார். போர் தொடர்பான எந்தவொரு பொறுப்பையும் ஏற்க நான் தயார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக்குழு இலங்கைக்கு வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டால், இலங்கை இராணுவத்தினர் போர்க் குற்றத்தை மேற்கொண்டார்கள் என்றே அர்த்தப்படுத்தப்பட்டு விடும்.

அது போரில் ஈடுபட்ட இராணுவத்தினரின் பெயருக்கு ஏற்படுத்தப்பட்ட களங்கமாகும். அதனால், விசாரணைக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்க தயங்கத் தேவையில்லை- என்றார். (ச)

# ஜனாதிபதித் தேர்தல் விரைவில் அறிவிப்பு

கொழும்பு,ஜூன் 14
ஜனாதிபதி தேர்தல் பற்றி விரைவில் அறிவிக்கப்பட உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 18 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இரண்டாம் தவணைக்கான பதவிப் பிரமாணம் செய்து கொண்டு நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.


பதவிப் பிரமாணம் செய்து கொண்டு நான்கு ஆண்டுகளின் பின்னர் ஜனாதிபதி தேர்தலை நடத்த அரசியல் சாசனத்தில் சந்தர்ப்பம் உள்ளது.

அதன் அடிப்படையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் நவம்பர் மாதம் 18 ஆம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதி தேர்தல் நடத்துவதற்கான திகதி ஒன்றை அறிவிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

> “ அடுத்த ஆண்டு ஜனவரி மாத நடுப் பகுதியளவில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது.

கிரக நிலைகளுக்கு அமைவாக எப்போது தேர்தலைத் நடத்தினால் வெற்றியீட்ட முடியும் என்பது குறித்து ஜனாதிபதி ஏற்கனவே ஜோதிட நிபுணர்களிடம் ஆலோசனை பெற்றுக்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த ஆண்டு ஜனவரி மாத நடுப் பகுதியளவில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது என்று கூறப்படுகிறது. (ச)


ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையிலான நட்புறவின் வெளிப்பாடாக ஜப்பான் அரசு இலங்கை இராணுவப்படைக்கு தீயணைப்பு வாகனம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியது.
இலங்கை இராணுவப்படை தலைமையக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற நிகழ்வில் இராணுவப்படை செயலணிப் பிரதானியான மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்கவிடம் ஜப்பான் குழுவின் சார்பில் அதன் தலைவர் ஒசகாவா குறித்த வாகன சாவியை கையளித்தார். (ச)

# ஹெரோயின் சிக்கியது

கொழும்பு.ஜூன் 14
பியகம,களனி வீதியில் விசேட அதிரடிப்படையினரால் நேற்றுமுன்தினம் காலை கைப்பற்றப்பட்ட 85.5 கிலோகிராம் ஹெரோயினின் பெறுமதி 68 கோடி 31 லட்சத்து 45 ஆயிரம் ரூபாவாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவரும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# விபத்தில் 8 பேர் காயம்

கொழும்பு.ஜூன் 14
புத்தளம் - கொழும்பு வீதியில் மங்கள எளிய பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற வாகன விபத்தில் 8 பேர் காயமடைந்துள்ளனர்.

அனுராதபுரத்திலிருந்து டெல்தோட்டை பகுதிக்குச் சென்று கொண்டிருந்த வான் ஒன்று வீதியை விட்டு விலகி தொலைபேசி கம்பத்தில் மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்களில் 13 வயது சிறுமியும், 3 பெண்களும் உள்ளடங்கியுள்ளனர். (ச)

# ‘அலுக்கோசு’ என்னும் பெயர் உயிர் எடுப்பவராக மாற்றம்

## சிறைச்சாலைகள் திணைக்களம் தகவல்

கொழும்பு.ஜூன் 14
இலங்கையில் தூக்குத் தண்டனை நிறைவேற்றுகின்றவரை இதுவரை காலமும் அழைக்கப்பட்டு வந்த அலுக்கோசு என்ற பெயர் தற்போது மாற்றப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது குறித்த பதவிக்கான பெயரானது உயிர் எடுப்பவர் (ஜீவஹரண) என்று மாற்றப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் திணைக்களம் அலுக்கோசு என்ற பெயருக்குப் பதிலாக புதிய பெயர்களை பிரேரிக்குமாறு கோரியிருந்தது. அதனடிப்படையில் மக்களிடமிருந்து 200 பெயர்கள் கிடைக்கப்பெற்றன.

சிறைச்சாலைகள் புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் கண்காணிப்பின் கீழ் நியமிக்கப்பட்ட குழுவினர், அந்த பெயர்களில் இருந்து உயிர் எடுப்பவர் என்ற பெயரைத் தெரிவு செய்துள்ளனர்.

நபரொருவரை தூக்கிலிடும் அதிகாரியின் பதவிக்கு அலுக்கோசு என்ற பெயர்கொண்டு அழைக்கின்ற போது அவ்வரின் பதவிக்கும் அவருக்கும் ஏற்படுகின்ற அபகீர்த்தியை ஒழிக்கும் வகையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (ச-22)

# ஐ. நா. குழு இலங்கை வருவதைத் தடுப்பதில் அரசு கூடுதல் அக்கறை

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறுகிறார்


நிமால் சிறிபால டி சில்வா

கொழும்பு.ஜூன் 14
ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச விசாரணைக் குழு இலங்கை வருவதனை தடுப்பதிலேயே அரசு தற்போது கூடுதல் அக்கறை செலுத்தி வருகின்றது என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளையால் நியமிக்கப்பட்ட சர்வதேச விசாரணைக் குழு இலங்கைக்குள் அனுமதிக்கப்படக்கூடாது என்பதில் நாம் உறுதியாகவுள்ளோம் என்று அவர் கூறினார்.

சர்வதேச விசாரணைக் குழு இலங்கை வருவது தொடர்பிலான நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படும் வரை , அந்தக் குழு பற்றியோ அவர்கள் முன்னெடுக்கவுள்ள விசாரணைகள் குறித்தோ ஆராய்வது தற்போதைக்கு அவசியமற்றது என்று அவர் கூறினார்.

நவிப்பிள்ளையால் நியமிக்கப்பட்டுள்ள குழு இலங்கைக்குள் விசாரணைகளை மேற்கொள்ளும் பட்சத்தில் அதற்கு முகம் கொடுக்க அரசு எவ்வாறு தயாராகியுள்ளது என்று அமைச்சர் நிமல் சிறிபாலவிடம் கேட்டபோது, சர்வதேச விசாரணைக் குழு இலங்கைக்குள் வருவார்களென்ற பேச்சுக்கே இடமில்லாத நிலையில் அதனை எதிர்கொள்வதற்கு தயாராவது அநாவசியமானதும் அர்த்தமற்றதுமான செயலாகும் என்று கூறினார். (ச)

# நடைபாதை வியாபாரத்துக்குத் தடை



நடப்பட்டுள்ள விளம்பரப் பலகை

மட்டக்களப்பு.ஜூன் 14
மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபாதை வியாபாரம் செய்வதை மட்டக்களப்பு மாநகரசபை தடைசெய்துள்ளது. அதனை அறிவுறுத்தும் பலகைகள் இடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாநகரசபை ஆணையாளரின் அறிவுறுத்தலுடன் அடையாளப்படுத்தப்பட்ட நடைபாதை வியாபாரம் செய்யும் இடங்களில் இந்த அறிவுறுத்தல் பலகைகள் இடும் நடவடிக்கை மாநகரசபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குட்பட்ட பார் வீதியில் இடப்பட்ட இந்தப் பலகையில் இந்த இடத்தில் வீதியோர வியாபாரம் தடைசெய்யப்பட்டுள்ளது என்று தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் எழுதப்பட்டுள்ளன. (ச)

# நீரில் மூழ்கி ஒருவர் சாவு

அம்பாறை.ஜூன் 14
அம்பாறை, திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம், மரணகண்டி ஆற்றில் மூழ்கி 3 பிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளார் என்று திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

விநாயகபுரம் 3, கப்பூகணார் வீதியைச் சேர்ந்த சபாரெத்தினம் வில்சன்சேகர் (வயது-50) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த நபர் விடுமுறை தினமான நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பொழுதுபோக்குக்காக தூண்டில் மூலம் மீன் பிடிப்பதற்கு ஆற்றுக்குச் சென்றுள்ளார்.

இந்தநிலையில் இரவு 7 மணியாகியும் வீடு திரும்பாதிருந்ததால் உறவினர்கள் இவரை தேடிச் சென்றபோது அவர் நீரில் முழ்கி உயிரிழந்தமை தெரியவந்துள்ளது. இந்தச்சம்பவம்தொடர்பில்பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## கட்டுத்துவக்கு வெடித்து ஒருவர் காயம்

மட்டக்களப்பு.கட்டுமுறிவு காட்டுப் பகுதியில் கட்டுத்துவக்கு ஒன்று வெடித்ததால், கதிரவெளியைச் சேர்ந்த 8 பிள்ளைகளின் தந்தையான க.குணசேகரம் (வயது -58) என்பவர் முழங்காலில் காயமடைந்துள்ளார்.

இந்த நபர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று வாகரை பொலிஸார் தெரிவித்தனர். கோழிக்கூடு அமைப்பதற்கு தடிகள் வெட்டுவதற்காக காட்டுக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை அவர் சென்றபோது, இந்த அசம்பாவிதத்துக்கு முகம் கொடுத்துள்ளமை தெரிய வந்துள்ளது என்று பொலிஸார் கூறினர்.

இந்தச்சம்பவம்தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# திருகோணமலையில் கல்வியியற் கல்லூரி

## ஆரம்ப கட்ட நடவடிக்கைகளில் கல்வி அமைச்சு

திருகோணமலை.ஜூன் 14
இலங்கையின் 18 ஆவது கல்வியியற் கல்லூரி விரைவில் திருகோணமலையில் அமைக்கப்படவுள்ளது.அதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகிறது என்று இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து சங்கம் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தக் கல்வியியற் கல்லூரி அமைக்கப்படவுள்ளமைகிழக்கு கல்வி வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். கிழக்கு மாவட்டங்களில் மட்டக்களப்பிலும், அம்பாறையிலும் ஏற்கனவே கல்வியியற் கல்லூரிகள் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்ற நிலையில், திருகோணமலையில் கல்வியியற் கல்லூரி அமைக்கப்படுவதற்கான வாய்ப்பு இப்போதுதான் ஏற்பட்டுள்ளது. இது கிழக்கு கல்விச் சமூகத்தால் பெரிதும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

> “ மூதூருக்கும் கிண்ணியாவுக்கும் இடையில் கல்வியியற் கல்லூரியை அமைக்க வேண்டும்.

இந்தப் புதிய கல்வியியற் கல்லூரி ஏ-15 நெடுஞ்சாலையில் மூதூருக்கும் கிண்ணியாவுக்கும் இடையில் அமைக்கப்பட வேண்டும் என்பது இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கையாகும்.

ஏனெனில் இந்தப் பிரதான வீதிக்கருகில் போதிய போக்குவரத்து வசதியும், தேவையான கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான விசாலமான அரச காணி மற்றும் இடவசதிகளும் உண்டு. அது மாத்திரமின்றி கிண்ணியாவுக்கும் மூதூருக்கும் இடைப்பட்ட இந்தப் பிரதேசம் கற்றல்.கற்பித்தலுக்கேற்ற அழகான சூழலையும் கொண்டுள்ளது.

அதனால் இந்தப் பிராந்தியத்தின் எதிர்கால இளம் சந்ததியர்களின் கல்வி நலன்கருதி இங்குள்ள அரசியல் மற்றும் கல்வி ஆர்வலர்கள் இதற்கு பூரண ஒத்தழைப்பு வழங்க வேண்டும்-என்றார். (ச-10)

## விபத்தில் வயோதிபர் உயிரிழப்பு

திருகோணமலை.ஜூன் 14
திருகோணமலை, புல்மோட்டை பிரதான வீதியில் இக்பால் நகர் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் வயோதிபரொருவர் உயிரிழந்துள்ளார் என்று குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் அல்லா பிச்சை செய்யது (வயது-71) என்ற உயிரிழந்துள்ளார்.

சைக்கிளில் வரும்போது, மோட்டார் சைக்கிளில் வந்த நபர் பின் புறமாக மோதியதில், அவர் படுகாயமடைந்துள்ளார். அதனையடுத்து அவர் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சை அளிக்கப்பட்டும் பயனளிக்காமல் அவர் உயிரிழந்துள்ளார். (ச)

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
16.10.1926

மறைவு
18.05.2011

அமரர் விஸ்வநாதி செல்லையா

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணம் வகுத்து
ஆற்றலோடு அறிவின் திறமைகள் தந்து
நன்மைகள் பலதிலும் நலமாய் நாம் வாழ
நாளும் பொழுதும் நம்மோடு வாழ்ந்து
எண்ணங்கள் ஈடேற வழிகள் காட்டி
எல்லாமும் எல்லாமாய் எமக்கென ஆக்கி
கண்ணை இமைகள் காப்பது போல
காலமும் பொழுதிலும் பெரிதாய் உவந்து
என்றென்றும் எம்மோடு வாழும் அப்பாவை
எண்ணியே மூவாண்டில் கண்ணீரில் நனைகின்றோம்.

குடும்பத்தினர்.

(45002)(45.5.3)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும்



அமரர் பொன்னையா யோசேப்

பிறப்பு
15.12.1940

இறப்பு
15.05.2014

கடந்த 15.05.2014 இறைவனடி சேர்ந்த பொன்னையா யோசேப் அவர்களின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், உதவி புரிந்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், வெளிநாட்டிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் தொலைபேசி, மின்னஞ்சல், தந்தி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (15.06.2014) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு
எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து
கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

லவின் இல்லம்,
ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(48834)(12.3.6)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 14
யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் 16 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.
எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர் உற்சவமும், மறுநாள் புதன்கிழமை தீர்த்த உற்சவமும் , மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளன. (க)

* * *

தென்மராட்சி, ஜூன் 14
சாவகச்சேரி பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வைகாசி விசாகப் பொங்கல் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. இரவு காத்தவராயன் திருக்கதைப் படிப்பும் இடம்பெறும். (க-9)

* * *

தென்மராட்சி, ஜூன் 14
சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாதர் சிவன் ஆலய பெருந் திருவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளது. அடுத்த மாதம் 3 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் , மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். திருவிழா கிரியைகள் சிவப் பிரம்மஸ்ரீ தியாக. உமாசுதக் குருக்கள் தலைமையில் இடம்பெறும். (க-9)

* * *

கோப்பாய், ஜூன் 14
கோப்பாய் தெற்கு அத்தித் தோட்டம் அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இன்றைய தினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகக் கிரியைகள் இடம்பெறவுள்ளன.
பிற்பகல் 2.30 மணியளவில் சங்காபிஷேக தின கலை நிகழ்ச்சிகளும், கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளன.
ஆலய பரிபாலன சபைத் தலைவர் நா.வே.தம்பியப்பா தலைமையில் இடம்பெறும். பிற்பகல் நிகழ்வுகளின்போது பாடசாலை அதிபரான திருமதி குமுதினி அசோக்குமார் கலந்து கொள்வார். (க)

# யாழ்ப்பாணம் - கொடிகாமம் இல.769 அரச பஸ் சீரில்லை

## இரவில் பயணிகள் திண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 14
யாழ்ப்பாணம் - கொடிகாமம் பணியில் ஈடுபடும் 769 ஆம் இலக்க இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் இரவு 8 மணிக்கு உரிய சேவையை வழங்குவதில்லை என்று பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.
அதிகமான தினங்களில் 8 மணிக்குரிய பஸ் சேவையில் ஈடுபடுவதில்லை. அதனால் பயணிகள் கொழும்பு செல்லும் பஸ்ஸில் அதிக கட்டணம் செலுத்திப் பயணிக்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அவர்கள் நிர்வாகத்தினர் மீது குற்றம் சுமத்துகின்றனர்.
யாழ்.பஸ் நிலையத்திலிருந்து ஏனைய அனைத்துப் பகுதிகளுக்கும் ஒவ்வொருநாளும் தவறாது இரவுநேரக் கடைசி பஸ் 8 மணிக்குப் புறப்படுகிறது. ஆனால் கொடிகாமத்துக்கான இறுதி பஸ் மாத்திரம் அடிக்கடி நிறுத்தப்படுகிறது. அதனால் தென்மராட்சிக்கு தமது வீடுகளுக்குச் செல்ல முடியாதவாறு பயணிகள் யாழ்.பஸ் நிலையத்தில் அவதிப்படுகின்றனர்.
எதற்காக கொடிகா மத்துக்கான இரவு நேர பஸ்ஸை அதிகாரிகள் அனுப்ப மறுத்து அக்கறையீனமாகச் செயற்படுகின்றனர்? கடந்த வருடத்தில் இருந்து இந்தப் பிரச்சினை தொடர்கிறது. எந்த அதிகாரிகளும் அதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. நாம் பலதடவை யாழ். பஸ் நிலையத்தில் இந்தப் பிரச்சினை தொடர்பில் எடுத்துக் கூறியுள்ளோம். இரவுநேர பஸ் தமக்கு சேவையில் ஈடுபடுத்தத் தவறும் பட்சத்தில் யாழ்.பஸ் நிலையத்தில் உள்ளவர்களிடம் விடயத்தை எடுத்துக்கூறி அவர்களுடன் முரண்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. ஆனால் உரிய அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.
அதுகுறித்து வட மாகாண முகாமையாளர் அஸ்கர் மற்றும் பிராந்திய அதிகாரி குலபாலச்செல்வம் ஆகியோருக்கு அறிவித்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
பஸ்ஸை அனுப்பாது கொழும்பு செல்லும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்ஸில் செல்லுமாறு கூறிவருகின்றனர். அதனால் உள்ளூர் பயணிகளான தாம் மட்டுமன்றி கொழும்பு செல்லும் பயணிகளும் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். தவிர கொழும்பு செல்லும் பஸ் நடத்துநர்களும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர். கொடிகாமம் வரையிலான பயணிகளை வேறுவழியின்றி தமது பஸ்ஸில் ஏற்றிச் செல்ல வேண்டிய நிலைக்கு கொழும்பு செல்லும் பஸ் நடத்துநர்கள் தள்ளப்பட்டுள்ளனர் என்று பஸ் நடத்துநர்களே கூறியுள்ளனர். எனவே இரவுநேர பஸ்ஸை தகுந்தமுறையில் சேவையில் ஈடுபடுத்துமாறு பயணிகள் கோருகின்றனர்.
இதுதொடர்பில் வட மாகாண முகாமையாளர் அஸ்கர் மற்றும் பிராந்திய முகாமை யாளர் குலபாலச்செல்வம் ஆகியோருடன் தொடர்பு கொண்ட போதும் அவர்களிடமிருந்து பதில் பெற முடியவில்லை. (வ-4)

## மோட்டர் திருட்டு

கொழும்புத்துறை 4 ஆம் குறுக்குப் பகுதியில் கிணற்றில் பொருத்தப்பட்டிருந்த மோட்டர் திருடர்களால் களவாடிச் செல்லப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் உள்ள வீதிகளுக்குப் போதிய மின் விளக்குகள் இல்லாததால் இரவு வேளையைப் பயன்படுத்தி மோட்டர் களவாடப்பட்டுள்ளது. (வ-135-17)

## நிர்வாக சேவைக்கு நியமனம்

சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலராக கடமையாற்றும் குமாரசாமி சிவானந்தன் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III க்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில் வழங்கப்பட்ட நியமனம் கடந்த செப்ரெம்பர் எட்டாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருமென அரச சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளர் டி.எஸ். எல்.சி.செனரத்ன அறிவித்துள்ளார். நியமனக் கடிதம் தனிச் சிங்களத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-9)

## எழுத்துத் தேர்வு பரீட்சை

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு இடையே நடத்தப்படும் போட்டிகளில் எழுத்துத் தேர்ச்சிப் பரீட்சை நாளை ஞாயிறு காலை 9 மணிக்கு அந்தந்த நிலையங்களில் நடைபெறவுள்ளது.
பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான எழுத்துத் தேர்வுப் பரீட்சை பளை மத்திய கல்லூரியில் நடைபெறு மென சங்க இணைப்பாளர் அ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (க-9)

## பண்ணாகம் கிராம பிரதான வீதி புனரமைப்பு

நீண்ட காலமாக போக்குவரத்து செய்ய முடியாமல் குன்றும் குழியுமாக இருந்து வந்த வழக்கம்பரை, பண்ணாகம் கிராம பிரதான வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது. சுழிபுரம் பிரதேச சபையின் நிதியைக் கொண்டு செப்பனிடும் வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. வேலைகள் யாவும் இந்த மாத நடுப் பகுதியில் நிறைவு பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
கிராம மக்கள் ஒரு குழுவை அமைத்து பிரதேச சபை உறுப்பினர் ச.கனகராயன் தலைமையில் வேலைகளைக் முன்னெடுத்து வருகின்றனர். (க-28)

## கலந்துரையாடல்

"ஜனாதிபதித் தேர்தலும் பொது வேட்பாளர் தெரிவும்" எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் அமைந்துள்ள தனியார் கல்வி நிறுவனத்தில் ஏ.சி. ஜோர்ச் தலைமையில் நடைபெறவுள்ளது. (க-51)

## மரண அறிவித்தல்

### அமிர்தலிங்கம் சுப்பிரமணியம் (சண்முகா ஐயா)

(முன்னாள் பிராந்திய முகாமையாளர், E.B.Creasy & Company Alcop Cey.Ltd)



மாதனை புலோலி வடக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், யாழ்.வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தலிங்கம் சுப்பிரமணியம் 09.06.2014 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம் - செல்லம்மா (அன்னமுத்து) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற தா.க.பொன்னுத்துரை மற்றும் இராசம்மா (கனடா) தம்பதியரின் அன்பு மருமகனும், அகிலாண்ட நாயகியின் பாசமிகு கணவரும், தவலிங்கம் (நோர்வே), சிறிலிங்கம், தயாபரி (மகளிர் அபிவிருத்தி உத்தி யோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்), ஜனார்த்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அருமைத் தந்தையும், விஜயகுமாரி (விஜி - நோர்வே), ரவீனா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், வரப்பிரகன், அகித்யா, ரேஷ்னி ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்றவர்களான பூலோகசுந்தரம், சிவஞானசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணேசலிங்கம் (பபு - கனடா), கனகலிங்கம் (சர்க்கரை - ஆஸ்திரேலியா), குமரலிங்கம் (குமரன் - லண்டன்), கேசவலிங்கம் (கேசவன் - கனடா), குணலிங்கம் (குணம் - நோர்வே), தனநாயகி (கனடா), சாந்தநாயகி (கனடா), சோதிநாயகி (லண்டன்), காலஞ்சென்ற சந்தனப்பிள்ளை, மண்டலநாயகி (லண்டன்), பத்மநாயகி (லண்டன்), டாக்டர் கிருபரன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், சுகிர்தா (அமெரிக்கா), சுஜாதா (லண்டன்), சிவகுமார் (லண்டன்), நந்தினி (நோர்வே), சதாலிங்கம் (நோர்வே), ரூபலிங்கம் (இலங்கை) ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.06.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப.10 மணியளவில் கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'அகிலகம்', 28/1, யாழ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3852 (வீடு),
077 573 7397 (ஜனா)
077 653 5784 (தயா)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

(48938)
(12.3.6)

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலக மகளிர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
திருமதி கி.தயாபரி
அவர்களின் அன்புத் தந்தை
அமிர்தலிங்கம் சுப்பிரமணியம்
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக்
கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
உத்தியோகத்தர்-நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம், நல்லூர்

(49019)
(12.3.6)

## மரண அறிவித்தல்

### சிவகுரு பாலச்சந்திரன்



அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வல்வெட்டியை வதிவிடமாகவும் கொண்டவரான சிவகுரு பாலச்சந்திரன் 10.06.2014 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - அன்னலட்சுமி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும், கமலாவதியின் அன்புக் கணவரும், கனகநாயகி (இந்தியா), விசாகேசன் (நோர்வே), பரமநாயகி (கனடா), காலஞ்சென்ற ஜெயராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், புஷ்பவதி, சரோஜா, இராஜேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.06.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஊறணி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செம்பிமா,
வல்வெட்டி.

தகவல்: குடும்பத்தினர்.
021 320 5219

(49016)
(12.3.6)

## வல்லப்பட்டையுடன் ஒருவர் மாட்டினார்

கொழும்பு.ஜூன் 14
ஓட்டோ ஒன்றின் வல்லப்பட்டை எடுத்துச் சென்ற நபர் ஒருவர் மொரவக்க, அக்குருஸ்ஸ வீதியின் எல்லைப் பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.
தெனியாய பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலைத் தொடர்ந்து மேற்கொண்ட தேடுதலின்போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.
கைது செய்யப்படும்போது சந்தேக நபரிடமிருந்து 23 கிலோ கிராம் வல்லப்பட்டை பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளது.
சந்தேகநபர் மாரவில பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச)

## கொழும்பில் இன்று நீர் விநியோகம் தடை

கொழும்பு.ஜூன் 14
கொழும்பின் பல பாகங்களுக்கும் இன்று சனிக்கிழமை தண்ணீர் விநியோகத் தடை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.
களனி, வத்தளை, ஹெந்தல, பியகம, மகர, பேலியகொட, தொம்பே மற்றும் ஜா-எல பிரதேசங்கள் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களுக்கு இந்த தண்ணீர் விநியோகம் தடைப்படுத்தப்படவுள்ளது.
இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரையான காலப்பகுதியில் இந்தப் பிரதேசங்களுக்கான நீர் விநியோகத் தடை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ச)

## வினாவிடைப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம்

கிளிநொச்சி, ஜூன் 14
கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியின் பவள விழாவை முன்னிட்டு பொது அறிவு வணிக வினாவிடைப் போட்டியும் நடத்தப்பட்டது.
அந்தப் போட்டி முடிவுகள் வருமாறு:-

**பொதுஅறிவு பிரிவு-I**
முதலாம் இடம் - ஜெ.அனோஜன் (கிளி/ இந்துக் கல்லூரி) , இரண்டாம் இடம் - சி.மிதுசா (கிளி/ பரந்தன் இந்து ம.வி.), வி.டிலக்சன் (கண்டாவளை ம.வி.)
பிரிவு - II
முதலாம் இடம் - ச.வில்லரசன் (கிளி/ பிரமந்தனாறு மகா வித்தியாலயம்), இரண்டாம் இடம் - கி.கிலாலினி - (கிளி /புனித திரேசா பெண்கள் கல்லூரி), மூன்றாம் இடம் - ச.சபீரா (கிளி /முருகானந்தாக் கல்லூரி).
பிரிவு - III
முதலாம் இடம் - க.பௌசிகன் (கிளி/முருகானந்தாக் கல்லூரி), க.அரிமர்த்தனா (கிளி / புனித திரேசா பெண்கள் கல்லூரி), ந.சுஸ்மிதா (கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி) ஆகியோர்-

**வணிக அறிவு வினாவிடை**
பிரிவு - I
முதலாம் இடம்- ர.யாழவன் (கிளி /முருகானந்தாக் கல்லூரி) , இ.மிரேசன் (கிளி / பிரமந்தனாறு மகா வித்தியாலயம் ). மூன்றாம் இடம்- த.எழில்வாணி (கிளி /இந்துக் கல்லூரி).
பிரிவு - II
முதலாம் இடம் - வீ.சுஜிதா (கிளி/ மத்திய கல்லூரி), இரண்டாம் இடம் - தெ.பிரவீனா (கிளி/முருகானந்தாக் கல்லூரி), மூன்றாம் இடம் - மு.கயல்விழி (கிளி/ மத்திய கல்லூரி). (ச-55)


### எமது குளங்களை நாம் ஆழமாக்குவோம்

நீர் வற்றிய காலத்தில் குளங்களை ஆழமாக்குவது அதனைச் சூழ வாழும் மக்களின் கடமை யாகும். எவருக்காகவும் காத்திராமல் அடுத்த மழை வரமுன் நாமாகவே முன்சென்று ஆழமாக்குவோம். உடனே செயலில் இறங்குவோம்.

ஞாயிறு மட்டும் சந்திக்கலாம். சகல நாட்பட்ட நோய்களுக்கும், வலிகள், வாதங்கள், Allergy ஆஸ்த்துமா, குழந்தை இன்மைக்கான சிறப்பு சிகிச்சைகள், முட்டை வளர்ச்சி, உயிரணு, கருக்கட்டல் குறைகள் நிவர்த்தி செய்யப்படும்.
சித்த வைத்தியர்:
Dr.R.Sivagurunathan
077 730 1669
சந்திப்பு இலவசம் (சி/14494) (7.6.3)

### புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
### புலோலி கிழக்கு, பருத்தித்துறை
### சேவிஸ் நிலையம் குத்தகைக்கு வழங்கல்

எமது சங்க சேவிஸ் நிலையம் குத்தகைக்கு வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விருப்பமுடையோர் மீளளிக்கத்தக்க வைப்புப் பணமாக ரூபா 1000.00 வைப்புச் செய்து இதற்கான விண்ணப்பத்தினை தலைமை அலுவலகத்தில் பெற்று, அதனைப் பூர்த்தி செய்து ஒரு கடித உறையினுள் வைத்து ஒட்டி 26.06.2014இற்கு முன்னர் பொது முகாமையாளர், புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை எனும் முகவரியிட்டு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.
முக்கிய குறிப்பு : கேள்வித் தொகை ரூபா 20000.00 (இருபதினாயிரம்) இற்கு மேற்பட்டதாக இருத்தல் அவசியமானது.
பொது முகாமையாளர், புலோலி ப.நோ.கூ.சங்கம்
புலோலி கிழக்கு, பருத்தித்துறை. (சி/14760) (7.6.3)

### அறைகள் நாள் வாடகைக்கு

ஒருவருக்கு 500/=, இருவர் 1000/= நால்வர் 2000/= (Attached Bathroom) Hotel Villa City
422, Galle Road, Wellawatte.
T.P : 072 255 2222 (சி/14493) (7.6.3)

### வேலையாள்கள் தேவை

புத்தகசாலை ஒன்றுக்கு (Book Shop) கணினி அறிவுடைய பெண் வேலைக்குத் தேவை. (நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவர்களும், வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களும் விரும்பத்தக்கது) (49023)(7.6.3)
தொடர்புகளுக்கு: 077 895 5378

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், திருநெல்வேலி 34/12 பரமேஸ்வராக் கல்லூரி ஒழுங்கையில் (தபால் பெட்டி ஒழுங்கை) கலைப் பீடத்துக்கு அருகில் 2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. (48893)(5.6.3)
தொடர்பு: 077 935 5410/0779 205 428


### மணமகள் தேவை

- 1982இல் பிறந்த 7இல் செவ்வாய் 59 பாவமுடைய அரச வங்கியில் பணிபுரியும் மணமகனுக்கு அரச பணிபுரியும் மணமகள் தேவை.
- 1986இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 17 பாவமுடைய BSc முடித்து கடல்தொழில் பரிசோதகராக பணிபுரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
- 1980இல் பிறந்த 12இல் செவ்வாய் 24 பாவமுடைய Computer Engineer (Software) மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 1985இல் பிறந்த 9இல் சூரியனும், செவ்வாயும் 11 பாவமுடைய அரச நிறுவனத்தில் பணி புரியும் மணமகனுக்கு அரச பணிபுரியும் மணமகள் தேவை.
- 1982இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 40 பாவமுடைய சைவபோசன டாக்டர் மணமகனுக்கு சைவபோசன டாக்டர், இஞ்சினியர், எக்கவுண்டன் மணமகள் தேவை.

தொடர்பு: காலக்கண்ணன் திருமண சேவை
இல. 62, இராமலிங்கர் வீதி,
பூங்கனிச்சோலையடி, முடமாவடி.
T.P : 077 607 0862 (49016)(7.6.3)


## துறவற வாழ்வில் பொன்விழாக் காணும் குருமணி

எங்கள் பங்கின் மைந்தன் அருட்பணி
**கிறிஸ்ரி கனகநாயகம் மனுவேற்பிள்ளை (அ.ம.தி) அடிகளார்**



தனது குருத்துவ வாழ்வின் முதல் அர்ப்பணத்தை 1964 வைகாசி மாதம் 31ஆம் திகதி ஏற்றுக் கொண்டு இறைவனின் குருவாக 1970 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 21ஆம் திகதி யாழ்ப்பாணம் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு எல்.ஆர் அன்ரனி ஆண்டகை அவர்களால் திருநிலைப்படுத்தப்பட்டார்.

அமலமரித் தியாகிகளின் மறையுரைஞனாக தனது பணியை ஆரம்பித்து யாழ்ப்பாணம், அனுராதபுரம், திருகோணமலை, கொழும்பு போன்ற மறை மாவட்டங்களில் பல பங்குத்தலங்களில் இறைபணியாற்றி நிறைந்த அனுபவங்களோடு விளங்கும் கிறிஸ்ரி அடிகளார் அனைத்து மக்களுடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகும் பண்பாளர்.இன்றும் எல்லா மக்களின் பாராட்டுக்குரியவர்.

. மறை அறிவின் உயர்கல்வியைக் கற்கவும், கற்பிக்கவும் அதன்வழி பணியாற்றவும் உலகின் பல நாடுகளுக்கு சென்று மிகுந்த ஆற்றலும், அனுபவமும் பெற்று நாடு திரும்பியதும் அமலமரித் தியாகிகளின் பல மனிதநேய அமைப்புக்களின் ஆத்மீக ஆலோசகராக செயற்பட்டவர். குறிப்பாக போர்க்கால சூழ்நிலையிலும் பல மாவட்டங்களுக்கும் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு விசேடமாக தமிழ் பேசும் மக்களுக்கு பல்துறை பணியாற்றி இறைநம்பிக்கையை ஊட்டிய நல்ல குரு. அமலமரித் தியாகிகளின் மூத்தகுரு. இதன் காரணங்களினால் கொழும்பு வாழ் தமிழ் கத்தோலிக்க மக்களின் ஆத்மீக குருவாக தலைமைப்பீடத்தினால் நியமனம் பெற்று தொடர்ந்தும் பல பங்குகளில் பாங்குடன் பணியாற்றி வருகின்றார்.

அமலமரித் தியாகிகளின் சபையைச் சார்ந்த பொன்விழாக் காணும் ஒன்பது குருக்களுடைய நன்றித் திருப்பலி 14.06.2014 கொழும்பு புனித மசனட் இல்ல சிற்றாலயத்தில் அமதிகளின் அதிசிரேஷ்டர் மேன்மை மிகு லூயி லோகன் (ரோம்) அவர்களின் தலைமையில் நடைபெறவிருக்கின்ற இந்த நல்வேளையில் எங்கள் பங்கு மைந்தனுக்கு எமது செபம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றோம்.

எல்லாப் புகழும் இறைவனுக்கே.

புனித திருமுழுக்கு யோவான் ஆலய பங்குமக்கள், நண்பர்கள்.
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (49007)(7.6.3)


### CEYLON THEATRES

இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




விசாரணை 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

# KINGS ELECTRONICS




| for PLASTIC | METAL |
|---|---|
| 5 W 230 /= | 5 W 300 /= |
| 7 W 280 /= | 7 W 400 /= |
| 9 W 360 /= | 9 W 600 /= |
| 3 W 180/= | |
| 12 W 420/= | |

4′ LED Tube Light
16W 1300 /=
Tube 4 feet 18 W
990/=

11A, Stanley Road, Jaffna.
T.P: 021 222 3857 (48512)(10.6.3)

### நாரந்தனை சைவ மகாசபையின் வருடாந்த பொதுக்கூட்டம் 15.06.2014

அம்பிகை அடியார்களே!
நிகழும் ஜய வருடம் ஆனித்திங்கள்
முதலாம் நாள் (15.06.2014) ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 10.00 மணியளவில்
தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய மண்டபத்தில் சபைத்தலைவர் வே.துரைராசா அவர்களின் தலைமையின் கீழ் மேற்படி கூட்டம் நடைபெற அம்பிகையின் அருள் கூடியுள்ளது.
அத்தருணம் சபை அங்கத்தவர்கள் அம்பிகை அடியார்கள் அனைவரும் வருகை தந்து பங்கு பற்றுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

சைவ மகாசபை, நாரந்தனை. (48949) (12.3.6)
சு.இராமலிங்கம், செயலாளர்.

# யாழ்.நகரின் சுகாதாரம் பேண மக்கள் ஒத்துழைப்பும் தேவை

## யாழ்.மாநகரசபை முதல்வர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ்.நகரின் சுகாதாரத்துக்கு தனியாக மாநகர சபை மட்டும் பொறுப்பேற்க முடியாது. இதற்கு வர்த்தகர்களும், பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்குவதன் ஊடாகவே நகரின் அழகையும் சுகாதாரத்தையும் பேண முடியும் என்று யாழ். மாநர சபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

யாழ்.காங்கேசன்துறை வீதியின் நடைமுறை சுகாதாரச் சீர்கேடுகள் குறித்து வர்த்தகர்களின் நடவடிக்கை தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கும் போது:-

"நகரில் குறிப்பாக காங்கேசன் துறை வீதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் இருந்து வெளியகற்றப்படும் கழிவு நீர் வெள்ளவாய்க்காலுக்கு விடப் படுகிறது. இதனால் சுகாதாரச் சீர்கேடுகள் இடம்பெறுகின்றன.

நகரை சுத்தமாக வைத்திருப்பதற்கு தனியாக மாநகர சபை மட்டும் பெறுப்பேற்க முடியாது. வர்த்தக நிலையங்களில் இருந்து வெளியகற்றப்படும் கழிவுநீர் வீதியின் வெள்ள வாய்க்காலில் விட முடியாது. தனியான நீர்த்தாங்கியை அமைத்து கழி வகற்றல் முறை மூலம் அந்தக் கழிவு நீரை வெளியகற்ற வேண்டும்.

வர்த்தக நிலையங்களின் வெளியகற்றப்படும் கழிவு, உணவு என்பன கழிவு நீருடன் வெளியகற்றப்படுகின்றன. இதனால் வெள்ள வாய்க்காலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. கழிவு நீர்க் குழாய்களில் தொடர்ச்சியாக உணவுகளுடன் மலக் கழிவுகளும் தேக்கமடைந்து நீர்வழிந்தோட முடியாத நிலையில் உள்ளது. தொழிலாளர்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் கடந்த காலங்களில் வெள்ளவாய்க்கால்கள் அடிக்கடி துப்புரவு செய்யப்படாமல் இருந்தன.

> ஒவவொரு ஆத னததுககும கழிவு தொட்டி அமைத்து அத னுடாக கழிவு நீரைச சேகரிதது பின்னா இயந்தி ரங்கள் ஊடாக வெளியகற்ற வேண்டும.

நகர அபிவிருத்தி சட்டத்தின்படி கழிவு அகற்றத்தக்க சுகாதார முறைப்படி கட்டட அனுமதி பெறப்படும்போது கழிவகற்றல் குழி அமைப்பதற்கும் சேர்த்தே அனுமதி வழங்கப்படுகிறது.

தற்போது வெள்ளவாய்க்கால்கள் அமைக்கப்பட்டிருப்பதால் அதனூடாக கழிவு நீரை அகற்றி வருகின்றனர். ஆனால் ஒவ்வொரு ஆதனத்துக்கும் கழிவு தொட்டி அமைத்து அதனூடாக கழிவு நீரைச் சேகரித்து பின்னர் இயந்திரங்கள் ஊடாக வெளியகற்ற வேண்டும். இதனை வர்த்தகர்களும் மக்களும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-14)

## பிரதேச சபைக்குரிய காணி குத்தகைக்கு

வலி.தென்மேற்கு, ஜூன் 14

கல்லுண்டாய் வீதியில் காக்கை தீவிலுள்ள வலி. தென்மேற்குப் பிரதேச சபைக்குச் சொந்தமான காணி மானிப்பாய் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கத்துக்கு குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது. இதற்கான தீர்மானம் வலி.தென் மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

காக்கைதீவிலுள்ள மேற்படி காணியில் அமைக்கப்பட்டிருந்த கொல்களம் போர்க் காலச் சூழ் நிலையைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினரின் அறிவுறுத்தலுக்கமைய மூடப்பட்டது.

பல வருடங்களாக எதுவித பயன்பாடுமின்றி இருக்கும் மேற்படி காணியை குத்தகை அடிப்படையில் வழங்குமாறு மானிப்பாய் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம் வலி.தென் மேற்குப் பிரதேச சபையைக் கோரியிருந்தது.

சங்கத்தின் கோரிக்கை குறித்து பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்ட பின்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அனுமதியுடன் அந்தக் காணியை மேற்படி சங்கத்துக்கு வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த காணியிலுள்ள கட்டடத்தில் கள்ளுத் தவறணை அமைக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (வ-115)

## துப்பாக்கி பாகங்கள் மீட்பு

பழுதடைந்த நிலையில் காணப்பட்ட ரி-56 ரக துப்பாக்கியின் உதிரிப்பாகங்கள் கொடிகாமம் பகுதியிலுள்ள பற்றைக்குள் கொடிகாமம் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டன.

இது தொடர்பாக பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.

கெற் பேலிப் பகுதியில் பழைய இரும்பு விற்பனை செய்யும் ஒருவர் கடந்த வெள்ளிக் கிழமை கொடுத்த தகவலை அடுத்து பற்றைக்குள் காணப்பட்ட துப்பாக்கி உபகரணங்களே இவ்வாறு மீட்கப்பட்டிருக்கலாம் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (வ-9)



பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயப் பெருவிழா சிறப்புற நடைபெற்றது. நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற நற்கருணைப் பவனி நேற்றுக் காலை யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்ட திருவிழாத் திருப்பலி நிகழ்வைக் காணலாம். (ஒ-135)

## காச நோய் அறிகுறிகள் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை நாடவும்

### தற்போதைய காலநிலை காரணமாக

தென்மராட்சி, ஜூன் 14

தற்போது நிலவும் கடும் வெப்பம், காற்று போன்ற கால நிலையால் காசநோய் வேகமாகப் பரவும் அபாயம் காணப்படுகிறது.

காசநோய் தொடர்பாக அறிகுறிகள் காணப்படின் உடனடியாக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் உள்ள சளிப் பரிசோதனை நிலையத்தில் பரிசோதனை களை மேற்கொள்ளுமாறு மருத்துவமனை விளம்பரப் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு முன்னாள் அதிகாரி மருத்துவர் சி.யமுனானந்தா எழுதிய 'காசநோய்' என்னும் புத்தகத்தில் காச நோய் ஏற்பட்டுள்ளமை தொடர்பான பண்பறிச் சுட்டிகள் புள்ளி விவரங்களுடன் வெளியிடப் பட்டுள்ளது.

ஒருவருக்கு காசநோய் ஏற்பட்டுள்ளமை குறித்து புத்தகத்தின் 72 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை இந்தப் பண் பறிச் சுட்டிகள் மூலம் அண்ணளவாக அறிந்து கொள்ள முடியும்.

அதன் விவரங்களும் புள்ளிகளும் வருமாறு:-

2 கிழமைக்கு மேல் தொடர்ச்சியாக இருமல் - 20,மாலை நேரக் காய்ச்சல் - 20, உடல் நிறையிழப்பு - 15, இருமலுடன் இரத்தம் வெளியேறல் - 10, உணவில் விருப்பமின்மை - 10, உறவினர் யாராவது ஒருவருக்கு, காச நோய் காணப் பட்டால் - 5, நண்பர்களுக்கு காசநோய் காணப்பட்டால் - 5, சுவாசிப்பதில் சிரமம் - 3, இரவில் வியர்த்தல் - 3 ,நெஞ்சில் நோ - 3, உடல் களைப்பு - 3, சலரோக நோய் காணப்படல் - 3 மொத்தம் = 100

பண்பறிச் சுட்டிகளின் மொத்தப் பெறுமதி 50 இற்கு மேல் காணப்படின் மார்பு நோய் சிகிச்சை நிலையத்துக்குச் சென்று கட்டாயம் சளிப் பரிசோதனை செய்ய வேண்டும். அவர்களுக்கு காச நோய் ஏற்பட்டுள்ளமைக்கான சாத்தியம் அதிகம். 3 கிழமைகளுக்கு மேல் இருமல் இருப்பின் சளிப் பரிசோதனை செய்தல் வேண்டும்.

இவ்வாறான அறிகுறிகள் காணப்படின் உடனடியாக சாவகச்சேரி ஆதார மருத்துவமனை சளிப்பரிசோதனை நிலையத்தில் சுயமாக பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும் செய்திக் குறிப்பில் வெளியிடப்பட்டுள்ளது. (வ-9)

# திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் கைது

## வல்வெட்டித்துறைப் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில்

யாழ்ப்பாணம், ஜூன் 14

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அண்மைக்காலமாக இடம்பெற்று வந்த திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இருவரை வல்வெட்டித்துறை பொலிஸார் கைது செய்தனர்.

கடந்த மூன்று தினங்களாக நடத்தப்பட்ட தீவிர தேடுதலிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் மேலும் பலரை வலை வீசி தேடி வருவதாகவும் வல்வெட்டித்துறை குற்றப் புலனாய்வுப்பிரிவினர்தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து பெருமளவு பொருள்களைக் கைப்பற்றி இருப்பதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது: -

வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, தொண்டமானாறு பகுதிகளில் மூன்று வீடுகளும் இரண்டு கடைகளும் அண்மைய நாள்களில் திருடப்பட்டிருந்தன. இது தொடர்பான முறைப்பாடுகளும் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

இந்நிலையில் இது குறித்த தேடுதலுக்காக காங்கேசன் துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரால் வல்வெட்டித்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பொலிஸாரை உள்ளடக்கி விசேட பொலிஸ் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

அந்தக்குழு அண்மைக் காலமாக திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பல்வேறு கோணங்களில் விசாரணையை முன்னெடுத்திருந்தது. இவ் விசாரணைகளின்போதே மேற்குறித்த இரு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது தொலைக்காட்சிகள், வீட்டு பாவனைப் பொருள்கள், கைத்தொலைபேசிகள் என்பன கைப்பற்றப்பட்டன. சந்தேக நபர் ஒருவர் சங்கானையைச் சேர்ந்தவர் என்றும் அவரை ஊர் காவற்றுறையிலும் மற்றையவர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர் என்றும் அவரை உடுப்பிட்டியில் வைத்தும் கைது செய்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.



கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் பொலிஸார்.

இதுதொடர்பான விசாரணைகள் தொடர்ந்து வருவதாகவும் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மேலும் பலரைத் தேடி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-109)



மன்னார், தள்ளாடி அந்தோனியார் ஆலயத்தில் வருடாந்த திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இருந்து மக்கள் புனித அந்தோனியாரின் வருடாந்த திருவிழாவில் கலந்துகொண்டனர். (ச)

# காஞ்சிபுரம் கிராமத்துக்கு குடிதண்ணீர் வழங்குங்கள்

கிளிநொச்சி,ஜூன் 14
கிளிநொச்சி, பரந்தனில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள குடிதண்ணீர் திட்டம் மூலம் பரந்தன், காஞ்சிபுரம் கிராம மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்க வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பரந்தன் குடிதண்ணீர் திட்டம் தண்ணீர் வசதி கொண்ட குமரபுரம் கிராமத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

எனவே குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொள்ளும் காஞ்சிபுரம் கிராமத்துக்கு குடி தண்ணீர் வசதி வழங்கப்பட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் தட்டுவன் கொட்டி, உமையாள்புரம் போன்ற கிராமங்களும் பரந்தன், காஞ்சிபுரம் கிராமமும் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-18)

# அடிப்படை வசதிகள் இன்றிய சந்தை

## வர்த்தகர்கள் விசனம்

முல்லைத்தீவு,ஜூன் 14
முல்லைத்தீவு, முள்ளியவளை பொதுச்சந்தை 44 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டபோதும், அதன் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. அதனால் பல சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது என்று வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

போரால் சேதமடைந்த முள்ளியவளை, பொதுச்சந்தை சுமார் 44 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு கடந்த ஏப்ரல் மாதம் திறந்து வைக்கப்பட்டது. எனினும் சந்தையில் அடிப்படை வசதிகள் எவையும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்று வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

எனவே இந்தச் சந்தைக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-55)

# எரிபொருள் நிலையத்தில் மண்ணெண்ணெய் இல்லை

## துணுக்காய் மக்கள் திண்டாட்டம்

துணுக்காய்,ஜூன் 14
மல்லாவி, துணுக்காய்ப் பிரதேசத்தில் 25 நாள்களுக்கு மேலாக மண்ணெண்ணெய்யைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்று மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மல்லாவி, துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிலையத்தில் பெற்றோல், டீசல் என்பவற்றைப் பெறக் கூடியதாகவுள் ளது.

எனினும் இந்த நிலையத்தில் மண்ணெண்ணெய் 25 நாள்களுக்கு மேலாக இல்லாத நிலை காணப்படுகின்றது என்று மக்கள் கூறினர்.

மண்ணெண்ணெய் வாங்குவதற்காக 5 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மாந்தை கிழக்கு ஒட்டறுத்த குளம் எரிபொருள் நிலையத்துக்கோ அல்லது 20 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மாங்குளம் எரிபொருள் நிலையத்துக்கோ சென்று வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று மக்கள் கவலை தெரிவித் தனர்.

> மண்ணெண்ணெய் வாங்க 20 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள மாங்குளம் எரிபொருள் நிலையத்துக்கு செல்ல வேண்டிய நிலை.

மல்லாவி, துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் எரிபொருள் நிலையம் இயங்குவதால் 6 கிலோ மீற்றர் சுற்றாடலில் மண்ணெண்ணெய்யை எவரும் விற்பனை செய்யக் கூடாது என்று துணுக்காய்ப் பிரதேச சபை அறிவித்துள்ளது. அதனால் குறித்த எரிபொருள் நிலையத்தில் மண்ணெண்ணெய் இல்லாததால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று மக்கள் கூறினர்.

இதேவேளை இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யும் இயந்திரம் பழுதடைந்து விட்டது என்று துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் த.பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

கண்டியில் இருந்து வருகை தந்த தொழில்நுட்பவியலாளர்கள் இயந்திரத்தை திருத்தியுள்ளதையடுத்தே இன்று சனிக்கிழமை முதல் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார். (ச-18)

# சடலம் மீட்பு

கிளிநொச்சி,ஜூன் 14
கிளிநொச்சி பகுதியில் முதியவர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மீட்கப்பட்டது.

இந்தச் சடலம் கிளிநொச்சி, செல்வாநகர் யூதா கோயிலுக்கு அருகில் மீட்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் விக்னேஸ்வரன் (வயது- 65) என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது என்று பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-18-426)

# இயந்திரம் திருட்டு

முல்லைத்தீவு,ஜூன் 14
முல்லைத்தீவு, உடையார்கட்டுப் பகுதியில் கிணற்றில் இருந்து நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று திருடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, உடையார்கட்டு தெற்கு, குரவில் பகுதியில் வீட்டுக் கிணற்றடியில் பொருத்தப்பட்டிருந்த சுமார் முப்பதாயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

உடையார்கட்டு தெற்கு, குரவில் பகுதியைச் சேர்ந்த எஸ்.கேதீஸ்வரன் என்பவரது நீர் இறைக்கும் இயந்திரமே இவ்வாறு திருடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-55)

# நிரந்தர நியமனம்

வவுனியா, ஜூன் 14
வவுனியா, செட்டிகுளம் பிரதேச சபையில் அட்டவணைப்படுத்தப்படாத ஆளணியினருக்கான நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை பிரதேச சபையின் தலைவர் க.அந்தோனிஐயா தலைமையில் நடைபெற்றது.

பிரதேச சபையில் 2009 ஆம் ஆண்டு முதல் மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு பணியாற்றியமை உட்பட்ட 16 பேருக்கு இந்த நியமனம் வழங் கப்பட்டது என்று செட்டிகுளம் பிரதேச சபை தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், வர்த்தக கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், ந.சிவசக்தி ஆனந்தன், வினோநோக ராதலிங்கம், எம். பாருக், வடமாகாண சபை உறுப்பினர்கள் செட்டிகுள பிரதேச உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச-402)

# போட்டிக்கு சென்ற மாணவிகளுக்கு தங்குமிட வசதிக்கு ஏற்பாடு இல்லை

## பொறுப்பாசிரியரும் அனுப்பப்படவில்லை

கிளிநொச்சி,ஜூன் 14
முல்லைத்தீவு மாங்குளம் மகா வித்தியாலயத்திலிருந்து பூப்பந்தாட்டப் போட்டிக்குச் சென்ற ஐந்து மாணவிகள் தங்குவதற்கு இட வசதியை பாடசாலை நிர்வாகம் செய்து கொடுக்கவில்லை என்று பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாகாண மட்ட பூப்பந்தாட்ட போட்டிக்கு மாங்குளம் மகா வித்தியாலயத்தில் இருந்து ஐந்து மாண விகள், கடமை முடிந்து யாழ்ப்பாணம் சென்ற ஆசிரியை ஒருவருடன் சென்றிருந்தனர். குறித்த ஆசிரியை தமது வீட்டுக்குச் சென்றுவிட்டார். ஆனால் மாணவிகளுக்கு உதவியாக-பாதுகாப்பாக எந்தவொரு ஆசிரியையும் பாடசாலை நிர்வாகத்தால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. மாணவிகள் தங்குவதற்கு எந்தவித ஒழுங்கும் செய்யப்பட்டிருக்கவும்வில்லை.

தங்களுக்கு ஏற்பட்டுள்ள நிர்க்கதி நிலை குறித்து மாணவிகள் மாங்குளத்தில் உள்ள பெற்றோருக்கு தொலைபேசியில் தகவல் கொடுத்தனர்.

அதனையடுத்து மாணவிகள் பாதுகாப்பாக தங்குவதற்கான இடத்தைப் பெற்றோர் ஒழுங்கு செய்து கொடுத்துள்ளனர்.

பாடசாலை அதிபர் மாணவிகளுடன் பொறுப்பாசிரியை ஒருவரை அனுப்பவில்லை என்று பெற்றோர் விசனம் தெரிவித்தனர்.

இதேவேளை பாடசாலை அதிபர் மாணவிகளுடன் பொறுப்பாசிரியர் ஒருவரை அனுப்பாதமை, யாழ்ப்பாணத்தில் மாணவிகள் தங்குவதற்கான இடத்தை ஒழுங்கு செய்யாமை ஆகிய சம்பவங்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி லூட்ஸ் மாலினி வெனிற்றன் தெரிவித்தார். (ச-18-500)

# வீட்டுத் திட்ட மக்களுக்கு தகரங்கள்

வவுனியா, கோவில்குளம் இளைஞர் கழகத்தால் பாலமோட்டை வீட்டுத் திட்ட மக்களுக்கு தகரங்கள் வழங்கப்பட்டன.

ஆஸ்திரேலியாவில் வாழும் புலம்பெயர் சமூக ஆர்வலர்களான மேகலா விக்னேஸ்வரன், எஸ்.முகுந்தன் ஆகியோரின் பங்களிப்பில் இந்தத் தகரங்கள் வழங்கப்பட்டன என்று கோவில்குளம் இளைஞர் கழகம் தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வில் சமூக சேவையாளர் க.சந்திரகுலசிங்கம், கோவில்குளம் இளைஞர்கழக இணைப்பாளர் எஸ்.காண்டீபன் உட்பட்ட பலர் கலந்து கொண்டனர். (ச-402)

# திருடி வெட்டப்பட்டன நான்கு பசு மாடுகள்

துணுக்காய்,ஜூன் 14
துணுக்காய், திருநகர் கிராமத்திலிருந்து மாந்தை கிழக்கு பகுதிக்கு மேய்ச்சலுக்கு சென்ற நான்கு பசு மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளன என்று மல்லாவிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கரும்புள்ளியான் குளப்பகுதியில் வைத்து இந்த நான்கு பசு மாடுகளும் திருட்டாக வெட்டப்பட்டுள்ளன என்று உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

மாந்தை கிழக்கு, துணுக்காய் பகுதிகளில் சட்டவிரோதமாக மாடுகளை வெட்டும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று மக்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவங்களை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-18)

# தனியார் வீடொன்றில் இயங்கும் தபாலகம்

## அடிப்படை வசதிகள் எதுவுமின்றி

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதான தபாலகம் தொடர்ந்தும் தனியார் வீடொன்றில் சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதான தபாலகம் கோம்பாவில் பகுதியில் உள்ள தனியார் வீடொன்றில் நீண்ட காலமாக இயங்கி வருகின்றது.

இந்தத் தபாலகம் போதிய அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருவதனால் இங்கு சேவை பெறச் செல்வோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

போரின் பின்னரான மீள் குடியமர்வையடுத்து நான்கு ஆண்டுகள் கடந்தும் குறித்த தபாலகம் தனியார் வீடொன்றில் தொடர்ந்தும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-55)

# ஆழ்ந்த நித்திரையால் அதிகரிக்கும் நினைவாற்றல்



ஆழ்ந்த நித்திரை உடல் நலத்துக்குச் சிறந்தது என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. ஆழ்ந்த நித்திரையால் நினைவாற்றல் மற்றும் கற்றல் ஆற்றல்கள் அதிகரிப்பதாக அண்மைய ஆய்வு முடிவுகளில் தெரிய வந்துள்ளது.

ஆழ்ந்த நித்திரை தொடர்பாக எலிகளிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில், ஆழ்ந்து தூங்கிய எலிகள் பயிற்சிகளை மிக எளிதாக கற்றுக் கொண்டுள்ளன.


அதனடிப்படையில் ஆழ்ந்து தூங்கும் மனிதர்களின் நினைவாற்றலும், கல்வி அறிவும் அதிகரிக்கும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

ஆழ்ந்த தூக்கம் காரணமாக நியூரோன்களுக்கு இடையில் புதிய இணைப்பு ஏற்பட்டு அதன் மூலம் நினைவாற்றல் தூண்டப்படுகிறது என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே குழந்தைகள் மட்டுமின்றி பெரியவர்களும் நன்றாக உறங்குவதன் ஊடாக நினைவாற்றல்களை அதிகரித்துக் கொள்ள முடியும்.

> ஆழ்ந்து தூங்கும் மனிதர்களின் நினைவாற்றலும், கல்வி அறிவும் அதிகரிக்கும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

# மீன்களுக்கு மது கொடுத்தால் வேகமாக நீந்தும்



மனிதர்கள் உட்கொள்ளும் மதுவை மீன்களுக்கு கொடுத்தால் என்ன ஆகும் என்று விஞ்ஞானிகள் புதிய ஆய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

மீன்களுக்கு மது கொடுக்கும்போது அவை வேகமாக நீந்துகின்றன என்று ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நியூயோர்க் உள்ள பாலிடெக்னிக் ஸ்கூல் ஆஃப் என்ஜினியரிங்கைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மீன்களை வைத்து புதிய ஆராய்ச்சியை மேற்கொண்டனர்.

அவர்கள் மீன்களில் வரிக்குதிரை மீன் வகையை தங்கள் ஆராய்ச்சிக்குத் தெரிவு செய்தனர். அந்த மீன் ஒன்றுக்கு மது கொடுத்து அதை தண்ணீரில் விட்டனர். மது அருந்திய பின்னர் அந்த மீன் வழக்கத்தை விட வேகமாக நீந்தியது. அதை பார்த்த மற்ற மீன்களும் வேகமாக நீந்தின. இந்த ஆய்வு மூலம் புதிய மருத்துவ சிகிச்சை முறைகளைக் கண்டறியலாம் என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

CMYK

# நாய்களுக்கு நீச்சல் தடாகம்

> ஸ்பெயின் போன்ற நாடுகளில் அதிக வெப்ப காலத்தில் மனிதர்கள் நீராடுவதையே விரும்புகின்றனர். அதே போல நாய்களும் விரும்பும். தற்போது வடிவமைத்துள்ள இந்த நீச்சல் தடாகம் நாய்களுக்கு மிகவும் பிடித்தமானவை.



நாய்களுக்கான நீச்சல் தடாகமொன்று ஸ்பெனிஷ் நகரத்தில் உள்ள ஹோட்டலொன்றில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ரொகே டெல் வெலாஸ் நகரில் உள்ள கெனியன் கென் ஜென் என்னும் ஹோட்டல் ஒன்றிலேயே இவ்வாறானதொரு நீச்சல் தடாகம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அனைத்து இன நாய்களுக்கும் ஏற்ற வகையில் இந்தத் தடாகம் அமைக்கப்பட்டுள்ளது. அதே போன்று நாய்கள் சறுக்கி விளையாடுவதற்கென்றொரு இடமும் அமைக்கப்பட்டுள்ளது.

நான் ஒரு நீச்சல் தடாகம் ஒன்றில் மனிதர்களுடன் நாய்களும் சேர்ந்து நீராடுவதைக் கண்டேன். அப்போதுதான் எனக்கு இவ்வாறானதொரு எண்ணம் தோன்றியது: மனிதர்களுடன் நாய்கள் நீராடுவதைவிட நாய்களுக்கென்று தனியொரு நீச்சல் தடாகம் இருந்தால் நன்றாக இருக்கும் என்று ஹோட்டல் முகாமையாளர் தெரிவித்தார்.

அதேபோன்று ஸ்பெயின் போன்ற நாடுகளில் அதிக வெப்ப காலத்தில் மனிதர்கள் நீராடுவதையே விரும்புகின்றனர். அதே போல நாய்களும் விரும்பும்.

தற்போது வடிவமைத்துள்ள இந்த நீச்சல் தடாகம் நாய்களுக்கு மிகவும் பிடித்தமானவை. ஏனெனில் கடற்கரையைப் போலவே இது அமைக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.



# உடல் ஆரோக்கியத்தை காட்டிக் கொடுக்கும் கைப்பட்டி

ஸ்மார்ட் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனாக தற்போது உடல் ஆரோக்கியத்தை பேண உதவும் பல்வேறு இலத் திரனியல் சாதனங்கள் அறிமுகமாகிக் கொண்டிருக்கின்றன.

இவற்றின் தொடர்ச்சியாக மற்றுமொரு இலத்திரனியல் கைப்பட்டியை அறிமுகம் செய்யவுள்ளது.

பீட்டா பதிப்பாக எதிர்வரும் ஜூலை மாதம் 10 ஆம் திகதி இந்தச் சாதனம் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

> இவற்றின் தொடர்ச்சியாக மற்றுமொரு இலத்திரனியல்கைப் பட்டியை அறிமுகம் செய்யவுள்ளது.





# மாரடைப்பைக் குறைக்கும் திராட்சை

> ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மன்னர்கள் முதல் கடைசி குடிமகன் வரை பருகி அனுபவித்த பழரசம் கூட திராட்சையாகத்தான் இருந்தது.

பழங்களில் இனிப்புத் தன்மையைக் கொண்டுள்ள திராட்சை சுவையை மட்டுமல்ல, அதனுள் மருந்துத் தன்மையையும் அதிகமாக தக்கவைத்துள்ளது.

தற்போது உள்ள காலகட்டம் மட்டும் நாம் இதை பயன்படுத்தவில்லை. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மன்னர்கள் முதல் கடைசி குடிமகன் வரை பருகி அனுபவித்த பழரசம்கூட திராட்சையாகத்தான் இருந்தது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அதிகமாக திராட்சை பயன்படுத்துகின்றனர். முக்கியமாக பிரான்ஸில் நாற்பது ஆண்டுகளாக திராட்சை விதைகளின் முக்கியத்துவத்தை அறிந்து அதை பயன்பாட்டில் வைத்துள்ளனர்.

உலகில் மாரடைப்பு நோய் குறைவாக உள்ள நாடு பிரான்ஸ்என்று ஆய்வுச்செய்திகள் கூறுகின்றன. அதற்குக் காரணம் திராட்சைப் பழத்தின் ஒயினை அவர்கள் அதிகம் பயன்படுத்துவது என்பதும் தெரிய வந்துள்ளது.

காய்ந்த திராட்சையை பசும்பாலில் ஊற வைத்து குழந்தைகளுக்கு குடிக்கக் கொடுங்கள். இது குழந்தைகளின் தசை வளர்ச்சியை சீராக்குவதுடன் எலும்புகளையும் வலுப்படுத்தும். மேலும் சளி, இருமல் இருந்தால் அதையும் நீக்கும்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பலியிடலுக்கு எதிராகவல்ல கொல்லாமைக்கு ஆதரவாக அணி திரளவேண்டும் மானிடம்

கடவுளின் பெயரால் உயிர்ப் பலியிடலை நிறுத்துங்கள் என்று கேட்டு ஒரு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. ஆலயங்களில் கடா, சேவல் பலியிடலைத் தடுத்து நிறுத்தும் நோக்கோடு இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டிருக்கிறது.

ஒரே மதம் சார்ந்தவர்களின் இரு பிரிவினருக்கு இடையே ஏற்பட்டுள்ள இந்த மோதல் நன்மையையே விளைவிக்க வேண்டும் என்பது எமது விருப்பம். ஆனாலும், இந்தப் போராட்டத்துக்கு முன்மொழியப்பட்டுள்ள வள்ளுவர் குரல் கவனத்தை ஈர்க்கிறது.

"நல்லாறு எனப்படுவது யாதெனின்; யாதொன்றும் கொல்லாமை சூழும் நெறி" என்கிறது அந்தக் குறள். இதற்குப் பொழிப்புரை எழுதிய மு.வரதராசனார் "நல்ல வழிகள் என்று அறநூல்களில் சொல்லப்படுவது எது என்றால், எந்த உயிரையும் கொல்லாத அறத்தைப் போற்றும் நெறியாகும்" என்று சொல்கிறார். சண் தொலைக்காட்சி புகழ் பேராசிரியர் சாலமன் பாப்பையா சொல்லும்போது, "நல்ல வழி எது என்றால் எந்த உயிரையும் கொல்லாமல் அறம் காக்கும் வழிதான்" என்கிறார்.

அதாவது, இந்த உலகில் உள்ள எந்த ஒன்றையும் - அது உயிராகட்டும் சடமாகட்டும் - கொல்லாதீர்கள்; அதனதனை அதனதன் பாட்டில் இருக்க விடுங்கள் என்றுதான் பொய்யாமொழிப் புலவன் வள்ளுவன் சொல்லியிருக்கிறான். அப்படி இருக்கையில் ஆலயத்தில் மட்டும் கொல்லாதீர்கள் என்று கேட்பதில் என்ன ஒரு நியாயம் இருக்க முடியும்?

பலியிடலுக்கு எதிரான இந்தப் போராட்டம் உண்மையில் கொல்லாமைக்கான போராட்டமாக அல்லவா இருந்திருக்க வேண்டும்! அப்படி இல்லாமல் போனதற்கு என்ன காரணம்? ஆலயத்தில் பலியிடக்கூடாது என்றால், வெளியிடங்களில் பலியிடலாமா? இறைச்சிக்காக மட்டும் கொல்லலாமா? உணவுக்காக மட்டும் வளர்த்து வளர்த்துக் கொல்லலாமா? இவை எல்லாம் தர்மமாக, ஆலயத்தில் கொல்வது மட்டும்தான் அதர்மமாகுமா?

இதைத்தானே ஆலயத்தில் பலியிடுபவர்களும் எதிர்க்கேள்வியாகக் கேட்கிறார்கள். காணி வாங்கிக் கட்டடம் அமைத்து, கொல்வதைக் கண்காணிக்க சுகாதார அதிகாரிகளையும் நியமித்து, கொல்களம் என்று அதற்குப் பெயரும் வைத்து, வெட்டிய இறைச்சியை விற்பனை செய்வதற்கு கடைகளையும் அமைத்துக் கொடுத்து, வருடாவருடம் அதனை ஏலத்தில் விட்டு வருமானமும் ஈட்டிக் கொண்டிருக்கையில் மறுபக்கத்தில் ஆலயங்களில் மட்டும் பலியிடலை நிறுத்து என்று கேட்பது நியாயம் இல்லைத்தானே!

வள்ளுவனும் அப்படிச் சொல்லவே இல்லை என்றபோதில் ஆலயத்தில் பலியிடலை நிறுத்த அவன் குறளை துணைக்கு அழைப்பது பொருத்தமானதல்லவே!

எது எப்படியிருந்தாலும் இன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பலியிடலுக்கு எதிரான போராட்டம் அதனுடனேயே மட்டுப்பட்டுவிடக்கூடாது. கொல்லாமைக்கான போராட்டமாக அது மாறவேண்டும். இதுவரை கொல்லப்பட்டமைக்கான நீதி கேட்பதற்கும் இத்தகு போராட்டக்காரர்கள் குறைந்தபட்சக் குரலையாவது பகிரங்கமாகக் கொடுக்க முன்வரவேண்டும். அப்போதுதான் பலியிடல் என்பதும் முடிவுக்கு வரும்.

அதைவிடுத்து ஒரு புறத்தில், உணவுக்காகவும் உருசிக்காகவும் வெட்டிக் கொன்று குவித்தபடி பலியிடலை மட்டும் நிறுத்துங்கள் என்று குரல்கொடுப்பதில் பயனேதும் இல்லை. அனைவரும் திரண்டு கொல்லாமையை வலியுறுத்துவோம். அதையே ஒரு பேரியக்கமாக முன்னெடுத்து, வெற்றி காணுவோம். நீதியை நிலை நாட்டுவோம்!

# விசாரணையைத் தவிர்ப்பதற்கு நாடாளுமன்றத்தில் தீர்மானம்

## இலங்கையின் யுக்தி வேலை செய்யுமா?

சேரலாதன்

சர்வதேச விசாரணைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு இலங்கை பல்வேறு உத்திகளைக் கையாண்டு வருவது புதியதொரு விடயமல்ல. இறுதியாக நாடாளுமன்றத்தின் உதவியும் கோரப்பட்டுள்ளது. இந்த நாட்டில் நாடாளுமன்றத்துக்கு வழாங்கப்பட்டுள்ள மதிப்பும், கௌரவமும் என்ன என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை. நிறைவேற்று அதிகாரம் என்ற சுனாமியில் சிக்குண்டு இவையெல்லாம் எப்போதோ காணாமற்போய் விட்டன. தேவையேற்படும்போது தான் நாடாளுமன்றத்தின் உதவி கோரப்படும். ஏனைய் வேளைகளில் எவராலும் நாடப்படாத ஒரு மன்றமாகவே நாடாளுமன்றம் திகழ்கின்றது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட நாடாளுமன்றம் ஜனநாயகத்தின் காவலனாகவே மதிக்கப்படுகின்றது. ஆனால் எமது நாட்டிலோ ஜனநாயக மரபுகளை கூட்டல் அடிப்படையில் குழி தோண்டிப் புதைக்கும் ஓர் இடமாக நாடாளுமன்றம் மாற்றியமைக்கப்பட்டுள்ளதை ஒரு போதுமே ஏற்றுக் கொள்ள முடியாது. இதற்கு முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைக் குறிப்பிட முடியும். பெரும்பான்மை பலம் இருக்கின்றது என்பதால் ஆளும் தரப்பினர் எத்தகையதொரு தீர்மானத்தையும் இலகுவாக நிறைவேற்றி விடக்கூடியதொரு நிலை எமது நாட்டின் நாடாளுமன்றத்தில் காணப்படுகின்றது. தீர்மானத்தின் நோக்கம் பற்றியதாகவோ, தீர்மானத்துடன் சம்பந்தப்பட்டவர் தொடர்பாகவோ ஆராய்ந்து பார்க்கும் நிலையும் இங்கில்லை. சரியோ தவறோ மேலிடத்தின் உத்தரவை நிறைவேற்றுவதிலேயே நாடாளுமன்றம் கண்ணும் கருத்துமாக விளங்குகின்றது. இது ஜனநாயகத்துக்கு ஏற்பட்டதொரு பெரிய சாபம் என்றே குறிப்பிட வேண்டும்.

குற்றம் இழைக்காத எவரும் எத்தகையதொரு விசாரணை தொடர்பாகவும் அஞ்சத் தேவையில்லை. துணிவாக முகங்கொடுத்து தாம் நிரபராதி என்பதை நிரூபிக்க வேண்டும். இலங்கையில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் முதலில் இதைத்தான் செய்ய வேண்டும். ஆனால் செய்வதில்லை. மாறாக விசாரணைகள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கே முனைந்து செயற்படுகின்றனர். விசாரணைகள் இலங்கையில் இடம்பெறுவதற்கு அனுமதிக்கமாட்டோம் எனச் சூளுரைக்கும் இவர்கள் இதற்குள் நாடாளுமன்றத்தையும் இழுத்து விட்டுள்ளனர்.

இந்த நாட்டின் சட்ட ஆட்சியை வலுப்படுத்தும், சட்டங்களை இயற்றும் வல்லமை நாடாளுமன்றத்துக்கு உள்ள போதிலும் இந்தச் சட்டங்களையெல்லாம் குப்பைக் கூடைக்குள் தூக்கி வீசக்கூடிய நிறைவேற்று அதிகாரமும் இங்குதான் உள்ளது. நாடாளுமன்றத்தை இரண்டாம் பட்சமாக்கியதும் இந்த நிறைவேற்று அதிகாரம்தான். இந்த நிலையில் நாடாளுமன்றத்தைத் தாங்கள் மதிப் பது போன்று வெளியுலகுக்குக் காண்பிக்கும் ஒரு தந்திரத்தின் அங்கமாகவே விசாரணைகள் தொடர்பான தீர்மானம் அங்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானம் பெரும்பான்மையான அங்கத்துவ நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அதனை ஏற்றுக் கொண்டு விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு நல்குவதே இலங்கை போன்ற நாடு ஒன்றுக்குப் பொருத்தமாக இருக்கும். இதை விடுத்து தீர்மானம் நிறைவேற்றப்படாமல் இருப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதும், விசாரணைகளுக்குத் தேவையான நிதியைக் கிடைக்க விடாது தடுப்பதும், தற்போது விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க மாட்டோம் என அடம்பிடிப்பதும் இலங்கை மீதான சந்தேகங்கள் அதிகரித்துச் செல்லவே வழிவகுக்கும்.

> இந்த நாட்டின் சட்ட ஆட்சியை வலுப்படுத்தும் சட்டங்களை இயற்றும் வல்லமை நாடாளுமன்றத்துக்கு உள்ள போதிலும் இந்தச் சட்டங்களையெல்லாம் குப்பைக் கூடைக்குள் தூக்கி வீசக்கூடிய நிறைவேற்று அதிகாரமும் இங்கு தான் உள்ளது. நாடாளுமன்றத்தை இரண்டாம் பட்சமாக்கியதும் இந்த நிறைவேற்று அதிகாரம்தான்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதாகக் குற்றஞ் சுமத்தப்படுவது தொடர்பாக அரசு தரப்பினர் இன்றுவரை மறுப்புத் தெரிவித்தே வருகின்றனர்.

பொதுமக்களுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாத வண்ணம் மிகக் கவனமாக அந்த மனிதாபிமானப் போரைத் தாம் நடத்தியதாகவும் அவர்கள் கூறுகின்றனர். ஆனால் இறுதிப் போரின்போது இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான காணொலிகள் வெளிவரத் தொடங்கிய பின்னர் உண்மை நிலையை சர்வதேச சமூகம் அறிந்து கொண்டுள்ளது. ஆகவேதான் இலங்கை மீதான சர்வதேச விசாரணையை அது வலியுறுத்தி நிற்கின்றது. ஆனால் பெரும்பான்மை மக்களின் பலத்தைத் திரட்டி இவற்றையெல்லாம் முறியடித்து விட லாமென இலங்கையின் ஆட்சியாளர்கள் கனவு காண்பதில் ஈடுபட்டுள்ளனர்.



இந்த நிலையில் இந்தியாவின் புதிய பிரதமரான நரேந்திர மோடி இலங்கை விடயத்தில் எடுத்து வரும் சில அதிரடி நடவடிக்கைகள் இங்குள்ள சிலரின் வயிற்றில் புளியைக் கரைத்து வருகின்றது.

முன்னாள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை ஏமாற்றிக் காலத்தைக் கடத்தியதைப் போன்று மோடியிடம் நடந்து கொள்ள முடியாதென்பதும் அவர்களுக்குத் தெரியும். இதனால் தான் மோடிக்கு எதிரான போராட்டங்கள் தலைநகர் கொழும்பில் இடம் பெற்றுள்ளன. மோடியும் இலங்கையின் சுயரூபத்தை இப்போது தெரிந்து கொண்டிருப்பார்.

ஆகவே அவரது செயற்பாடுகளிலும் புதியதொரு உத்வேகத்தை எதிர்காலத்தில் காணமுடியும்.

இலங்கையின் இனப் பிரச்சினை இடியப்பச் சிக்கலாக மாறியமைக்கு எமது அண்டை நாடான இந்தியாவே முக்கிய காரணமென்பதை எவரும் ஏற்றுக் கொள்வார்கள். புலிகளுக்குத் தஞ்சம் அளித்து, பயிற்சி வழங்கி, ஆயுதங்களையும் கொடுத்தது இந்தியாதான். இறுதியில் இலங்கைத் தமிழர்களை நட்டாற்றில் தள்ளிவிட்டதும் இந்தியா தான். இந்த நிலையில் எந்த விடயத்தையும் தீர்க்கமாக அணுகும் திறமை வாய்ந்த மோடி இலங்கை தொடர்பாக ஒரு தீர்மானத்தை எடுத்திருப்பாரென்பதில் ஐயமில்லை. ஆகவேதான் ஜனாதிபதி மஹிந்தருடனான முதல் சந்திப்பிலேயே இலங்கை அரசால் கிடப்பில் போடப்பட்ட விடயங்கள் தொடர்பாக பிரஸ்தாபித்ததுடன் அவை தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கு மாறும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார். இது தர்மசங்கடமானதொரு நிலையை இலங்கை ஜனாதிபதிக்கு ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் சர்வதேச விசாரணை என்ற பொறிக்குள் சிக்கிக் கொண்ட இலங்கை, இந்தியாவின் பகைமையையும் சம்பாதித்துக் கொள்ளக்கூடியதொரு இக்கட்டிலும் மாட்டிக் கொண்டுள்ளது.

இந்த நிலையில் நாடாளுமன்றத்தில் சர்வதேச விசாரணைக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றிக் கொள்வதால் அதிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியுமென்ற தப்புக் கணக்கொன்றை ஆட்சியாளர்கள் போட்டுள்ளமை எந்த விதமான நன்மையையும் அளிக்கப் போவதில்லை. உலக நாடுகளுக்கே பொதுவானதொரு சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஒரு நாட்டின் நாடாளுமன்றத்தினால் ஒரு போதுமே செயலிழக்க வைக்க முடியாது. அவ்வாறாயின் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை நாடாளுமன்றத்தில் தீர்மானம் ஒன்றை நிறை வேற்றுவதன் மூலமாகத் தடுத்திருக்க முடியுமல்லவா? அப்போது அதைச் செய்யாதவர்கள் இப்போது தீர்மானம் நிறைவேற்ற முயல்வது வேடிக்கையானது. பொறுத்திருந்து பார்க்கும்போது இதன் தாற் பரியம் தெளிவாகத் தெரியவரும்.

# அறுகும் வன்னியும்

சிவஸ்ரீ க.ஜெயராமக் குருக்கள்
வளலாய்- அச்சுவேலி



அறுகம்புல் பூமியில் இருந்து கிளம்பும் போது நேராக தலை நிமிர்ந்து, கிளம்பி, பிறகு கொடியாகப் பரவி, ஒவ்வொரு கணுவுக்கும் வேரை ஊன்றி, அதில் குருத்தும் கிளம்பி பரவிக் கொண்டே போகும். அப்படி நன்றாக வளர்ந்ததைச் சீக்கிரத்தில் அழித்துவிட முடியாது. அது சிறந்த மூலிகையாகவும் விளங்குகின்றது. அத்துடன் இதைப் பச்சையாக தீயில் போட்டாலும் அது உடனே நன்றாக எரிய ஆரம்பித்துவிடும். அப்படிப்பட்ட அறுகம்புல்லுக்கு தூர்வை என்ற பெயரும் உண்டு. ஆலமரம் பூமிக்கு மேல் உயரமாக வளர்ந்து படர்ந்து விரித்த குடைமாதிரியாகக் காட்சி தருகின்றது. அறுகு பூமியில் மேல் நோக்கிப் படர்ந்து பசுமையாக இருக்கின்றது. அதுபோல் மனித சரீரத்தில் உள்ள ஆறு ஆதாரங்களில் மூலாதாரத்தில் குண்டலினி சக்தியாகக் கணபதி திகழ்கிறார். அந்த குண்டலினி சக்தியானது, அறுகு நிமிர்ந்து பசுமையாக படர்வது போல் ஆறு ஆதாரங்களிலும் வேரூன்றிப் படர்ந்து தலை உச்சியை அடைந்த ஆலமரம் போன்று தழைத்து விரிந்து இருக்க வேண்டும் என்ற தத்துவமாக விநாயகருக்கு அறுகு முதல் இடமாக அமைகிறது.

இந்த அறுகு வெப்ப நோய்களை நீக்குவதாகவும் அருமருந்தாகவும் பயன்படுகின்றது. விநாயகர் அனலாகரன் என்பவனை விழுங்கியதால் ஏற்பட்ட வெப்பத்தை அறுகு தண்ணீரால் தணித்ததாக விநாயக புராணம் கூறுகிறது. காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களுக்கு அறுகை நீரிலிட்டு நன்றாகச் சுண்டக் காய்ச்சி கஷாயமாகக் கொடுத்தால் காய்ச்சல் நீங்கி விடும். இந்த அறுகை நீண்ட மஞ்சளுடன் சேர்த்து அரைத்து சிரங்கு போன்ற தோல் வியாதிகளுக்கு மேல் பூச்சாகத் தடவக் குணம் உண்டாகும். அறுகினால் இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்களுக்கும் குணம் உண்டாகிறது என்று சித்த வைத்தியர்கள் கூறுகிறார்கள். அறுகை சிறு சிறு துண்டுகளாகத் துண்டித்து அம்மியில் நன்றாக அரைத்து கெட்டித் தயிருடன் சேர்த்து வாரம் இரண்டுமுறை உணவுடன் உட்கொண்டால் அல்சர் போன்ற குடல் சம்பந்தமான வியாதிகள் வராமல் தடுப்பதுடன் உடலின் வெப்பத்தையும் சரியான முறையில் நிலைக்கச் செய்யும் என்று மூலிகை வைத்தியத்தில் கூறப்படுகிறது. யோகிகள் நீண்ட நேரம் உட்கார்ந்து தியானம் செய்வதால் மூலாதாரத்தில் ஏற்படும் உஷ்ணத்தைத் தணிப்பதற்கு அறுகைக் கஷாயம் வைத்து அருந்துவார்கள்.

இவ்வளவு பெருமைகளைப் பெற்ற அறுகம்புல் முழுமுதற் கடவுளாகவும், பிரணவ ரூபமானவருமான கணபதிக்கு மிகவும் உகந்ததாக அமைந்து இருக்கிறது. அதன் காரணமாக அறுகு என்ற தூர்வையால் விநாயகரை

**அறுகு வெப்ப நோய்களை நீக்குவதாகவும் அருமருந்தாகவும் பயன்படுகின்றது. விநாயகர் அனலாகரன் என்பவனை விழுங்கியதால் ஏற்பட்ட வெப்பத்தை அறுகுத் தண்ணீரால் தணித்ததாக விநாயக புராணம் கூறுகிறது.**

அர்ச்சிக்கப்படுகிறது. அறுகம்புல், யுக்மம் என்றால் இரண்டும் சேர்ந்தது. ஆகையால் இரண்டு இரண்டு அறுகம்புல்லாகக் கணபதியை இருபத்தியொரு தடவை அர்ச்சிக்க வேண்டும். இந்த முறையில் கணபதியை வழிபட்டு நன்மைகள் அடைந்தவர்கள் பலர் இருந்தாலும் அதில் கவுண்டின்னிய முனிவரும், அவருடைய மனைவியும் மிகச் சிறந்தவர்கள் ஆவர்.



**வன்னி இலை**

அவுரவ முனிவர் என்ற முனிவருக்கு சமி என்ற மகள் இருந்தாள். அவளுக்கும் மந்தாரன் என்பவருக்கும் திருமணம் ஆகி, இருவரும் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தார்கள். ஒரு சமயம் கணேசரின் பூர்ணமான அருளைப் பெற்று கணேச ரூபமாக இருந்த புருசுண்டி என்ற முனிவரை இகழ்ந்து பேசியதால் அவருடைய சாபத்துக்கு ஆளாகி இருவரும் வன்னி மரமாகவும், மந்தார மரமாகவும் ஆகிவிட்டார்கள். அவர்கள் இருவரும் தங்கள் தவறை உணர்ந்து விநாயகப் பெருமானை வழிபட்டு அவருடைய அருளைப் பெற்று சாப விமோசனம் அடைந்தார்கள். விநாயகர் மனமகிழ்ந்து வரம் அளித்தபடியால் சமியும், மந்தாரனும் இன்றும் வன்னி மரமாகவும்-மந்தார மரமாகவும் இருக்கிறார்கள். விநாயகரின் அருளால் உண்டான வன்னி மரத்தின் இலையும் மந்தாரையின் மலரும் விநாயகருக்கு உகந்ததாக இருக்கின்றன.

நெருப்பைத் தன்னில் அடக்கிக் கொண்டு இருப்பதால் வன்னி என்ற பெயர் உண்டானது. சூரியகாந்தக் கல்லோடு சூரிய ஒளி கலந்தால் அதில் இருந்து தீ வெளிப்படுவது போன்று வன்னியின் கட்டையை, அதன் வேறொரு கட்டையைக் கொண்டு தயிர் கடைவது போல் கடைந்தால் தீ வெளிப்படுகிறது. அப்படியாக வன்னியில் இருந்து கடைந்து எடுக்கப்பட்ட தீயை ஹோமம், யாகம் முதலிய நற்காரியங்களுக்கு மிகவும் உயர்ந்ததாகச் சாஸ்திரங்கள் விவரிக்கின்றன. இதுவே முதன்மையானதாகவும் மற்ற வழிமுறைகள் இதனை அடுத்ததாகவும் தான் கூறப்படுகின்றன. தீயைச் சார்ந்த தங்கம், சங்கு போன்ற பொருள்கள் மேலும் மேன்மையானதாக ஆகிறதோ அதுபோல் வன்னி மரம், வன்னி இலை ஆகியவற்றைத் தொட்ட மாத்திரத்திலேயே மனிதர்களின் பாவம் அழிகிறது. வன்னி என்ற நெருப்புடன் மனிதனின் தேகம் சம்பந்தப்படுவதால் அவன் தங்கம், சங்கு போன்று மேன்மை ஆனவனாக ஆகிறான். வன்னியின் இலையைக் கொண்ட பக்தியுடன் ஈஸ்வரார்ப்பணம் செய்யும்போது தீயில் சம்பந்தப்பட்ட பொருள் சுத்தம் அடைந்து தெய்வீக ஞானம் ஏற்படுகின்றது. மண்ணுலகில் பிறவி என்ற மாசை அகற்றிடச் செய்பவர் விநாயகப் பெருமான். அதன் காரணமாகவேதான் வன்னி இலையைத் தமக்கு உகந்ததாக வைத்துக் கொண்டு வன்னி மரத்தடியிலும் கணேசர் எழுந்தருளியிருக்கிறார்.

## எழுத்துப் பிழைகளைத் திருத்துவார்களா?

வாசகர் திருமுகம்

22.05.2014ஆம் திகதி பிரசுரமான வாசகர் திருமுகத்தில் ஓர் அன்பரால் கேட்கப்பட்ட சந்தேகம் சம்பந்தமாக இந்த விளக்கம் தரப்படுகின்றது.

கல்தோன்றி, மண் தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய மூத்த தமிழ்மொழி, அக்காலத்து பேரறிஞர்களால் போற்றி வளர்க்கப்பட்டு இன்றும் இளமையுடனும், இனிமையுடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

தமிழ் மொழியில் 247 எழுத்துக்கள் உள்ளன என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. உயிர் எழுத்துக்கள் 12, மெய் எழுத்துக்கள் 18, உயிர்மெய் எழுத்துக்கள் 216, ஆயுத எழுத்து 1. இந்த ஆயுத எழுத்து பாவனையில் மிகக் குை [illegible]ானது. தமிழ் இலக்கணத்தின்-பிரகாரம் உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் சேர்ந்ததே உயிர்மெய் எழுத்தாகும்.

க்+அ= க என்பதே இலக்கண வரைபு ஆகும்.

அதே போல் மெய் எழுத்துக்கள் 18 உம், உயிர் எழுத்துக்கள் 12 உம் சேர்ந்தே உயிர்மெய் எழுத்துக்கள் உருவாகின்றன.

உயிர்மெய் எழுத்துக்களில் உப எழுத்தாக வருகின்ற ா,ெ,ே,ை ஆகிய எழுத்துக்களுக்கு தனியான ஒலி வடிவம் கிடையாது.

உதாரணம்:- க்+ஒ= கொ

க்+ஓ=கோ

ா என்கின்ற எழுத்து ஓர் உப எழுத்[illegible]லாமல் அதற்குத் தனியான ஓசை கிடையாது. இந்த எழுத்து அரவு என்று கூறப்படு[illegible]

உதாரணம் ர்+அ=ர

ர்+ஆ=ரா

ர்+இ=ரி

ர்+ஈ=ரீ என உயிர் மெய் எழுத்தாக உச்சரிக்கப்படுகின்றது. ர்,ரி, ரீ என எழுதப்படுகின்ற எழுத்துக்கள் , தமிழ் எழுத்து வரி வடிவில் இல்லாத எழுத்துக்களாகும்.

ர்,ரி,ரீ எழுத்துக்கள் இலக்கணப்படி சரியென வாதாடுபவர்களும் உண்டு.

இல்லாத ஒன்றை தமிழ் மொழியில் புகுத்தும்போது காலப் போக்கில் தமிழ் எழுத்துக்களே மாறக் கூடிய நிலைக்குத் தள்ளப்படலாம். இவ்வெழுத்துப் பிழைகள் பாடசாலைப் புத்தகங்களில் ஏராளமாக இருக்கின்றன. இதனை நி[illegible]தி செய்ய எமது கல்வி அமைச்சர் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

*பாவரன், வவுனியா*

## இந்தியாவைக் கலக்க வந்த வாகனங்கள்

கரடு முரடான சாலைகள், மணற்பாங்கான பகுதிகளில் அதிவிரைவாக செல்லும் ஆற்றல் படைத்த வாகனங்களை இந்தியாவில் அறிமுகம் செய்துள்ளது போலரிஸ் நிறுவனம் அமெரிக்காவை சேர்ந்த போலரிஸ் நிறுவனம் வாகனங்கள் தயாரிப்பதில் உலகப்புகழ் பெற்ற நிறுவனமாகத் திகழ்கிறது. இந்த நிலையில், இந்தியாவில் வாகனங்கள் மீதான மோகம் அதிகரித்து வருவதை கவனத்தில் கொண்டு அந்த நிறுவனம் களமிறங்கியுள்ளது. ரூ.2.4 லட்சம் முதல் ரூ.20 லட்சம் வரையிலான இத்தகைய வாகனங்களை இந்தியாவில் போலரிஸ் அறிமுகம் செய்துள்ளது. அமெரிக்கா மற்றும் மெக்ஸிகோ நாடுகளிலுள்ள வாகன உற்பத்தி நிலையங்களினால் இத்தகைய வாகனங்களை இறக்குமதி செய்து இந்தியாவில் விற்பனை செய்ய அந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

மேலும், அடுத்த 5 ஆண்டுகளுக்குள் இந்தியாவில் தொழிற்சாலை அமைக்கவும் திட்டமிட்டுள்ளது. உள்நாட்டிலேயே வாகன உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டால் இறக்குமதி வரி கணிசமாக குறையும் என்பதால், விலையையும் குறைக்க போலரிஸ் திட்டமிட்டுள்ளது. இந்தியாவில் ஏற்கனவே துணை நிறுவனத்தை துவங்கிவிட்ட அந்த நிறுவனம், விரைவில் தனது உயரிய வகை மோட்டார்சைக்கிள் மொடல்களையும் அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் இந்தியாவில் முக்கிய இடத்தை பிடிக்கும் வகையில் விரிவாக்கப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.



## பா.ஜ.க. பிரமுகர் மீது நேற்று துப்பாக்கிச் சூடு

புதுடில்லி, ஜூன் 14
உத்தரபிரதேசத்தில் மேலும் ஒரு பா.ஜ.க. பிரமுகர் மீது துப்பாக்கிச் சூடு நடைபெற்றுள்ளது. அவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
பா.ஜ.க. நகர கட்சித் தலைவரான சிங் காலின் கடைக்குள் புதன்கிழமை திடீரென புகுந்த இரு கொள்ளையர்கள், அவரிடம் இருந்த பணப்பையை கொள்ளை அடிக்க முயன்றுள்ளனர். அதைத் தர மறுத்ததால், சிங்காலை தங்களிடமிருந்த கள்ளத் துப்பாக்கியால் சுட்டுவிட்டு ஓடி விட்டனர். (த)

# இந்திய மத வழிபாட்டுத் தலங்களை குறி வைக்கத் தீவிரவாதிகள் திட்டம்

## பாதுகாப்பு ஏற்பாடுகள் உஷார் நிலையில்

புதுடில்லி, ஜூன் 14
இந்தியாவில் மத வழிபாட்டுத் தலங்களைப் பயங்கரவாதிகள் குறி வைத்துத் தாக்குதல் நடத் தக் கூடும் என்று மத்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.
அயோத்தி, வாரணாசி, மதுரா நகரங்களில் உள்ள அனைத்து இந்து மற்றும் இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்களுக்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.
மத்திய உள்துறை செயலர் அனில் கோஸ்சுவாமி தலைமையில், டில்லியில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுள்ளது.
மத்திய ரிசர்வ் பொலிஸ் படை அதிகாரி திலீப் திரிவேதி, உத்திர பிரதேச அதிகாரி பானர்ஜி, மாநில உள்துறை முதன்மை செயலர் தீபக் சிங்கால் உட்பட பலர் பங்கேற்ற இந்தக் கூட்டத்தில் தான், மூன்று நகரங்களின் பாதுகாப்பை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
பிரபலமான மதவழிபாட்டுத் தலங்கள் உள்ள இந்த மூன்று நகரங்களிலும், அதிக கண்காணிப்புக் கமராக்கள் மற்றும் நவீன மின்னணுச் சாதனங்களைப் பொருத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
அத்துடன், மூன்று நகரங்களிலும் உள்ள வழிபாட்டுத் தலங்களில், மத்திய ரிசர்வ் பொலிஸ் படையின் கூடுதல் பிரிவுகளை பணியில் ஈடுபடுத்துவது என்றும், 24 மணி நேரமும், பாதுகாப்புப் படையினர் ஈடுபாட்டோடு பணியாற்றுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
மேலும், இந்துக்களும், இஸ்லாமியர்களும் சரிசமமாக வசித்துவரும் மதுராவும் இப்போது தீவிரவாதிகளின் தாக்குதல் பட்டியலில் வந்துள் ளது என்பது குறிப்பிடத்தக்கது. (த)

**பிரபலமான மதவழிபாட்டுத் தலங்கள் உள்ள இந்த மூன்று நகரங்களிலும், அதிக கண்காணிப்புக் கமராக்கள் மற்றும் நவீன மின்னணுச் சாதனங்களைப் பொருத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

# விடுதியில் இருந்த சிறுமிகளை நள்ளிரவில் கடத்தி பலாத்காரம்

## பொள்ளாச்சி அருகே பயங்கரம்

சென்னை, ஜூன் 14
விடுதியில் மர்ம நபர்கள் புகுந்து அங்கிருந்த இரண்டு சிறுமிகளைத் தூக்கிச் சென்று பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர். இது குறித்து பொலிஸார் தனிப் படை அமைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.
பொள்ளாச்சி மத்திய பஸ் நிலையம் அருகே தமிழ் சுவிசேஷலுத்திரன் திருச்சபை ஆலயம் உள்ளது. இந்தத் திருச்சபை வளாகத்தில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக மாணவர் விடுதி செயற்பட்டு வருகிறது. இந்த விடுதியில் தற்போது 3 மாணவிகள் உட்பட 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர், சிறுமியர் 20 பேர் தங்கி படிக்கின்றனர். அதில் சிலர் திருச்சபை நிர்வாகத்தில் உள்ள பள்ளியிலும், இன்னும் சிலர் அரசு மற்றும் நகராட்சிப் பள்ளிகளிலும் படித்து வருகின்றனர். இந்த மாணவர்கள் பொள்ளாச்சி சுற்றுவட்டாரத்தில் உள்ள ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.
கடந்த புதன்கிழமை இரவு சுமார் 11.30 மணியளவில் மர்ம நபர்கள் சிலர் விடுதிக்குள் புகுந்து, மாணவர்களிடம் கத்தியைக் காட்டி மிரட்டி, அதில் இரண்டு சிறுமிகளை வலுக்கட்டாயமாகத் தூக்கிச் சென்றுள்ளனர். எதிரே இருந்த தனியார் வணிக வளாக மேல்மாடிக்குக் கொண்டு சென்று, அந்தச் சிறுமிகளைப் பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர்.
விடுதியில் இருந்த சக மாணவர்கள், விடுதிக் காப்பாளரிடம் நடந்த விபரத்தைக் கூறியுள்ளனர். அதைத் தொடர்ந்து தேவாலய நிர்வாகத்தினர் இரவு முழுவதும் சிறுமிகளைத் தேடியுள்ளனர். கடந்த வியாழக்கிழமை அதிகாலையில் சிறுமிகள் வணிக வளாகத்தின் மேல் மாடியில் மூர்ச்சையாகிக் கிடந்தமை தெரியவந்துள்ளது. தகவலறிந்த பொலிஸார் இரண்டு சிறுமிகளையும் மீட்டு, பொள்ளாச்சி அரசுமருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிறுமிகளுக்கு நடந்த மருத்துவப் பரிசோதனையில், இருவரும் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டமை உறுதியானது. (த)



இந்தியாவில் ஆஸ்துமாவை குணப்படுத்தும் வைத்தியமாக மீனை உயிருடன் விழுங்கும் பழக்கம் காலா காலமாக நடந்து வருகிறது. ஹைதராபாத் நகரில் பாரம்பரிய வைத்தியமாக மீனை உயிருடன் விழுங்கி ஆஸ்துமாவை குணப்படுத்தி வருகின்றனர். ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் பல்வேறு மாநிலங்களிலிருந்து வருகின்றனர். இந்த வைத்தியத்தில் உயிருடன் உள்ள மீனில் ஒரு வகையான மஞ்சள் மூலிகையை தடவி கொடுகின்றனர். மூலிகையும், மீனும் தொண்டையைச் சுத்தம் செய்து நோயை நீக்கிவிடும் என அவர்கள் நம்புகின்றனர். (த)

## ராணுவ போர்க் கப்பலில் பயணம் செய்யும் மோடி

புதுடில்லி, ஜூன் 14
இந்திய ராணுவத்தின் விமானம் தாங்கிக் கப்பலான விக்ரமாதித்யா போர்க்கப்பலில் பிரதமர் நரேந்திர மோடி இன்று பயணம் செய்யவுள்ளார்.
ரஷ்யாவிடமிருந்து சுமார் 15 ஆயிரம் கோடி ரூபா செலவில் வாங்கப்பட்ட விக்ரமாதித்யா போர்க் கப்பல் 44 ஆயிரத்து 500 தொன் எடை கொண்டதாகும்.
இதில் இருந்து போர் விமானங்கள் புறப்பட்டுச் சென்று எதிரியின் இலக்கை தாக்கி அழித்து விட்டு, மீண்டும் இதே கப்பலில் வந்து தரையிறங்கும் வசதி உள்ளது.
தற்போது, கோவா கடற் பகுதியில் நிலைநிறுத்தப்பட்டுள்ள விக்ரமாதித்யா கப்பலுக்குள் இன்று ஹெலி மூலம் செல்லும் பிரதமர் மோடி, கடற்படை வீரர்களின் சாகச நிகழ்ச்சியைப் பார்வையிட்டபடி, பயணிக்கவுள்ளார்.
மேலும், சாகச நிகழ்ச்சியை பார்வையிட்ட பின்னர், கப்பலில் இருந்தவாறே கடற்படை அதிகாரிகள் மற்றும் வீரர்களிடையே மோடி உரையாற்றவுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)



நரேந்திர மோடி

# நண்பர் ஒருவரின் மனைவியை பலாத்காரம் செய்த அமைச்சர்

## மோடிக்கு புதிய நெருக்கடி

புதுடில்லி, ஜூன் 14
மத்திய இணை அமைச்சர் நிகல் சந்துக்கு, நண்பரின் மனைவியைப் பலாத்காரம் செய்த வழக்கில் நீதிமன்றம் ஆணை அனுப்பியுள்ளது.
ஹரியானா மாநிலத்தின் சிர்சா மாவட்டம் அபுப்சேர் என்ற பகுதியைச் சேர்ந்த பெண் மணிக்கும் அந்த மாநிலத்தின் ஹனுமான்கர் மாவட்டத்தை சேர்ந்த ஓம்பிரகாஷ் என்பவருக்கும் கடந்த 2010, டிசெம்பர் 20ஆம் திகதி திருமணமாகியுள்ளது.
திருமணத்துக்கு பிறகு ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூருக்குத் தம்பதிகள் இடம் பெயர்ந்துள்ளனர்.
ஆனால் கருத்து வேறுபாடு காரணமாக கணவன் மனைவி இருவரும் நகரின் வெவ்வேறு பகுதிகளில் வாடகை வீட்டில் வசித்து வந்துள்ளனர்.
இந்நிலையில் ஓம்பிரகாஷ் தனது நண்பர்களுடன் சேர்ந்து சொந்த மனைவியையே பாலியல் பலாத்காரம் செய்துள்ளார்.
இது குறித்து 2011இல் அந்தப் பெண் பொலிஸில் அளித்துள்ள முறைப்பாட்டில், நான் தங்கியிருந்த வீட்டுக்கு வந்த கணவன் எனக்கு உணவில் மயக்க மருந்தை கலந்து கொடுத்து என்னை நண்பர்களுக்கு விருந்தாக்கியுள்ளார். இதை அவரே எனக்கு தெரிவித்தார் என்றும், அரசியல் மற்றும் வணிகத்தில் முன்னேற வேண்டும் என்பதற்காக இவ்வாறு நண்பர்களுக்கு என்னை விருந்தாக்கியதாகத் தெரிவித்தார் எனவும் மனைவி கூறினார்.
இந்த முறைப்பாட்டில் அமைச்சர் நிகல்சந்த் உட்பட 17 பேரின் பெயர்கள் இடம்பெற்றிருந்தன. 2011 இல் பதிவான இந்த முறைப்பாட்டை மேற்கொண்டு விசாரிக்காமல் 2012 இல் பொலிஸார் வழக்கை முடித்துள்ளனர்.
இதை எதிர்த்து அந்த பெண் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததால், நீதிமன்றம் மூலம் விசாரணை நடந்து வருகிறது. இந்நிலையில், இவ்வழக்கில் தொடர்புள்ள நிகல்சந்த் உட்பட 17 பேருக்கும் ஜெய்ப்பூர் நீதிமன்றம் ஆணை அனுப்பியுள்ளது.
மத்திய உரத்துறை இணை அமைச்சராக பதவி வகித்து வரும் நிகல்சந்த், மீதான வழக்கு காரணமாக அந்த பதவி பறிக்கப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. (த)

# பரபரப்பு வாக்குமூலம் அளித்த கரகாட்டக்காரி

வேலூர், ஜூன் 14
வேலூரைச் சேர்ந்த கரகாட்டக்காரி மோகனாம்மாள் செம்மர கடத்தல் முதலீடு தொடர்பாக பொலிஸில் பரபரப்பு வாக்குமூலம் கொடுத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
வேலூர் கஸ்பா பகுதியைச் சேர்ந்த கரகாட்டக்காரி மோகனாம்மாள் கரகாட்டக் குழுவை நடத்தி வருகிறார்.
இந்நிலையில், இவர் வசித்து வந்த காட்பாடி தாராபட வேட்டில் உள்ள வீட்டில் கடந்த 25ஆம் திகதி பொலிஸார் 4.04 கோடி பணம் மற்றும் 73 பவுண் நகைகளைப் பறிமுதல் செய்துள்ளனர்.
இது குறித்து காட்பாடி பொலிசார், மோகனாம்மாள், அவரது அக்காள் நிர்மலா, அவரது மகன் சரவணன் ஆகியோர் மீதும் வழக்கு பதிவு செய்தனர்.
தலைமறைவாக இருந்த மோகனாம்மாள், நிர்மலா ஆகியோர் கடந்த 9ஆம் திகதி வேலூர் நீதிமன்றத்தில் சரண் அடைந்துள்ளனர்.
அதனைத்தொடர்ந்து, நீதிமன்றக்காவலில் இருந்த மோகனாம்மாள், நிர்மலா ஆகியோரைக் காவலில் வைத்து விசாரிக்க நீதிவான் 2 நாள்களுக்கு அனுமதி வழங்கியுள்ளார்.
அதையடுத்து மோகனாம்மாள், நிர்மலா ஆகியோரைத் தனிப்படைப் பொலிஸார் ரகசிய இடத்தில் வைத்து விசாரிக்கின்றனர்.
இது குறித்து தனிப்படை பொலிஸார் கூறுகையில், கூலிப் படைகளை வைத்துக் கொண்டு கோடிக்கணக்கான பணத்தை செம்மரக் கடத்தலில் முதலீடு செய்தேன் என்று மோகனாம்மாள் ஒப்புக்கொண்டதாகவும், மகன் சரவணன் குறித்து சில தகவல்களைத் தெரிவித்துள்ளதாகவும் கூறினர். (த)



கைதான கரகாட்டக்காரி

# ஈராக் தலைநகர் பக்தாத்தை நெருங்கும் தீவிரவாதிகள்

## கடும் மோதல் தொடர்ந்து நீடிக்கிறது

பக்தாத், ஜூன் 14

ஈராக்கில் பல்வேறு நகரங்களைக் கைப்பற்றிய சன்னி முஸ்லிம் படையினர் தலைநகர் பக்தாத்தை நெருங்கி வருகின்றனர்.

ஈராக் நாட்டில் ஷியா, சன்னி முஸ்லிம்களுக்கு இடையே நீண்ட காலமாக மோதல் நீடித்து வருகிறது. சன்னி பிரிவைச் சேர்ந்த சதாம் ஹூசைன் வீழ்ச்சிக்குப் பின்னர் அமெரிக்க ஆதரவுடன் ஷியா பிரிவைச் சேர்ந்தவர்கள் தற்போது ஆட்சி நடத்தி வருகின்றனர்.

இந்த அரசை எதிர்த்து சன்னி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த 'இஸ்லாமிக் ஸ்டேட் ஒப் ஈராக் அன்ட் தி லெவன்ட்' என்ற அமைப்பு போரிட்டு வருகிறது. அந்தப் படை நாட்டின் 2ஆவது பெரிய நகரான மொசூல் உட்பட பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றியுள்ளது. மேலும் வடக்கு பிராந்தியத்தைச் சேர்ந்த நினிவே மற்றும் கிர்குக் பகுதிகளையும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது. கடந்த வியாழக்கிழமை அவர்கள் துலிலியா என்ற நகரைக் கைப்பற்றினர்.



பக்தாத்தை நோக்கி முன்னேறும் தீவிரவாதிகள்

சதாம் ஹூசைனின் சொந்த ஊரான திக்ரித் நகரும் ஐ.எஸ்.ஐ.எல். படை வசமாகியுள்ளது. தற்போது அவர்கள் தலைநகர் பக்தாத் நோக்கி வேகமாக முன்னேறி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து ஐ.எஸ்.ஐ.எல். செய்தித் தொடர்பாளர் அபு முகமது அல்-அதானி கூறியபோது, எங்கள் படைகள் பக்தாத் மற்றும் கர்பாலா நகரங்களை நோக்கி முன்னேறி வருகின்றன என்று தெரிவித்தார்.

ஐ.எஸ்.ஐ.எல். படைகள் தற்போது பக்தாத்தில் இருந்து 90 கிலோமீற்றர் தொலைவில் உள்ளன. அந்தப் படைகள் தலைநகரை நெருங்கி வந்து கொண்டிருப்பதால் பிரதமர் நூரி அல்-மாலிகி தலைமையில் சிறப்பு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் அமெரிக்கா இராணுவத்தின் உதவியைக் கோர முடிவு எடுக்கப்பட்டது. ஆனால், அமெரிக்கா தரப்பில் தொடர்ந்து மௌனம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஈராக் போரில் ஏற்கனவே 4500 அமெரிக்க வீரர்கள் உயிரிழந்துள்ளனர். எனவே மீண்டும் அந்த நாட்டுக்குப் படைகளை அனுப்ப அமெரிக்கா தயங்குகிறது.

அதற்கு மாற்றாக ஈராக் இராணுவத்துக்கு ஆயுத, தொழில்நுட்பரீதியாக உதவி அளிக்க அமெரிக்கா முன்வந்துள்ளது. குறிப்பாக ஐ.எஸ்.ஐ.எல். படையினர் மீது ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்த அமெரிக்க இராணுவம் உதவி செய்து வருவதாகக் கூறப்படுகிறது. (த)



## வானத்தில் மிதந்து கொண்டு பிறந்தநாள் கொண்டாடிய புஷ்

நியூயோர்க், ஜூன் 14

அமெரிக்க முன்னாள் அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் விண்ணில் பறந்தவாறு தனது பிறந்த நாளைக் கொண்டாடியுள்ளார்.

ஜோர்ஜ் புஷ் நேற்றுத் தனது 90ஆவது பிறந்தநாளை கென்னிபன்க்போர்ட் விமானப்படைத் தளத்தில், முன்னாள் இராணுவ வீரர்களின் உதவியுடன், ஹெலியில் இருந்து குதித்து, வானில் மிதந்தவாறு கோலாகலமாகக் கொண்டாடியுள்ளார். (த)



ரஷ்யாவின் இரண்டு போர் விமானங்கள் நேற்று திடீரென அமெரிக்க வான்பரப்புக்குள் சுமார் 50 மைல்கள் உட்பிரவேசித்தன. இதனால் அமெரிக்கா - ரஷ்யா இடையிலான மோதல்நிலை மேலும் வலுப் பெற்றிருக்கிறது. அமெரிக்கப் படைகள் ரஷ்ய விமானங்கள் மீது தாக்குதலை நடத்த முயற்சித்த வேளையில் அவை அமெரிக்க வான்பரப்பை விட்டு வெளியேறின. (த)

## பத்து வயதில் டிப்ளோமா முடித்த இந்திய சிறுவன்



தனிஷ்க் ஆப்ரகாம்

நியூயோர்க், ஜூன் 14

அமெரிக்காவில் 10 வயதில் பள்ளி இறுதி வகுப்பை முடித்து டிப்ளோமா பட்டம் பெற்றுள்ளான் இந்திய வம்சாவளி சிறுவன் தனிஷ்க் ஆப்ரகாம். இதன் மூலம் அமெரிக்காவில் மிகக் குறைந்த வயதில் பள்ளிக் கல்வி முடித்து டிப்ளோமா பெற்றவர் என்ற சாதனையை அந்தச் சிறுவன் படைத்துள்ளான்.

கலிபோர்னியா மாகாணம் சாக்ரமென்டோவைச் சேர்ந்த அந்தச் சிறுவன் 7 வயதுக்குப் பின் பள்ளிக்குச் செல்லவில்லை. வீட்டில் இருந்தபடியே படிப்பைத் தொடர்ந்தான். கடந்த மார்ச் மாதம் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வை எழுதி அதில் வெற்றி பெற்றுள்ளான்.

இது தொடர்பாக அந்தச் சிறுவன் கூறுகையில், அரசு நடைமுறைகளின்படி 10 வயதிலேயே பள்ளி இறுதித் தேர்வை நான் எழுதுவதில் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இத்தேர்வுக்காக நான் கடுமையாக உழைத்தேன். இப்போது வெற்றி கிடைத்துள்ளது.

அடுத்ததாக சமுதாய கல்லூரியின் தேர்வுகளை எழுத இருக்கிறேன். மருத்துவர் அல்லது விஞ்ஞானியாக வேண்டும் என்பது தான் எனது இலட்சியம் என்று தெரிவித்துள்ளான். (த)

## பாலியல் கொடுமைக்கு எதிராக கண்ணீர் விட்ட நடிகை ஜோலி

லண்டன், ஜூன் 14

பாலியல் வன்முறைகளைத் தடுப்பது தொடர்பான மாநாடு இங்கிலாந்தில் ஹொலிவூட் நடிகை ஏஞ்சலினா ஜோலி தலைமையில் நடைபெறுகிறது.

இதில் பிரபல ஹொலிவூட் நடிகையான ஏஞ்சலினா சுமார் 300 சர்வதேச நாடுகளின் அமைச்சர்கள் மத்தியில் உரையாற்றியுள்ளார்.

லண்டனின் எக்ஸல் நிலையத்தில் தொடர்ந்து 3 நாள்களுக்கு இம்மாநாடு நடக்கவுள்ளது.



நடிகை ஏஞ்சலினா ஜோலி

இதில், உரையாற்றிய ஏஞ்சலினா ஜோலி கருத்துத் தெரிவிக்கையில்,

இனி வரும் உலகில் நான் பாலியல் வன்முறையில் சிக்கி உயிர் பிழைத்தவர் என்ற செய்தியை உலகில் எந்த ஒரு நபரும் தெரிவிக்கக் கூடிய நிலை தோன்றக் கூடாது என்றும் இந்த அவமானம் இனி ஆக்கிரமிப்பாளரை மட்டுமே சார்ந்தது எனவும் கூறியுள்ளார்.

சுமார் 140 நாடுகள் பங்கேற்ற இம்மாநாட்டை லண்டன் வெளியுறவுத்துறை அமைச்சர் வில்லியம் ஹக்குடன் இணைந்து ஏஞ்சலினா தலைமை வகித்துள்ளார்.

இந்த மாநாட்டின் முக்கிய இலக்குகளாக போர்ப் பகுதிகளில் இரசாயன ஆயுதங்கள்போன்றே பாலியல் துன்புறுத்தல்களையும் தடுக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில், அரைகுறை ஆடைகளுடன் திரையில் நடித்து வரும் ஏஞ்சலினா ஜோலி இந்த மாநாட்டில் தலைமை வகித்தமை ஒரு புறம் பெரும் சர்ச்சை கிளம்பியுள்ளது. (த)

## வெளிநாடு செல்வதற்கு முஷாரப்புக்கு அனுமதி

கராச்சி, ஜூன் 14

பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப் வெளிநாடு செல்ல அந்நாட்டு நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.


வெளிநாடு செல்வதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளோர் பட்டியலில் இருந்து தன்னை விடுவிக்க வேண்டும்' என சிந்து உயர் நீதிமன்றத்தில் முஷாரப் மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனு கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தபோது, நீதிபதிகள் முகமது அலி மஸர், ஷாநவாஸ் ஆகியோர் அடங்கிய அமர்வு முஷாரப் வெளிநாடு செல்ல விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டைத் தளர்த்தி உத்தரவிட்டனர். நோய்வாய்ப்பட்டு ஐக்கிய அரபு இராச்சியத்தில் சிகிச்சை பெற்றுவரும் முஷாரப்பின் தாயைப் பார்ப்பதற்கு அனுமதி அளிக்கும் விதமாக மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பித்த நீதிமன்றம், இது தொடர்பாக மேல் முறையீடு செய்வதற்கு அரசுக்கு 15 நாள்கள் அவகாசம் அளிப்பதாகவும் தெரிவித்தது.

இதனிடையே, லால் மஷித் அப்துல் ரஷித் காஸி கொலை தொடர்பாக இஸ்லாமாபாத் சிறப்பு நீதிமன்றத்தில் நேரில் முன்னிலையாக விலக்கு கோரிய முஷாரப்பின் மனு கடந்த வியாழக்கிழமை தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த வழக்கு அடுத்த மாதம் முதலாம் திகதி விசாரணைக்கு வரும்போது முஷாரப் முன்னிலையாக வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

முஷாரப் மீது தேசத் துரோகக் குற்றச்சாட்டு, முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ மற்றும் பலூசிஸ்தான் முன்னாள் பழங்குடியினத் தலைவர் அக்பர் புக்தி ஆகியோர் கொலை உள்பட பல்வேறு வழக்குகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: பல பிரச்சினைகள் ஒரே நேரத்தில் சிரமம் தந்தாலும் ஏற்றுக்கொண்டு முயற்சியினால் வெற்றிகளை ஈட்டுவீர்கள். எதிலும் உணர்ச்சிவசப்பட வேண்டாம். கிடைக்கப் பெற்ற பணத்தை தவறான வழிகளில் முதலீடு செய்ய நேரும். மிகுந்த எச்சரிக்கை தேவை.



**இடபம்**: வழக்குகள் வெற்றியைத் தரும். வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிப்பதால் வியாபாரிகளின் லாபம் பெருகும். முயற்சிகள் அனைத்தும் வெற்றியாகும். தொட்டதெல்லாம் பொன்னாகும் காலம்.



**மிதுனம்**: பெற்றோர் சம்மதிக்காத திருமணங்களை இந்த காலத்தில் தள்ளிப் போடுவது நல்லது. அரசியல்வாதிகள் தங்கள் நிலையை கருத்தில் கொள்வதோடு வாழ்க்கைத் துணையின் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தவும்.



**கடகம்**: சற்று நிதானமாக செயற்பட வேண்டிய நாள். எவரைப் பற்றியும் எதிர்மறை கருத்துக்களை வெளியிடாதீர்கள். உணவு விஷயத்தில் கடும் எச்சரிக்கை தேவை. இரவு, அதிகாலை நேரங்களில் பிரயாணங்களைத் தவிர்க்க வேண்டும்.



**சிங்கம்**: வாழ்க்கைத்துணை வழி உறவினர்களின் உதவிகள் கிடைக்கும். மனதில் அமைதி குறையும். எல்லா விதத்திலும் பரபரப்பு தொற்றிக் கொள்ளும். அரசியல்வாதிகளுக்கு பெண்கள் உதவியால் உயர் பதவி கிடைக்கும்.



**கன்னி**: பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிக்கவும். யாருடைய தூண்டுதலுக்கும் செவி சாய்க்காதீர்கள். தடைப்பட்டு பாதியில் நின்ற தொழில் கட்டுமானம் தற்போது முடிவடையும். அனைவரும் உங்கள் வழிக்கு வருவார்கள். எதையும் தைரியத்துடன் செயற்படுத்துவீர்கள்.



**துலாம்**: சகோதரச் சண்டைகள் தீரும். அலுவலகப் பெண்களுக்கு அதிகாரம், பதவியில் உள்ளவர்களின் ஆரோக்கியமான உதவிகள் கிடைக்கும். இதனால் பல வசதிகளை அடையலாம். எதிர்பாராத பண உதவிகளும் கிடைக்கும்.



**விருச்சிகம்**: தடைப்பட்ட சுபகாரிய நிகழ்ச்சிகள் இனிதே நடைபெறும். புதிய கடன்கள் இனிமேல் ஏற்படாது. வெளிநாடு செல்லும் திட்டம் வெற்றி பெறும். உத்தியோகத்தர்களுக்கு பதவி, சம்பளம் உயரும். நீங்கள் விரும்பிய இடமாறுதலும் கிடைக்கப் பெறுவீர்கள்.



**தனுசு**: தொட்டதெல்லாம் பொன்னாகும். செயல்களை செம்மையுற திருத்தமாகச் செய்வீர்கள். உங்களுக்கு அற்புதமான நல்ல பலன்கள் கிட்டும். வசதிகள் ஓங்கும். புதிய சொத்துகள் சேரும். வெற்றிகளைச் சுவைக்கலாம்.



**மகரம்**: கணவன் மனைவி கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு மறையும். கவனம் தேவை. வீண் வாக்குவாதம் வேண்டாம். நண்பர்கள் மூலம் அனுகூலம் ஏற்படும். தேவையற்ற வீண் விவாதங்களில் ஈடுபட வேண்டாம்.



**கும்பம்**: பொதுவாக தொல்லைகளும் பிரிவினையும் நீங்கி ஒற்றுமையும் உயர்வும் ஏற்படும். தைரியம் கூடும். மிகவும் எச்சரிக்கையுடன் படித்தால் சாதனைகள் புரிய வாய்ப்புண்டு. பிள்ளைகளின் வளர்ப்பில் கவனம் தேவை.



**மீனம்**: வாழ்நாள் முழுவதும் ஏற்படவிருக்கும் கஷ்டங்களை அறியாமல் தவறான முடிவுகளில் இறங்க வேண்டாம். புதைபொருள் ஆராய்ச்சியில் உள்ளவர்கள் அரிய முயற்சிகளில் வெற்றி பெறுவர். குடும்பங்களில் குழந்தை பாக்யம் சந்தோஷப்படுத்தும்.

## நாளை

**ஆனி-01 ஞாயிற்றுக்கிழமை | 15.06.2014**

திதி: திருதியை பி.இ.03.36 வரை
நட்சத்திரம்: பூராடம் மு.ப.11.02 வரை

சுபநேரம்: 08.53-10.23 வரை
இராகுகாலம்: 04.23-05.53 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....




## ஆன்மாவின் இயல்பும் அதன் குறிக்கோளும்

"மனிதன், மரணத்துடன் அழிந்து விடுவதில்லை" என்பதுபழைய கொள்கை. மனிதன் இறந்த பிறகும் கூட ஏதோ ஒன்று வாழ்கிறது; வாழ்ந்து கொண்டேயிருக்கிறது. இது பற்றிய எகிப்தியர், பாபிலோனியர், இந்துக்கள் என்னும் மூன்றுபுராதன நாடுகளின் பழைய கொள்கைகளை ஒப்பிட்டுப் பார்க்கலாம். அவர்களது கருத்தை எடுத்துக் கொள்ளலாம்.

எகிப்தியர்களும்,பாபிலோனியர்களும் ஒரு வகை ஆன்மக் கருத்தைப் பெற்றிருந்தார்கள்; உடலுக்கு வேறுபட்ட இரண்டாவது பொருள் ஒன்று உண்டு. இந்த தூலவுடலுக்குள் வேறோர் உடல் இருக்கிறது. அதுவே இயங்கிச் செயல் புரிகிறது என்பது அவர்களின் கருத்து. இந்த தூல உடலுக்கு அழிவு ஏற்பட்ட பின் இந்த உள்ளுடல் வெளிப்பட்டுச் சிறிது காலம் வாழ்கிறது.ஆனால், இந்த உள்ளுடலின் வாழ்வு தூலவுடல் அழியாமல் காக்கப்படுவது வரை தான். எந்தத் தூலவுடலிலிருந்து பிரிந்ததோ அதன் எந்தப் பகுதிக்கு ஊறு ஏற்பட்டாலும் உள்ளுடலின் அந்தப் பகுதிக்கு கண்டிப்பாக ஊறு ஏற்படும். இதற்காகவே இறந்தவர்களின் உடல்களை எண்ணெய், தடவியும், பிரமிட்டுகள் கட்டியும் காத்து வந்தனர். பழங்காலப் பாபிலோனியர், எகிப்தியர் இவர்களின் கொள்கைப்படி, உள்ளுடல் என்றென்றும் வாழ்வதில்லை. குறிப்பிட்ட ஒருகால எல்லை வரைதான் அதாவது, தூலவுடல் அழியாமல் இருக்கும் வரைதான் வாழும்.

மற்றொரு விநோதக் கருத்து இந்த உள்ளுடலுடன் சிறிது அச்சம், சம்பந்தப்பட்டிருப்பதே. இந்த உள்ளுடல் எப்போதும் துன்பமும் துயரமும் நிறைந்ததாகவே இருக்கும். இதன் வாழ்வே எல்லையற்ற துன்பத்தை அடிப்படையாகக் கொண்டது. தன்னால் இப்போது அனுபவிக்க முடியாத உணவு, உடை, பிற போகங்கள் இவற்றுக்காக அடிக்கடி உயிர் வாழ்பவர்களை இது அணுகிக் கொண்டே இருக்கும்.

# இணையத்தள சேவைக்காக விண்வெளிக்கு செயற்கைக்கோள்களை அனுப்பும் கூகுள்




உலகம் முழுவதும் இணையதள சேவை விரிவாக்கத்துக்காக, 180 செயற்கைக் கோள்களை அனுப்ப, 'கூகுள்' இணையத்தள நிறுவனம் முடிவு செய்துள்ளது. இந்த இணையத் தளத்தை, 480 கோடி பேர் பயன்படுத்தி வருகின்றனர். உலக மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு பேருக்கு, இணையத்தள வசதி இன்னும் கிடைக்கவில்லை. அனைத்து மக்களுக்கும் இணையத்தளசேவை அளிக்க, கூகுள் நிறுவனம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

ஏற்கனவே, இணையத்தள சேவை அளிப்பதற்காக அதிக உயரத்தில் பலூன்கள் பறக்க விடப்பட்டுள்ளன. இது தவிர, சூரிய ஒளியில் இயங்கும் ஆளில்லா விமானம் மூலம் இணையத் தள சேவையளிக்கும் பணியை, 'டைட்டன் ஏரோஸ்பேஸ்' நிறுவனத்திடம் கூகுள் ஒப்படைத்துள்ளது. தற்போது, 6,000 கோடி ரூபா செலவில், குறைந்த உயரத்தில் பூமியைச் சுற்றக்கூடிய, சிறிய செயற்கைக்கோள்களைத் தயாரித்து விண்வெளிக்கு அனுப்ப, கூகுள் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. மற்ற செயற்கைக்கோள்களைப் போன்று செயற்பட்டாலும், இவை குறைவான உயரத்தில் பூமியை சுற்றி வரும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 3 | 8 |
| | | 9 | | | 4 | | 2 | |
| 1 | 2 | | 3 | | | | | 6 |
| 9 | 3 | | 8 | | 5 | 7 | | 4 |
| 5 | | 6 | | 4 | | 1 | | 3 |
| 4 | | 1 | 9 | | 3 | | 8 | 5 |
| 2 | | | | | 6 | | 1 | 7 |
| | 1 | | 5 | | | 3 | | |
| 8 | 4 | | | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 7 | 6 | 9 | 1 | 2 | 3 | 5 | 4 |
| 5 | 4 | 2 | 8 | 3 | 7 | 1 | 9 | 6 |
| 3 | 9 | 1 | 6 | 4 | 5 | 8 | 2 | 7 |
| 9 | 2 | 8 | 1 | 6 | 3 | 7 | 4 | 5 |
| 1 | 3 | 4 | 5 | 7 | 9 | 2 | 6 | 8 |
| 7 | 6 | 5 | 2 | 8 | 4 | 9 | 3 | 1 |
| 4 | 5 | 3 | 7 | 2 | 1 | 6 | 8 | 9 |
| 2 | 8 | 7 | 4 | 9 | 6 | 5 | 1 | 3 |
| 6 | 1 | 9 | 3 | 5 | 8 | 4 | 7 | 2 |


## நல்லிணக்க சந்திப்பு

மட்டக்களப்பு, ஜூன் 14
மட்டக்களப்பில் பல்லின சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சமய நல்லிணக்க செயற்பாடுகள் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு, கல்லடி சிவில் பிரஜைகள் அமைப்பின் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் அமெரிக்க இராஜாங்க திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பிரதிநிதிகளும், மட்டக்களப்பு மாவட்ட சிவில் பிரஜைகள் அமைப்பின் தலைவர் வீ.கமலதாஸ், உப தலைவர் ஜீனைட் நளீமி, மட்டக்களப்பு சிவில் அமைப்பின் ஊடக இணைப்பாளர் தேவ அதிரன், மட்டக்களப்பு மாவட்ட உள்ளூர் அரச சார்பற்ற இணையத்தின் தலைவி திருமதி வீ.சோமாவதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.
இந்தக் கலந்துரையாடலில் போருக்குப் பின்னரான சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்க செயற்பாடுகள் குறித்து விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டது. (ச-10)

# மலையகத்தில் கடும் மழை

## 514 பேர் இடம்பெயர்வு; பல இடங்களில் வெள்ளக்காடு; 54 வீடுகள் நீரில் மூழ்கின

கொழும்பு, ஜூன் 14
மலையகப் பகுதியில் நேற்று முன்தினம் காலை முதல் பெய்து வரும் கடும் மழையால் பல இடங்கள் வெள்ளக்காடாய் காட்சியளிக்கின்றன. மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. பல வீதிகளில் போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டுள்ளன.
நேற்றுமுன்தினம் அதிகாலை முதல் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் போடைஸ் பகுதியில் 23 வீடுகளும், டிக்கோயா பிரதேசத்தில் 20 வீடுகளும், காமினிபுர பிரதேசத்தில் ஒரு வீடும், செனன் பகுதியில் 10 வீடுகளுமாக 53 வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளது.
வெள்ள நீரால் மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்ந்துள்ளனர். டிக்கோயா பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தால் தோட்டத்துக்குச் செல்லும் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதுடன் தொழிற்சாலை வளாகத்திலும் நீர்நிரம்பியுள்ளது.



வெள்ளக்காடாக காட்சியளிக்கும் பகுதி.

ஹற்றன் பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தால் ஹற்றன், பொஸ்கோ ஊடான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதுடன் ஹற்றன் பொலிஸ் நிலைய விளையாட்டு மைதானம், ரயில்வே திணைக்களத்தின் விடுதிகள் உட்பட சில வீடுகளில் வெள்ள நீர் புகுந்துள்ளது.
பல வீடுகளில் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் மரம் முறிவு காரணமாக போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழையால் வர்த்தக நடவடிக்கைகள் உட்பட மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிப்புக்குள்ளாகியுள்ளது.
இதேவேளை- மலையகத்தில் பெய்துவரும் கடும் மழையால் இதுவரை நுவரெலியா மாவட்டத்தில் 102 குடும்பத்தைச் சேர்ந்த 514 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்று நுவரெலியா மாவட்ட செயலர் டீ.பீ.ஜீ. குமாரசிரி தெரிவித்தார்.
ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் இடைக்கிடை மண்சரிவு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பணம் மோசடியில் ஈடுபட்டவர் கைது

கொழும்பு, ஜூன் 14
அமைச்சர்களூடாக வேலை மற்றும் ஒப்பந்தங்கள் பெற்றுத் தருவதாகக் கூறி பணம் மோசடி செய்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
கொழும்பு விசேட விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய அவர் நுகேகொடையில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.
இந்த நபரை நுகேகொடை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறினர். (ச)

## கிராம இல்லங்கள் தோறும் சேமிப்புத் திட்டம் ஆரம்பம்

### மட்டக்களப்பு முனைக்காட்டில்

மட்டக்களப்பு, ஜூன் 14
மட்டக்களப்பு, முனைக்காட்டு கிராமத்தில் இல்லங்கள் தோறும் சேமிப்பு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
இந்தத் திட்டத்தின் கீழ் முனைக்காட்டுக்கிராமத்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் புதிதாக வங்கிக் கணக்குத் திறந்து ஒரு தொகைப்பணம் வைப்பிலிடப்பட்டு சேமிப்புப் புத்தகம் பெற்றோரிடம் கையளிக்கப்படும் என்று திட்டத்துக்கு நிதிஉதவி வழங்கும் முனைக்காட்டைச் சேர்ந்த தாந்தியான் வேதநாயகம் தெரிவித்தார்.
முனைக்காடு கொட்டாம் புலைப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக நிகழ்வின் போது 2014 ஆம் ஆண்டில் முனைக்காட்டில் பிறந்த 25 குழந்தைகளுக்கு தலாஆயிரம் ரூபா வீதம் மக்கள் வங்கிக்கிளையில் வைப்பிலிடப்பட்ட சேமிப்பு புத்தகம் பெற்றோர்களிடம் கையளிக்கப்பட்டது. (ச)



சேமிப்புப் புத்தகம் வழங்கப்பட்டபோது...

## இணையத்தின் ஊடான நிதி கொடுக்கல், வாங்கல்

### கவனமாக செயற்பட வேண்டும் என்கிறது வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்

கொழும்பு, ஜூன் 14
இணையத்தின் ஊடான நிதி கொடுக்கல் வாங்கல்களின் போது எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டியது அவசியமாகின்றது என்று இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.
அலுவலக கருமங்களை இலகுபடுத்தும் நோக்கில் இணையம் மற்றும் ஏனைய வலையமைப்புக்கள் உருவாக்கப்பட்டுவதாகத் தெரிவித்துள்ளது.
வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுக் கொள்வதற்காக பணம் செலுத்தும்போது அரச நிறுவனங்களின் ஊடாக பணம் செலுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
புற நபர்களிடம் பணம் செலுத்த வேண்டாம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப்பணியகத்தின் இணையத்தளத்துக்கு நிகரான ஓர் இணையத்தைப் பயன்படுத்தி அண்மையில் நிதி மோசடி செய்யப்பட்டமை அம்பலமாகியிருந்தது.
போலியான வெளிநாட்டு வேலை வாய்ப்பு வழங்குவோர் அல்லது மோசடிகாரர்களிடம் மக்கள் சிக்கிவிடக் கூடாது என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மக்களிடம் கோரியுள்ளது. (ச)

## மிருகபலியை நிறுத்துமாறு நேற்று பட்டினிப்போர்

### தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்துக்கு முன்பாக

யாழ்ப்பாணம், ஜூன் 14
அறவழி போராட்டக்குழுவின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்திலுள்ள ஆலயங்களில் மேற்கொள்ளப்படும் மிருகபலியை நிறுத்துமாறு கோரி, தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயிலுக்கு முன்பாகவுள்ள வீதியில் நேற்றுக்காலை 6.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
அறவழி போராட்டக்குழுவின் அமைப்பாளர் மறவன்புலவு க.சச்சிதானந்தம், அறவழி போராட்டக்குழுத் தலைவர் ஸ்ரீ.சக்திவேல், அமைப்பின் செயலாளர் எஸ்.தங்கராசா, யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் சிவனேந்திரா சைத்தைன்ய சுவாமி, சிவன் மானிட மேம்பாட்டு நிறுவனத் தலைவரும் சைவ மகாசபைத் தலைவருமான க.கலியுக வரதன் ஆகியோர் இணைந்து இந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.
கீரிமலை, கவுணாவத்தை நரசிம்ம வைரவர் கோயிலில் வருடந்தோறும் மேற்கொள்ளப் பட்டுவந்த வேள்வியை நிறுத்துமாறு மத நம்பிக்கைகள் மற்றும் ஜீவகாருண்ய அடிப்படையில் மனிதநேயமுள்ள ஒருவர் மல்லாகம் நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.
வழக்கை விசாரித்த மல்லாகம் நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் ஜோய் மகிழ்மகாதேவா, இந்த வேள்வியை நடத்துவதற்கு சட்ட கட்டுப்பாடுகள் விதித்து புதன்கிழமை தீர்ப்பளித்தார்.
வேள்வியை நடத்த வேண்டுமானால், விலங்குகள் இறைச்சிக்காக வெட்டப்படும் கட்டளைச் சட்டத்தின் பிரிவு - 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, ஒரு விலங்கு வெட்டப்படும்போது மற்றைய விலங்கு பார்க்காத வகையிலும் விலங்குகள் வெட்டப்படும் இடத்தில் ஒரு துளி இரத்தம் சிந்தாத வகையிலும் இறைச்சிக்காக வெட்டப்படும் ஒவ்வொரு விலங்குக்கும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அனுமதி பெறப்பட்டும் வெட்டப்பட வேண்டும்.
அத்துடன், மிருக வதைக்கு எதிரான சட்டத்தில் கூறப்பட்டுள்ள எந்தவொரு சரத்தும் மீறாத வகையில் நடக்க வேண்டும் போன்ற சட்டக் கட்டுப்பாடுகளை விதித்தார். மேலும், இதனை இளவாலை பொலிஸார் கண்காணிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.
இந்த நிலையில், வேள்வியை நடத்துவதற்கு வலி. வடக்கு பிரதேச சபையிலிருந்து அனுமதி கிடைத்துள்ளது. இதற்கமைய இன்று சனிக்கிழமை தாங்கள் வேள்வியை நடத்த வுள்ளதாகவும் நரசிம்ம வைரவர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் ப.இராசேந்திரம் தெரிவித்தார். (ஜ-104)




உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட போது...

## 19 இல் இலங்கை வருகிறார் பாக். இராணுவத் தளபதி



ரஹீல் ஷரீப்

பாகிஸ்தான் இராணுவத்தின் தலைமைத் தளபதி ஜெனரல் ரஹீல் ஷரீப் நான்கு நாள் பயணமாக, எதிர்வரும் 19ஆம் திகதி இலங்கை வருகை தரவுள்ளார். அன்று பிற்பகல், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அவர் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். மேலும், இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்க உள்ளிட்டோரையும் சந்தித்துப் பேசவுள்ளார்.
இலங்கையில் தங்கியிருக்கும் போது பாகிஸ்தான் இராணுவத் தளபதி யாழ்ப்பாணத்துக்கும் வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
கடந்த இரண்டு மாதங்களில் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும் பாகிஸ்தானின் உயர் மட்ட இராணுவ அதிகாரி தலைமையிலான குழுவின் வரிசையில் இது மூன்றாவது என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய பரிபாலன சபை

கரணவாய், ஜூன் 12
கரணவாய் தெற்கு முதலைக் குழி முருகமூர்த்தி ஆலயத்தின் புதிய பரிபாலன சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.
கடந்த சனிக்கிழமை ஆலய முன்றிலில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் 30 இற்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர்.
புதிய பரிபாலன சபைத் தலைவராக வி.சி.சிவநாதனும், செயலாளராக வீ.தருமகுலசிங்கமும், பொருளாளராக சி.புஸ்பாகரனும், உப தலைவராக க.உலகநாதனும், உப செயலாளராக க.சு.மகாகணபதியும் தெரிவு செய்யப்பட்ட தோடு நிர்வாக சபை உறுப்பினர்களாக 10 பேரும் தெரிவுசெய்யப்பட்டனர். (108)


## வருடாந்த மஹோற்சவம்

ஆனைக்கோட்டை மூத்த நயினார்கோயில் வருடாந்த மஹோற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாள்களுக்குஉற்சவங்கள்நடைபெறும். சப்பரத் திருவிழா 25ஆம் திகதி புதன்கிழமை மாலை 6.30 மணிக்கும், 26 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறுவதோடு 28 ஆம் திகதி சனிக்கிழமைதிருக்கல்யாணஉற்சவத்துடன் நிறைவு பெறும். (க)

## நெடுங்குளம் வீதிப் புனரமைப்பு

குருநகர், ஜூன் 14
நெடுங்குளம்வீதிபுனரமைக்கப் படவுள்ளது. ஏ-9 வீதிக்கும் கொழும்புத்துறை கடற்கரை வீதிக்கும் இடையில் அமைந்துள்ள இந்த வீதி பல இடங்களில் சேதமடைந்து காணப்படுவதுடன் சில இடங்களில் வீதியின் மத்தியில் மணலே காணப்படுகிறது. இந்த வீதியை செப்பனிடும் நோக்கில் வீதியின் இரு மருங்கிலும் சிறிய மற்றும் பெரிய கற்கள் குவிக்கப்பட்டுள்ளன. (க-51)

# யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் மாநகர சபையின் சிற்றுண்டிச்சாலை



யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் மாநகர சபை சிற்றுண்டிச்சாலை ஒன்றை அமைத்துள்ளது. முனியப்பர் கோயிலுக்கு சமீபமாக அமைந்துள்ள இந்தச் சிற்றுண்டிச்சாலை விளையாட்டரங்கின் உட்பகுதியில் விளையாட்டு வீரர்களுக்கோ பார்வையாளர்களுக்கோ பயன்படத்தக்கதாக இல்லை. வீதியோரங்களில் நிறுத்தப்படும் வாகனங்களில் வரும் சுற்றுலாப் பயணிகளுக்கும் வாகனச் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான பயிற்சிகளை மேற்கொள்பவர்களுக்கும் பயன்படக் கூடியதாக அமைந்துள்ளது என்று மக்கள் தெரிவிக்கின்றனர். (வ-7-21)

## கண்காட்சி

கரணவாய், ஜூன் 14
வடமாகாணப் பாடசாலை மாணவர்களுக்கு இடையே புதிய கண்டுபிடிப்புக்கள் தொடர்பாக இலங்கைப் புத்தாக்குநர் ஆணைக்குழு நடத்தும் 'கண்டுபிடிப்புக்கள் கண்காட்சி' எதிர்வரும் 21 ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.
தேசிய கண்காட்சி 2014 இல் பங்குபற்றுவதற்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு ஏதுவாக இந்தக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.
தரம் 6-10 வரையான மாணவர்கள் கனிஷ்ட பிரிவுக்குள்ளும், தரம் 11-13 ஆம் வரையான மாணவர்கள் சிரேஷ்ட பிரிவுக்குள்ளும் உள்ளடக்கப்பட்டு இரு பிரிவுகளாக இந்தக் கண்காட்சி நடத்தப்படவுள்ளதுடன் இதில் முதல் மூன்று இடங்களைப் பெறும் போட்டியாளர்கள் தேசிய போட்டிக்குத் தெரிவு செய்யப்படுவர்.(க-108)

## சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 14
யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் 38 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வேனில் என்னும் காலாண்டு சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.
இந்த நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
வரவேற்புரையை யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினரான அ.ரங்கடம்பநாதன் ஆற்றவுள்ளார். தலைமை உரையை ப.கமிலஸ்ம், தலைவர் உரையை வி.கனகசபையும் ஆற்றவுள்ளனர். (க)

## முன்பள்ளி சிறார் விளையாட்டுப் போட்டி

கொழும்புத்துறை, ஜூன் 14
அரியாலை சனசமூக நிலைய முன்பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.
நிலையத் தலைவி திருமதி த.கமலாதேவி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக திருமதி அம்பிகா மாணிக்கவாசகமும், சிறப்பு விருந்தினராக திருமதி போல் தர்மகலாவும் கலந்து கொள்வர். (ஓ-135)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 14
வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கழகத்தின் அறிவகத்தில் இடம்பெறவுள்ளது.(க)

## கருத்துரை

சமகால கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் ஐந்தாவது நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை கோவில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள ஆவணக் காப்பகத்தில் இடம்பெறவுள்ளது. இதில் கடந்த 40 ஆண்டுகளாக புடைவை வடிவமைப்பில் நிகழ்த்தியிருக்கும் பயிற்சி, நுட்பம் மற்றும் கலையாக்கம் தொடர்பான உரைகள் இடம்பெறவுள்ளன. (க)


## மரண அறிவித்தல்கள்

### இராசரத்தினம் இரத்தினகோபால்



யாழ்ப்பாணம், நாச்சிமார் கோயிலடி மதவடியைப் பிறப்பிடமாகவும், தலையாழியை வதிவிடமாகவும் கொண்ட இராசரத்தினம் இரத்தினகோபால் கடந்த (10.06.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - சாரதாதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கோவிந்தசாமி - சிவகாமியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயலக்சுமியின் பாசமிகு கணவரும் அபிராமி, காலஞ்சென்ற சத்தியப்பிரியா மற்றும் கலைவாணி, கோபிராம் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் சுதர்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும், லக்சிகா, மதுஷா, யுவன்சங்கர் ஆகியோரின் அன்புப் பேரனும், இராஜகோபால், சந்திராதேவி, ஞானகோபால், சறோஜாதேவி, ஸ்ரீகோபால், ராகினிதேவி, சந்தான கோபால் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிருஷ்ணசாமி, இராசலக்சுமி, நாராயணசாமி, பாக்கியலக்சுமி, விஜயலக்சுமி, ஸ்ரீரங்கநாதன், காலஞ்சென்ற ஸ்ரீதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2014), சனிக்கிழமை பி.ப.2.00 மணியளவில் தலையாழி, சபாபதி லேனில் (தலையாழி வைரவர் கோயிலுக்கு அண்மையில்) உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சபாபதி லேன்
(தலையாழி வைரவர் கோயிலுக்கு அண்மையில்), யாழ்ப்பாணம்.
(49022) (12.3.6)
தகவல்: குடும்பத்தினர்.
077 257 7623

### இராமலிங்க ஐயர் அருளானந்தக் குருக்கள்



யாழ்ப்பாணம், வடமராட்சியைப் பிறப்பிடமாகவும், குருமன்காடு, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்க ஐயர் அருளானந்தக் குருக்கள் 11.06.2014 புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்க ஐயர் - பவளக்கொடி அம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கமலாம்பிகை அம்மாவின் அன்புக் கணவரும், சீதாலட்சுமி (கச்சேரி-வவுனியா), கமலேஸ்வர சர்மா (நல்லூர் பிரதேசசபை), கமலானந்தசர்மா (ஆஸ்திரேலியா), கமல நாதசர்மா (கச்சேரி - வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், வைத்தீஸ்வரசர்மா (நெளுக்குளம், வேம்படி, சித்திவிநாயகர் ஆலய பூச கர்), பிரதாஜினி (ஆசிரியை - யா/கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலை), கவிதா (ஆஸ்திரேலியா), பாரதி ஆகியோரின் அன்பு மாமனும், உதயவர்சிகா, சர்விதன், பார்க்கவன், நிவேதிகா, சுவேதிகா, ஷர்ணவன், ஓவியா, அதிஷையா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.06.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தட்சணாங்குளம் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

70/22, கோயில்வீதி,
குருமன்காடு, வவுனியா.
024 222 3423
(49021) (12.3.6)
தகவல்: குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி செல்வராணி
அருச்சுனன் அவர்களின் பாசமிகு கணவர்
சுவாமிநாதன் அருச்சுனன்
10.06.2014 இறைபதம் அடைந்தார். அவரின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர் நலன்புரிகழகம்.
யா/கனகரத்தினம் ம.ம.வி. (49025) (45.6.3)

## துயர் பகிர்கின்றோம்

அமரர்
சுவாமிநாதன் அருச்சுனன்



(உதவி இயக்குநர்
எஸ்.ஒ.எஸ் சிறுவர் கிராமம்
யாழ்ப்பாணம்)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

புவி வாழ்வு ஒரு முறைதான்
என்றுணர்ந்த உத்தமரே!
பலர் வாழ்வு செழித்திருக்க
பாதை வகுத்த வித்தகனே!
சிசுக்கள் சிறார்கள் சிறந்திருக்க
வேண்டும் என்ற
சிந்தைதனைச் சிரத்திற் கொண்டு
சிறப்புடனே பணி புரிந்தீர்
பூதவுடல் மண்ணினிலே
மறைந்தே தான் போனாலும் - உம்
புகழுடலோ என்றென்றும்
பூமியிலே நிலைத்திருக்கும்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எஸ்.ஒ.எஸ். குடும்பத்திற்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துளசிமாடம், யாழ்ப்பாணம். உரிமையாளரும், ஊழியர்களும்.
(49026)(7.6.3)

## மரண அறிவித்தல்



### தம்பிராசா தசராஜன் (ராதா-ஓட்டோ சாரதி)

24, இராஜேந்திரா வீதி, குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா தசராஜன்(ராதா) 10.06.2014 செவ்வாய்க் கிழமை காலமானார்.
அன்னார் தர்மசீலியின் கணவரும், காலஞ் சென்றவர்களான தம்பிராசா-அன்னபூரணம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற அலோசியஸ் மற்றும் மனோன்மணி தம்பதியரின் மருமகனும் கௌதமி, உஷாந்தன், அரவிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.06.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24, இராஜேந்திரா வீதி, குருநகர்.
தொ.பே.: 077 987 6039
(49020)(5.6.3) தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## இரத்தினம் குணசிங்கம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் குணசிங்கம் நேற்று (13.06.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம்-பூரணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி-கனகமுத்து தம்பதியரின் மருமகனும் பத்மராணியின் (கிளி) அன்புக் கணவரும், மௌலிகா, புவீந்தன், ஜகிந்தன், யோகிந்தன் ஆகியோரின் தந்தையும், பிரபாகரனின் மாமனும் அபிநாஷ், அபினேஷ், அபிலேஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.06.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**அளவெட்டி வடக்கு, அளவெட்டி.** (C/14768) (10) தகவல்: **குடும்பத்தினர்.**

# துயர் பகிர்கின்றோம்



எம்மோடு கல்விகற்ற செல்வி தனுஜா சுப்பிரமணியம் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பத்மராணி சுப்பிரமணியம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


மண்ணில் 05.11.1950 விண்ணில் 12.06.2014

**2009-2010 கணிய அளவையியல் வசதிகள் முகாமைத்துவ நண்பர்கள் மொறட்டுவ பல்கலைக்கழகம்** (49034) (10)

# மரண அறிவித்தல்

## தமிழ் வித்துவான் வேதவனம் ஆறுமுகம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகவும், மீசாலையை நிரந்தர வசிப்பிடமாகவும் கொழும்பு தெஹிவளையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்டிருந்த வே. ஆறுமுகம் (13.06.2014) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேதவனம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், கைலாயபிள்ளை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், திருமதி ஆதர்மாம்பாளின் அன்புக் கணவரும், தேவசேனா, திரிபுவனப்பெருந்தேவி, நடேசன், திரு மகள், பூமகள், கலைமகள் ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரபாலனின் ஆசை ஐயாவும், காலஞ்சென்றவர்களான முருகேசு, பொன்னையா, இரத்தினம் மற்றும் குமாரசாமி, மார்க்கண்டு, மாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வாரிதம்பி, சற்குணம் ஆகியோரின் மைத்துனரும், ஞானபண்டிதன், இராஜசிங்கம், வாசுகி, மனோகரன், ஸ்ரீரவீந்திரன், முரளீதரன், யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமனும், சாருமதி, சுமந்திரன், குயிலன், காயத்திரி, மதுராந்தகன், மதுராங்கி, செந்தூரன், ஐங்கரன், ஆரூத்திரன், அஞ்சலி, அஞ்சனா, அபிராமி, அங்கஜன், பைரவி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (14.06.2014) சனிக்கிழமை 9.30 தொடக்கம் மாலை 5 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (15.06.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணியளவில் தகனக் கிரியைக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: **குடும்பத்தினர்.**

**தொடர்பு: 0112726305, 077 136 9915** (C/14766) (10)

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் கந்தையா (சோமர்)



மட்டுவில் வடக்கைச் சேர்ந்த வல்லிபுரம் கந்தையா (சோமர்) ஆச்சாரியார் நேற்று (13.06.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம்-பாக்கியம் தம்பதியரின் மூத்தமகனும், ஆச்சிமுத்துவின் கணவரும், லோகேஸ்வரன்,பத்மாவதி, ஜெகதீஸ்வரன், ரதிகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் குசலகுமாரி, மயில்வாகனம், ஜெயக்கௌரி, ஜெயராணி ஆகியோரின் மாமனும், கிரிசங்கர், கிரிசாந், கிரிசுதன், ஜெயருபன், ஜெயமயூரன், ஜெயலலிசன், துவாரகா, மதனிகா, ஜெயவிசிகா, விதுசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நேற்று (13.06.2014) வெள்ளிக்கிழமை நடைபெற்று, பூதவுடல் வண்ணாத்திப் பாலம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(49035) (10) தகவல்: **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## செல்வி அலோசியஸ் சுபோதினி (சுபோ)



நாரந்தனை தெற்கைப் பிறப்பிடமாகவும், இல.55, பழைய பூங்காவீதி, கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சுபோதினி நேற்று (13.06.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அலோசியல்-லூர்தம்மா தம்பதியரின் அன்பு மகளும், மனோகரன் (கனடா), காலஞ்சென்ற ஜெயசீலன் மற்றும் றாஜினி, றஞ்சினி (ஜேர்மனி), காலஞ்சென்ற எட்மன் ஆகியோரின் சகோதரியும் அன்னமேரி கனடா), ஜெயமணி (மன்னார்), நாதன் சந்திரசேகரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும், அஜந்தன் (கனடா), சுமண்றாஜ் (ஆசிரியர் யா/புனித பத்திரிசியார் கல்லூரி), சாளினி (கனடா), கபில் (கனடா), றிச்சியா (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (14.06.2014) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலியின் பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

(49036) (10) **றாஜினி (கொய்யாத்தோட்டம்)**

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



நிற்குணானந்தன் சுபாங்கன்



நிற்குணானந்தன் அருள்நாயகி



மதுஜா யசோதரன்

தோற்றம் - 24.10.1995 தோற்றம் -15. 09. 1962 தோற்றம் -14.12.1987

அரக்கனின் அநியாய அழிப்பில் - 04.05.2014

*குடும்பத்தின் நலன் காத்தாய் அம்மா! இடர்நீங்கி ஒளிபிறக்கும்*
*வேளை தனில் கத்தி கொண்டு கழுத்தறுத்தான் பாவி*
*பொறியியல் ஆளனாகி குடும்பத்தின் துயர் துடைப்பேன் என*
*துணிந்து முனைந்தாய் தம்பி! தூக்கத்தில் வைத்து*
*மீளாத் துயில் கொள்ள வைத்தான் துரோகி*
*மாலை சூடி மணமகளாய் தாய்வீடு வந்தாய் குலமகளே!*
*உன் உயிர் குடித்து தீராபழி சேர்த்தான் கயவன்*
*நெஞ்சிருக்கும் வரைக்கு உங்கள் நினைவிருக்கும்....*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

04.05.2014அன்று எமது குடும்பத்துக்கு நேர்ந்த துயர் அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்து அஞ்சலிகள், ஆறுதல் கள் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைத்து அன்பு நெஞ்சங்களும் எமது மனமார்ந்த நன்றியறிதலை தெரி வித்துக்கொள்வதோடு, வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றவர்களுக்கு சிகிச்சை அளித்த யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் பணியாளர் அனைத்துத் தரப்பினருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், எமது உறவுகளின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (14.06.2014) சனிக் கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். நாளை மறுதினம் திங்கட்கிழமை 16.06.2014 நண் பகல் 12 மணியளவில் ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

**ஆவரங்கால் மேற்கு,**
**புத்தூர்.** (சி-14767) **குடும்பத்தினர்.**

# 16 ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் செல்லம்மா இராசையா

தோற்றம் 31.10.1917 மறைவு 28.05.2014



கடந்த 28.05.2014 அன்று இறைபதமடைந்த எமது ஆரம்பகால அங்கத்தவரான அமரர் செல்லம்மா இராசையா அவர்களின் மறைவையிட்டு ஆறாத் துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்ரீ காளி அம்பாள் சனசமூக நிலையம், காளி அம்மன் தேவஸ்தானம், கோப்பாய் மத்தி, கோப்பாய்.** (49031) (10)

# இயற்கை பேரிடர்களில் இருந்து பூமியைப் பாதுகாத்தல் அவசியம்

## வட மாகாண விவசாய அமைச்சர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம். ஜூன் 14

தற்போது இடம்பெற்றுவரும் இயற்கை பேரிடர்கள் எங்களை அழிப்பதற்கான அல்லது சனத்தொகையைக் கட்டுப்படுத்துவதற்கான பூமியின் தற்காப்புப் பொறிமுறைகள். இவற்றில் இருந்து நாம் மீண்டுவர பூமியைப் பாதுகாக்க வேண்டும் என்று வட மாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

வட மாகாண சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வார நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரியின் கல்லூரி அதிபர் ஜெயந்தி தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க பாட நூல்களையும் தாண்டி புதிய சிந்தனை அவசியம் வேண்டும். நாம் எமது உடல் வெப்பநிலையை மாறாது சீராக வைத்திருக்கிறோம். எமது இரத்தத்தில் குளுக்கோஸின் செறிவை மாறாது பேணிவருகிறோம். இவ்வாறு எமது உடற் தொழிற்பாடுகள் சம நிலையில் இயங்கி வருவதால்தான் நாம் எங்களை உயிர் என்கிறோம். எங்களைப் போன்றே பூமியும் தனது மேற்பரப்பின் வெப்ப நிலையை மாறாது பேணி வருகிறது. காற்றில் கரியமில வாயுவின் செறிவை, கடல் நீரில் உப்பின் செறிவை யெல்லாம் கூடவோ குறையவோ விடாது பேணி வருகிறது.

இவ்வாறு தன்னைச் சம நிலையில் வைத்திருக்கும் எண்ணற்ற செயற்பாடுகளில் பூமி இடைவிடாது இயங்கிக் கொண்டிருப்பதால் பூமியை ஒரு பேருயிராகக் கருதும் புதிய சூழலியற் சிந்தனைப் போக்கு வளர ஆரம்பித்திருக்கிறது.

பூமி என்ற பேருயிரில் குடியிருக்கின்ற எங்களுக்கும் பூமிக்கும் இடையிலான உறவு பன்னெடுங்காலமாகப் பரஸ்பரம் கொடுத்து வாங்கும் உறவு முறையாகவே இருந்தது. எங்களுக்கும் எங்களது உணவுக்குழாயில் குடித்தனம் செய்யும் இ.கோலி பக்ரீயங்களுக்கும் இடையில் இருக்கும் ஒன்றுக்கொன்று நன்மை செய்யும் ஒன்றியவாழி உறவைப் போன்றே நீடித்தது. ஆனால் நாம் இன்று பில்லியன் கணக்கில் பல்கிப் பெருகி, நுகர்வு வெறி தலைக்கேறிப் பூமியின் இழையங்களைச் சிதைக்கும் ஒட்டுண்ணிகளாக அல்லவா மாறிவிட்டிருக்கிறோம். எங்களில் தொற்றி ஒட்டுண் ண்ணிகளாக வாழ முயல்கின்ற கிருமிகளை எமது உடலின் நோய் எதிர்ப்புப் பொறிமுறை தாக்கி அழிக்கின்றது. அதே போன்றே, பூமி என்னும் பேருயிரும் தன்னைத் தற் காத்துக் கொள்வதற்காக ஒட் டுண்ணிகளாக மாறிவிட்டிருக்கும் எங்களை அழிப்பது தவிர்க்க முடியாதது.

எனவே பூமியைப் பாதுகாப்பதற்கு அல்லது தீங்கை ஏற்படுத்தாத நடவடிக்கைகளை நாம் அன்றாடம் மேற்கொள்வதன் ஊடாக இயற்கை அழிவில் இருந்து எம்மைப் பாதுகாப்போம்"-என்று மேலும் தெரிவித்தார். நிகழ்வின் போது பாடசாலை வளாகத்தில் மரநடுகையும் இடம்பெற்றது. (வ-14)

## பெருங்குளம் வீதியை புனரமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம். ஜூன் 14

நீண்டகாலமாக சேதமடைந்து காணப்படும் பெருங்குளம் வீதியைப் புனரமைப்பதற்கான ஏற்பாடுகளை வேலணைப் பிரதேச சபை மேற்கொள்வதாக வேலணை பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.சிவராசா தெரிவித்தார்.

குறித்த வீதி, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

எனினும், இந்த வீதியைப் புனரமைக்க இதுவரை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

இந்த நிலையில் பெருங்குளம் முத்துமாரி அம்பாள் ஆலயத் திருவிழா இடம் பெறவுள்ளதால் வீதியைப் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து பிரதேச சபை அதைப் புனரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பிரதேச சபை தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

(வ-7)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### விடுதலைப்

டுள்ளது.

சட்டவிரோத செயல்கள் தடுப்பு சட்டம் 5(1) பிரிவின்படி டில்லி உயர்நீதிமன்ற அமர்வு நீதிபதி ஜி.பி.மித்தல் தலைமையில் சட்டவிரோத செயல்கள் தடுப்பு தீர்ப்பாயம் அமைக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை சட்டவிரோத அமைப்பு என்று அறிவிப்பதற்கு முன்னைய மத்திய அரசான காங்கிரஸ் தெரிவித்த காரணம் சரியானதுதானா என்பதை அந்தந்தத் தீர்ப்பாயம் விசாரிக்கும் என்று குறிப்பிடப்படுகின்றது. அதன் மூலம், தடையை விலக்க கோரும் வாய்ப்பு தொடர்புடைய அமைப்புக்கோ, அதன் ஆதரவாளர்களுக்கோ வழங்கப்படுகிறது.

மத்தியில் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் அரசு பதவியிழப்பதற்கு இரு தினங்களுக்கு முன்னர் அதாவது கடந்த மே 14 ஆம் திகதியிட்ட மத்திய அரசின் அரசிதழில், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஐந்தாண்டுகள் தடை விதிக்கப்படுகின்றது என்றும் அதனை நியாயப்படுத்தி சில காரணங்களும் குறிப்பிடப்பட்டிருந்தன.

விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கையை மையமாகக் கொண்டு செயற்பட்டாலும் அதற்கு இந்தியாவில் அனுதாபிகளும், ஆதரவாளர்களும் உள்ளனர். இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒடுக்கப்பட்ட பிறகும், தனி ஈழக் கோரிக்கையை வலியுறுத்தி அந்த இயக்கத்தின் ஆதரவாளர்கள் பல்வேறு இடங்களில் செயற்படுகிறார்கள்.

அவற்றின் உறுப்பினர்கள் மீது சட்டவிரோத செயல்கள் தடுப்பு சட்டத்தின்கீழ், 2012 மே 14 ஆம் திகதி முதல் இவ்வாண்டு ஏப்ரல் மாதம் வரை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. சிலர் மீது வெடிமருந்து சட்டங்களின்படியும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளுக்கு சாதகமாகவும், தனி ஈழக் கோரிக்கையை ஆதரித்தும் இணையத்தளம் மூலம் வெளிநாடுகளின் வாழும் இலங்கை தமிழர்கள் சிலர் பரப்புரை செய்து வருகிறார்கள்.

இலங்கையில் விடுதலை புலிகளை வீழ்த்த இந்திய மத்திய அரசே காரணம் என்றும் அவர்கள் கூறிவருகிறார்கள், இதுபோன்ற பரப்புரைகளால் இந்தியாவில் உள்ள மிக முக்கிய பிரமுகர்கள் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே பிரிவினையை தூண்டும் இதுபோன்ற குழுக்களை ஊக்குவிக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தொடர்ந்து சட்டவிரோத அமைப்பாக கருத மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

அந்த இயக்கத்தினராலும், அதன் ஆதரவாளர்களாலும் இந்தியாவின் அமைதிக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. நாட்டின் ஒற்றுமைக்கு பாதிப்பு நேரும் என்பதால் விடுதலை புலிகள் இயக்கத்தை தீவிர வாத அமைப்பு என அறிவித்து அந்த இயக்கத்துக்கு விதிக்கப்பட்ட தடையை மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று காங்கிரஸ் கட்சி தலைமையிலான அரசு வெளியிடப்பட்டிருந்த அரசிதழில் காரணங்கள் கூறப்பட்டிருந்தன. (ற-5)

### ஐ.நா.

தெரிவித்துள்ளார்.

"இலங்கை அரசுக்கு விசாரணைக் குழு பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசு விசாரணைக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்காது விடினும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும். நன்கு பரீட்சிக்கப்பட்ட வழிமுறைகள் ஊடாக காத்திரமான முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். உள்நாட்டு அரசுகளின் ஒத்துழைப்பு இன்றி முன்னரும் இவ்வாறான விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன."- என்று அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு பன்னிருவர் கொண்ட குழுவொன்றை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அறிவித்துள்ளார். அந்தக் குழு விரைவில் தனது செயன்முறைகளை ஆரம்பிக்கவுள்ள நிலையில், விசாரணைகளுக்கு ஒத்துழைக்கப் போவதில்லை என்று இலங்கை அரசு கூறிவருகின்றது. இந்த நிலையிலேயே கொட்வில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ற)

### ஐ.நாவின்

அந்த நாடு குறித்து எமக்கு மூன்று கவலைகள் உள்ளன. போர்க்குற்றங்கள் குறித்து பொறுப்புக் கூறலின்மை, தமிழ் மக்களுடன் அர்த்த பூர்வமான நல்லிணக்கமின்மை, எதேச்சதிகார பாதையில் பயணித்தல் ஆகியனவே அவையாகும்.

இலங்கையில் சர்வதேச விசாரணையை நோக்கிய ஐ.நாவின் மனித உரிமை ஆணைக் குழுவின் நடவடிக்கைகளுக்கு கனடா முழுமையான ஆதரவு அளித்துள்ளது. பொது நலவாயத்தின் தலைமைப் பதவியை இலங்கை வகிப்பது அந்த அமைப்பின் மீது விழுந்த கறையாகும்"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ற-சி)

### அரச

அரசு ஊழியர்களில் 90 சதவீதமானோர் அரசுக்கு எதிராக வாக்களிக்கின்றனர். வடக்குத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் 90 சதவீதமான அரசு ஊழியர்கள் அரசு சார்ப்புக் கட்சிக்கே வாக்களிக்கின்றனர். ஏனைய மாகாணங்களில் இடம்பெறுவதைப் போன்று வடக்கு மாகாணத்திலும் எதிர்காலத்தில் அரச ஊழியர்கள் அரச கட்சிக்கே வாக்களிக்க வேண்டும்"- என்று அவர் கூறியுள்ளார்.

இதேவேளை- மேற்படி கலந்துரையாடலில், சமுர்த்தி உத்தியோகத்தர்களின் இடமாற்றங்களைத் தமக்கு அறிவிக்காமல் மேற்கொள்ள வேண்டாம் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தியுள்ளார். (ற-5)

### ஒன்று கூடும்

சபையின் 26ஆவது கூட்டத் தொடரில் அவர் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அனைத்துலக மனித உரிமைகள் சட்டங்களில் அமைதியாக ஒன்றுகூடும் உரிமை குறித்துகூறப்பட்டுள்ளபோதும், இலங்கை, இந்தியா, கியூபா, கம்போடியா, சிம்பாப்வே அகிய நாடுகளில் இந்த உரிமை மறுக்கப்பட்டு வருகின்றது என்று அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த உரிமையைக் கட்டுப்படுத்துவதற்கு, பொலிஸ் வன்முறை, துன்புறுத்தல் மற்றும் சட்டரீதியான அழுதங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் அவர் அதில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-5)

### நைஜீரியாவுக்கு

ஆசிய நாடு ஒன்றில் பயங்கரவாதத்தை முறியடித்த நாடு என்ற அடிப்படையில் அதன் அனுபவங்களை பகிர்ந்துக் கொள்ளும் வகையிலேயே இந்த பயிற்சி நடத்தப்பட்டன என்று கூறப்படுகின்றது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள நைஜீரிய இராணுவ உயரதிகாரி மார்சல் அலெக்ஸ்,

"இலங்கையின் அனுபவத்தை பெற்று நைஜீரியாவில் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளோம்."- என்று தெரிவித்துள்ளார். (ற)

### ஐ.நா. விசாரணை

எடுக்கப்பட்டது. ஐ.நா. விசாரணைக்குழுவுக்கு எதிரான பிரேரணை மீது இரண்டு நாள்கள் விவாதம் நடத்தப்பட்டு, 18 ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருப்பதால், இந்தத் தீர்மான வரைவை நிறைவேற்றுவதில் அரசுக்கு எந்த வித சிக்கலும் ஏற்படாத போதும், இவ்வாறான நடவடிக்கையால், சர்வதேச மட்டத்தில் இதற்கு எதிராகக் கடும் எதிர்ப்புகள் கிளம்பும் என்று அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஐ.நா.மனித உரிமைகள் சபையில் கடந்த மார்ச் 27 ஆம் திகதி 23 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், இலங்கை சம்பந்தமாக விசாரணைகளை முன்னெடுப்பதற்காக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக்குழுவுக்கு ஆட்சேபனை தெரிவித்தே ஆளும் கட்சியின் ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்த தீர்மான வரைவை முன்வைத்துள்ளனர்.

இந்தப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படும்போது அதை எதிர்த்து வாக்களிப்பதற்கும் ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு ஆதரவாக குரலெழுப்பவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவெடுத்துள்ளது என்று கூட்ட மைப்பின் ஊடகப்பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று எமக்குத் தெரிவித்தார்.

அதேவேளை, மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தி அது தொடர்பில் அரசு மூன்று மாதங்களுக்குள் நாடாளுமன்றில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும், குற்றவாளிகள் சட்டத்தின் முன்நிறுத்தப்பட வேண்டும் என்றும் கோரி நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் ஜே.வி.பி. நேற்று மனுவொன்றை கையளித்துள்ளது. அதற்கு அரசு வழங்கும் பதிலை அடிப்படையாகக் கொண்டே, ஐ.நா. குழு குறித்த பிரேரணையை ஆதரிப்பதா அல்லது இல்லையா என்று முடிவெடுக்கப்படும் என்று ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க கூறியுள்ளார். (ற-சி)

### இந்திய

அத்தியட்சகர் பி.விமலசேன இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு, சென்னையைச் சேர்ந்த குறித்த வியாபாரி, இங்கு வந்து புடைவை வியாபாரத்தில் ஈடுபடுகின்றார் என்றும், அவரிடம் இருந்து புடைவைகளைக் கொள்வனவு செய்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வியாபாரி ஒருவரே, பணத்தைக் கொடுக்காது ஏய்த்து வருகின்றார் என்றும் கூறப்படுகின்றது.

அதுகுறித்து யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார் என்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ற-4)

# அதிரடியால் கலக்கினார் நெய்மர் குரோசியாவை வென்றது பிரேசில்



அதிரடி காட்டிய பிரேசிலின் நெய்மர்

உலகக்கிண்ண உதைபந்தாட்டத்தின் முதல் போட்டியில் குரோசியா அணியை 3 - 1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி பிரேசில் அபார வெற்றி பெற்றது.

பிரேசில் நட்சத்திர வீரர் நெய்மரர் 29 மற்றும் 71 ஆவது நிமிடங்களில் கோல்களை அடிக்க, கடைசிக் கூடுதல் நேரத்தில் ஒஸ்கார் 3ஆவது கோலை அடித்தார்.

இதில் பிரேசில் அடித்த 2ஆவது கோல் பெரும் சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளது. காரணம், அது பெனால்டிகிக் கொடுக்கப்பட்ட கோல் ஆகும். பிரேசிலின் பலவீனங்களை ஆட்டத்தின் ஆரம்பத்தில் குரோஷியா வெளிப்படுத்திக் காட்டியது. அப்படிப்பட்ட முன்னேற்றம் ஒன்றில்தான் பிரேசில் கோலுக்கு அருகே சென்று நெருக்கடி கொடுக்க, பந்தை வெளியே தட்டிவிட முயன்ற பிரேசில் வீரர் மார்சலோ கோலுக்குள் பந்தை அடித்துவிட்டார். பிரேசில் கோல் காப்பாளர் ஜூட் சீசர் அதிர்ச்சியடையும் விதமாக குரோஷியாவுக்கு முதல் கோலை பிரேசிலே போட்டுக் கொடுத்தது.

இந்தச் சுய-கோலால் பிரேசில் ரசிகர்கள் அதிர்ச்சியடைந்து வாயடைத்துப் போயினர். மார்சலோவைத் தட்டிக் கொடுத்து சமாதானம் செய்தார் கோல் காப்பாளர் சீசர். இந்த முன்னேற்றத்துக்கு முன்னரேயே குரேஷியத் தாக்குதல் தொடங்கியது.

பிரேசிலை வீழ்த்துவோம் என்று கூறிய லூகா மோட்ரிக், இவான் பெரிசிக் விறுவிறுவென பந்தை முன்னே கொண்டுசென்றனர். பந்தை ஒலிவிக்கிடம் அடிக்க அவர் பந்தை தலையால் முட்ட கோல் இலக்கிலிருந்து அந்த அடி விலகிச் சென்றது. ஆட்டத்தின் 9ஆவது நிமிடத்திலேயே பிரேசிலுக்கு ஆட்டம் கொடுத்தது குரேஷியா.

அடுத்த 2ஆவது நிமிடத்தில் அதாவது ஆட்டத்தின் 11ஆவது நிமிடத்தில்தான் அந்த துரதிர்ஷ்டம் நிகழ்ந்தது. மீண்டும் குரேஷியா தாக்குதல் ஆட்டத்தில் பிரேசில் கோல் பகுதிக்குள் முன்னேற, இடது பக்கத்திலிருந்து மீண்டும் ஒலிவிக் ஒரு அடியை அடிக்கப் பந்து ஜெலாவிக் கால்களுக்கு இடையே புகுந்து செல்ல, மார்சலோ அதனை வெளியே தட்டி விடுவதற்குப் பதிலாக தங்கள் கோலுக்குள் அடித்துவிட்டார். குரோஷிய அணிக்கு முதல் கோலைப் போட்டுக் கொடுத்தது பிரேசில்.



ஆரம்ப வைபவத்தில் இடம்பெற்ற நடன நிகழ்வு

அதன் பிறகு உயிர்பெற்றது பிரேசிலின் ஆட்டம். ஒஸ்கார் அபாரமாக ஒரு பாந்தை விறுவிறுவென வலது புறத்திலிருந்து எடுத்துச் சென்றார். பிறகு ஒரு அபாரமான, துல்லியமான அடியை குரோஷியக் கோல் எல்லையை நோக்கி அடித்தார் ஒஸ்கார். ஆனால் பந்தை குரோஷியக் கோல் காப்பாளர் பிளெடிகோசா அபாரமாக வலது புறம் பாய்ந்து எழும்பி வெளியே தட்டி விட்டார்.

அதன் பிறகும் ஒஸ்கார் வலதுபுறம் குரோஷியாவுக்கு பெரிய அச்சுறுத்தலாகவே திகழ்ந்தார்.

இடைவேளைக்குப் பிறகு பிரேசிலின் ஆட்டத்தில் விறுவிறுப்பு மந்தமாகவே காணப்பட்டது. என்ன செய்வதென்று சற்றே தடுமறியது பிரேசில் அணி. அப்போது பயிற்சியாளர் ஸ்கோலாரி, ஹெர்னானஸ், பேர்னாட் என்ற இரண்டு வீரர்களைக் களத்துக்கு அனுப்பினார். குரோஷிய அணியோ 1-1 என்ற சமநிலைக்கே ஆட்டத்தை முடிக்க விரும்பியதுபோல் ஆடியது. அவ்வப்போது ஜெலாவிக் மற்றும் ஒலிவிக் வேகம் காட்டினாலும் முக்கால் வாசி அடிகளை நடுக்களத்திலிருந்து அடித்து விரயம் செய்தனர்.

அதன் பிறகுதான் சர்ச்சைக்குரிய அந்தக் கணம் வந்தது. பிரேசில் வீரர்கள் ஒரு தாக்குதல் ஆட்டம் தொடுக்க, பந்து குரோஷியக் கோல் எல்லைக்குள் சென்றது. பிரேசில் வீரர் பிரெட் ஒரு உதையை உதைக்க முன்னேறும்போது குரோஷிய வீரர் டெஜான் லவ்ரென் அவரைத் தடுத்ததாக முறையீடு எழ நடுவர் பிரேசில் சார்பாக பெனால்டி கிக் கொடுத்தார். பெனால்டி கிக்கை நெய்மர் அடிக்க மீண்டும் அதனை சரியாகவே கணித்த குரோஷிய வீரர் பந்தைத் தட்டிவிட்டும் கோலாகவே மாறியது. பிரேசில் 2-1 என்று முன்னிலை பெற்றது.

தொலைக்காட்சியில் காட்டப்பட்டபோது குரோஷிய வீரர் வேண்டுமென்றே செய்யவில்லை என்பது நன்றாகவே தெரிந்தது. பெனால்டி கிக் கொடுக்க வேண்டிய அளவுக்கு அது பவுல் இல்லை என்பதும் தெரிந்தது. இதனால் பெரிய சர்ச்சை எழுந்துள்ளது. பிரேசில் 2ஆவது கோல் அடித்தவுடன் குரோஷிய வீரர்களிடமிருந்து வசைமாரி வரத் தொடங்கியது.

இந்தச் சர்ச்சைக்குரிய பெனால்டி கிக்குக்குப் பிறகே குரோஷிய ஆட்டத்தில் ஒரு விறுவிறுப்பும் ஆக்ரோஷமும் கூடியது. அடிக்கடி பிரேசில் கோல் எல்லைக்குள் அவர்கள் சென்றனர். ஆனால் ஒரு மூன்று முறையாவது பிரேசில் கோல் காப்பாளர் சீசர் பந்துகளைத் தடுத்திருப்பார். அதுவும் ஒரு தருணத்தில் மூலை உதை ஒன்றை குரோஷிய வீரர் தலையால் உள்ளுக்குள் தள்ளியிருப்பார். அப்போது சீசர் எழும்பித் தட்டிவிட்டார். அது மீண்டும் ஒலிவிக்கிடம் செல்ல அவர் அதை கோலை நோக்கி அடிக்கிறார் அதனையும் தட்டிவிடுகிறார் மீண்டும் அது கோலை நோக்கி அடிக்கப்படுகிறது அதனையும் தடுக்கிறார் சீசர். கடைசியில் குரேஷியா மேலும் ஒரு ஆக்ரோஷ ஆட்டத்தில் பிரேசில் எல்லைக்குள் புகுந்து கோல் அடிக்கிறது. ஆனால் ஒலிவிக், பிரேசில் கோல் காப்பாளரை சீசரை முறையற்ற விதத்தில் எதிர்கொண்டார் என்று அந்தக் கோல் நடுவரால் மறுக்கப்படுகிறது. இதுவும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

கடைசியில் இந்த அதிர்ச்சியிலிருந்து குரேஷியா மீள முடியாத ஒரு தருணத்தில் அபாய வீரர் ஒஸ்கார் நடுக்களத்திலிருந்து ஒரு பந்தை எடுத்துச் செல்கிறார். அங்கு குரேஷியத் தடுப்பு வீரர்கள் இல்லை. கோல் காப்பாளரும் பிரேசில் வீரர் ஒஸ்காரும் நேருக்கு நேர் இருந்தனர். ஒஸ்காரின் உதை 3ஆவது கோலாக மாறுகிறது. இது 90 நிமிடங்களுக்குப் பிறகு கூடுதல் நேரத்தில் போட்ட கோல் ஆகும்.

சர்ச்சைக்குரிய முறையில் பிரேசில் வெற்றி பெற்றது. நடுவர்கள் பிரேசில் சார்பாகச் சற்று கூடுதலாகச் செயல்பட்டதாகவே குரேஷியப் பயிற்சியாளர் தெரிவித்தார். நெய்மர் கூறுகையில், உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் இரட்டைக் கோலுடன் தொடங்கியுள்ளது மகிழ்ச்சியாக இருக்கிறது என்றார். (த)




தனது தீவிர ரசிகை ஒருவரின் ரி-சேர்ட்டில் கையொப்பமிடுகிறார் நட்சத்திர வீரர் கிறிஸ்ரியானோ றொனால்டோ. (த)

## குரோசியா அணியின் முகாமையாளர் சீற்றம்



உலகக்கிண்ண உதைபந்தாட்ட முதல் போட்டியில் சர்ச்சைக்குரிய பெனால்டி கிக் கொடுத்த ஜப்பானிய நடுவர் மீது குரோசியா அணியின் முகாமையாளர் நிகோ கோவக் கடும் விமர்சனம் முன்வைத்துள்ளார். ஆட்டத்தின் 29ஆவது நிமிடத் தில் குரோசியா வீரர் லவ்ரென், பிரேசில் வீரர் பிரெட் என்பவரை முறை தவறித் தடுத்ததாக ஜப்பானிய நடுவர் நிஷிமோரா பிரேசில் சார்பாகப் பெனால்டி கிக் கொடுத்தார். நெய்மர் அதனை கோலாக மாற்றியது பிரேசிலுக்கு முன்னிலை பெற்றுத் தந்தது. நடுவரின் இந்த முடிவு மிகவும் தவறானது என்கிறார் நிகோ கோவக், அது பெனால்டி என்றால் நாங்கள் உதைபந்து ஆடவேண்டியத் தேவையில்லை. கூடைப்பந்துதான் ஆடவேண்டும். ஏனெனில் அது கூடைப்பந்தாட்டத்தில்தான் பெனால்டி ஆகும். நாங்கள் மிகவும் கடினமாக உழைத்து உலகக் கிண்ணத்துக்குத் தகுதி பெற்று ஆடவந்தோம். ஆனால் இங்கு இந்த வகை ஆட்டத்துக்கு லாயக்கற்ற ஒரு நடுவர் பணியாற்ற வைக்கப்படுகிறார். இனி விளையாடுவது என்பதில் என்ன அர்த்தம் இருக்க முடியும்? ஏனெனில் இது இழிவானதாகும். மேலும் லுகா மோட்ரிக்கை நெய்மர் முழங்கையை வைத்து தடுத்தது நெய்மருக்குச் சிவப்பு அட்டை வழங்க வேண்டிய பவுல் ஆகும். ஆனால் அது கொடுக்கப்படவில்லை- இவ்வாறு கூறினார் நிகோ கோவக். (த)

## சொந்த மண்ணில் பிரேஸிலை வீழ்த்துவது மிகக்கடினமானது




பிரேஸில் அணியை உள்ளூரில் வீழ்த்துவது என்பது கடிமானது என்று நெதர்லாந்து உதைபந்தாட்ட அணியின் முன்னாள் வீரர் வான் ஹூ ஜ்டாங் கூறியுள்ளார்.

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் பிரேஸிலில் கோலாகலமாக தொடங்கியுள்ளன. இந்தத் தொடரின் முதல் போட்டியில் பிரேஸில் குரோஷியாவை வீழ்த்தித் தனது ஆதிக்கத்தைக் காட்டியது.

இது பற்றி வான் ஹூ ஜ்டாங் கூறுகையில்; உள்ளூரில் பிரேஸிலை வீழ்த்துவது கடினம். போட்டி அட்டவணைப்படி 'பி' பிரிவில் இடம் பெற்றுள்ள எங்கள் அணி முதலிடத்தைப் பெற்றால் தான் அடுத்த சுற்றில் பிரேஸில் அணியுடம் மோதும் வாய்ப்பைத் தவிர்க்க முடியும்.

எனவே எங்கள் பிரிவின் முதல் ஆட்டத்தில் நாங்கள் ஸ்பெய்னிடம் தோற்கக் கூடாது என்று கூறியுள்ளார். (கு)

# சச்சினை வம்புக்கிழுத்த கோவா மாநில முதல்வர்



உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை காண கோவா மாநிலத்தை சேர்ந்த 3 அமைச்சர்கள் மற்றும் 6 சட்டசபை உறுப்பினர்கள் பிரேஸில் செல்ல அம்மாநில அரசு அனுமதித்துள்ளது.

இதற்கான பயணச் செலவுகளுக்கு 89 லட்சம் இந்திய ரூபா ஒதுக்கி இருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதை கோவா முதல்வர் மனோகர் பாரிக்கர் நியாப்படுத்தியது மட்டுமல்லாமல் இந்திய அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் சச்சினையும் விமர்சனப்படுத்தி பேசியுள்ளார்.

காலிறுதி மற்றும் அரையிறுதிப் போட்டிகளைக் காண்பதற்கு கோவா மாநில அரசு ஆளுங்கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதிகளை அனுப்புகிறது.

இதில் கோவா மாநில விளையாட்டுத் துறை அமைச்சர் ரமேஷ் தவாத்கர், மீன்வளத் துறை அமைச்சர் அவர்ட்டானோ பர்டோ, மின்துறை அமைச்சர் மிலிந்த் நாயக் மற்றும் 6 சட்டசபை உறுப்பினர்கள் பிரேஸிலுக்குப் பயணமாக உள்ளனர்.

இது தொடர்பாக கோவா மாநில அரசை கடுமையாக விமர்சித்துள்ள காங்கிரஸ் கட்சி, பொதுமக்கள் பணம் தவறாக பயன்படுத்தப்படுவதாகவும், அமைச்சர்கள் மற்றும் எம்.எல்.ஏக்களின் இந்த பயணத் திட்டத்தை அரசு நிறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளது.

ஆனால் கோவா தரப்பில் இந்த பயணம் நியாயமானதே என்றும், உலகக்கிண்ண உதைபந்தாட்டம் பற்றி அறிந்து கொள்ள செல்லும் பயணம் மட்டும் தான் என்றும் கூறப்பட்டுள்ளது.

இது மட்டுமல்லாமல் கேவா முதல்வர் பாரிக்கர், சச்சின் டெண்டுல்கர் நல்ல வீரராக இருக்கலாம். ஆனால் நல்ல அணித் தலைவராக முடியாது. அவரைப் போன்றவர்களால் போட்டிகளை நடத்த முடியாது.

எனவே அரசியல்வாதிகளை அனுப்பினால் தான் அவர்கள் போய் விளையாட்டுப் போட்டி குறித்து அறிந்து வருவார்கள். அதன் மூலம் இங்கு சர்வதேச போட்டிகள் நடைபெறும்போது அதை சரியான முறையில் அவர்கள் நடத்த முடியும் என்று கூறியுள்ளார். (கு)

மாற்றமுடியாதது எதுவுமில்லை பலர் வாழ்வில் பல மாற்றங்கள்!
"SANEYA HERBAL CARE"
262, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, ஆயுள்வேத வைத்தியசாலை
பிரசித்தி பெற்ற கருமை நிறநீக்கம் உட்பட அனைத்து சருமப்பிரச்சினைகளுக்கான தீர்வு.
உடற்பருமன் கூடுதல், குறைதல், தலை முடி சார்ந்த சிகிச்சைகள்
முற்பதிவு அவசியம்: 0777351954
பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டவை

## தலைவராக ஸ்ரீநிவாசன் பதவியேற்கலாம்

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவர் ஸ்ரீநிவாசன், சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவர் பதவியை பொறுப்பேற்காமல் தடுக்குமாறு பீகார் கிரிக்கெட் சம்மேளனம் பதிவு செய்த வழக்கை நீதிமன்றம் ரத்துச் செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஐ.பி.எல் சூதாட்டச் சர்ச்சையில் ஸ்ரீநிவாசனுக்குத் தொடர்பு இருக்கலாம் என்ற அடிப்படையில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவராக ஸ்ரீநிவாசன் பதவியில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டார்.

ஊழல் குற்றச்சாட்டு உடைய ஒருவர் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றுக் கொண்டு இருக்கும் வேளையில் சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவர் பொறுப்பை ஏற்கக்கூடாது என்று கூறியே பீகார் கிரிக்கெட் சம்மேளனம் குறித்த வழக்கை பதிவு செய்தது.

ஐ.பி.எல் சூதாட்ட விசாரணைகளின்போதும் குறித்த விடயம் வழக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதும் நீதிமன்றம் ஸ்ரீநிவாசன் சர்வதேசக் கிரிக்கெட் சபையில், இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் பிரதிநிதியாக செல்வதிலோ, தலைமைப் பொறுப்பை ஏற்பதிலோ ஆட்சேபனை இல்லை எனத் தெரிவித்து இருந்தது.

ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி வழங்கப்பட்ட முடிவைக் கருத்தில் கொண்டே இந்த முடிவு வழங்கப்பட்டுள்ளபோதும் இந்த விடயம் தொடர்பான விவாதம் இம்மாதம் 16ஆம் திகதி நடைபெறும் எனவும் நீதி மன்றம் மேலும் தெரிவித்துள்ளது. (கு)

## லண்டனிலிருந்து பிரேஸிலுக்கு ஸ்கூட்டரில் சென்றார் ரசிகர்

உலகக்கிண்ணத் தொடரின் இங்கிலாந்துப் போட்டிகளைக் காண அந்நாட்டின் ரசிகர் வெஸ்பா ஸ்கூட்டரிலேயே லண்டனிலிருந்து பிரேஸிலுக்குப் பயணம் செய்துள்ளார்.

கிறிஸ் ஹாலெட் என்ற 44 வயதான இந்த உதைபந்து ரசிகர் சுமார் நான்கு மாத காலம் ஸ்கூட்டரிலேயே பயணம் செய்து 24,000 கிலோ மீற்றர் தூரத்தை கடந்து பிரேஸிலை அடைந்துள்ளார்.

மேலும் உலகக்கிண்ண உதைபந்தில் பங்குபெறும் 32 நாடுகளில் 18 நாடுகளை தனது ஸ்கூட்டரிலே கடந்து சென்றுள்ளார் என்றும், இந்த ஸ்கூட்டர் பயணமானது விமானத்தில் செல்வதை விட இன்பமாக இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். (கு)

**கணினி மலிவு விற்பனை**



HP COMPUTER (FULL SET)

19,750



ONE YEAR WARRANTY
இலவசம்: NK PHONE (1280)

ST.ANTONY'S
187, K.K.S. ROAD.
JAFFNA TOWN
021 222 4865
0750698608

**One Day Training Programme**
**Isometric Drawings in Auto CAD**
Commence on:15-06-2014 Sunday
Lecturer By: K.N. Muguntha(?)
Cert.in Auto CAD(2D-3D) — Cert.in Advance 3D Modeling
University of Peradeniya — University of Moratuwa
**Architectural CAD Centre**
**Contact No:0718617972**

**வான் தேவை**

ஹயேஸ் ரொயாற்ற வான் ஆங்கில எழுத்து இலக்கம் (லீசிங்குடன்) விற்பனைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு: 075 776 5192 (49029) (7.8.3)

## கண்ணீர் அஞ்சலி



யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் ஆசிரியையாகக் கடமைபுரியும் திருமதி தி. இராஜசிங்கம் அவர்களின் அன்புத் தந்தை

அமரர்

**வேதவனம் ஆறுமுகம்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி
(சி/14784) (10)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி பேட்டில்லா திலகா பத்திநாதன் அவர்களின் அன்புத் தந்தை

**தீயோ பிரான்சிஸ்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதிய நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்

**முருகேசு செல்வராசா**

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு செல்வராசா நேற்று (13.06.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் தனாகரன் (கனடா), தார்மீகா, யதுசாயிரா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2014) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வட்டுக்கோட்டை. (49043) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**திருமதி திரேஸ்மலர் அடைக்கலமுத்து**



குளமங்கால் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேஸ்மலர் அடைக்கமுத்து நேற்று (13.06.2014) இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அடைக்கலமுத்துவின் மனைவியும் சூசைப்பிள்ளை, பிரான்சிஸ் சேவியரின் சகோதரியும் அன்ஸ்ரனின் மாமியும் எலிசெபத்தின் சிறிய தாயாரும் செல்வமாணிக்கத்தின் மாமியும் சுபாஷினி (ஆசிரியை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), சுதர்ஷினி, சுதர்ஷன் ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (14.06.2014) சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

46, புறூடி லேன்,
அரியாலை.

தகவல்: ம.பிரான்சிஸ்சேவியர் (சகோதரன்)

## மரண அறிவித்தல்



**ஐசாக் அன்ரனிதாஸ்**

நவாலியை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐசாக் அன்ரனிதாஸ் நேற்று (13.06.2014) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐசாக் - தேவநேசம் தம்பதியரின் இளைய மகனும் அருளம்மாவின் அன்புக் கணவரும் அஜித்குமார் (தீபன்), அஜெஜிகா, சஜித்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஐசாக் யேசுதாசனின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை 16.06.2014 திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பின்னர் சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி தெற்கு. தகவல்: மனைவி, பிள்ளைகள்.

# மானிப்பாய் ஏஞ்சல் அணியை வீழ்த்தியது உடுவில் மகளிர்



மானிப்பாய் ஏஞ்சல் உடுவில் மகளிர் அணிகள் மோதும் காட்சி

வலி.வடக்கு. ஜூன் 14
யாழ் மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திவரும் 13 வயதுப் பிரிவு பெண்களுக்கான கூடைப் பந்தாட்டப் போட்டியின் ஆட்டம் ஒன்றில் உடுவில் மகளிர் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.
உடுவில் மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலையும் உடுவில் மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டன.
போட்டி ஆரம்பமாகி முடிவடையும் நேரம் வரை மைதானத்தில் உடுவில் மகளிர் கல்லூரி தமது ஆதிக்கத்தை நிலை நாட்டத் தவறவில்லை.
நான்கு கால் பாதி ஆட்டங்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று கால் பாதி ஆட்டங்களிலும் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணி புள்ளிகள் எதனையும் பெறாத நிலையில் இறுதி கால் பாதி ஆட்டத்தில் இரண்டு புள்ளிகளைப் பெற்றது. ஆட்ட நிறைவில் உடுவில் மகளிர் கல்லூரி 18:02 புள்ளிகள் என்ற அடிப்படையில் ஏஞ்சல் பாடசாலை அணியை வென்றது. (த-86)

## கூடைப் பந்தாட்டத்தில் வெற்றிபெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 14
யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் யாழ்.மாவட்டத்தில் முதன் முறையாக லீக் முறையில் நடத்தப்படும் இளையோருக்கான கூடைப்பந்தாட்டத் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. கடந்த புதன்கிழமை யாழ்.மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக்கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 23:22 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. யாழ்.மத்தியகல்லூரிகூடைப் பந்தாட்டத் திடலில் இடம் பெற்ற 15வயதுப் பிரிவு ஆண்கஞ்க்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.
இதில் யாழ்.இந்துக் கல்லூரி அணி 36:24 என்ற புள்ளி அடிப் படையில் வெற்றி பெற்றது.
உடுவில்மகளிர்கல்லூரிகூடைப் பந்தாட்டத் திடலில் இடம் பெற்ற 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை அணி மோதிக் கொண்டது. இதில் வேம்படி மகளிர் உயர் தர பாடசாலை அணி 12:9 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 14
வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ரொப்பாஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழகம், மகாத்மா சனசமூக நிலையம் ஆகியவை யாழ். மாவட்ட ரீதியாக மின்னொளியில் நடத்தும் 5 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மகாத்மா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது
இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்.ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உரும்பிராய் உதயசூரியன் விளையாட்டுக்கழக 'பி' அணி மோதவுள்ளது.
மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உரும்பிராய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இரவு 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தம்பாட்டி காந்தி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
(த-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 14
யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் லீக் முறையில் நடத்தும் மின்னொளி தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சக்திவேல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சிவகுமாரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவசக்தி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நீயூட்டன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## மகாத்மா நடத்தும் உதைபந்தாட்டம்; பரபரப்பான ஆட்டங்களில் அணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 14
வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ரொப்பாஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழகம், மகாத்மா சனசமூக நிலையம் ஆகியவை யாழ். மாவட்ட ரீதியாக மின்னொளியில் நடத்தும் 5 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மகாத்மா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இதில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும், நாவாந்துறை கலை வாணி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணிக்கும், புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
உரும்பிராய் திருக்குமாரன் விளையாட்டுக்கழக அணிக்கும், வல்வெட்டித்துறை கருணாகரன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் தலா 2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
வெற்றி தோல்வி காண்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
இதில் உரும்பிராய் திருக்குமாரன் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும், அராலி திருமகள் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



வட மாகாண ரீதியில் பாடசாலைகளுக்கிடையே 19 வயதுக்குட்பட்ட மாணவர்களில் ஆண்கள் பிரிவில் நடத்தப்பட்ட கராத்தே (குமித்தே) போட்டியில் கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மாணவன் செல்வன் மு. முரளிதரன் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கம் பெற்று பாடசாலைக்கு பெருமையை சேர்த்துள்ளார். (த-288)

## இலங்கைக்கு இரண்டாவது பதக்கம்



சீனா தாய்பேயில் நடைபெற்று வரும் 16ஆவது ஆசிய ஜூனியர் சம்பியன்ஷிப் போட்டிகளில் ஆடவர் பிரிவு 100 மீற்றர் ஓட்டத்தில் இலங்கையின் ஹிமாஷ ஹேஷான் வெள்ளிப்பதக்கத்தை வென்றுள்ளார். இந்தப் போட்டியில் 10.49 செக்கன்களில் ஓட்ட தூரத்தை கடந்தார்.
இதேவேளை -பெண்களுக்கான முப்பாய்ச்சல் போட்டியில் இலங்கையின் விதுஸா லக்ஸானி வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார். (த)



நேற்று அதிகாலை இடம்பெற்ற உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் முதலாவது ஆட்டத்தைக் காண வந்த ஐ.நா.செயலர் பான் கீ மூன், பிரேசில் ஜனாதிபதி டில்மா றுசெப், சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் செப் பிளாட்டர் ஆகியோர் சந்தித்துப் பேசிய போது. (த)

## நடந்து சென்ற இங்கிலாந்து ரசிகர்கள்

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை நேரில் கண்டு இரசிப்பதற்காக இங்கிலாந்து உதைபந்தாட்ட அணியின் ரசிகர்கள் நால்வர் பிரேஸிலுக்கு நடந்தே சென்றுள்ளனர்.

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் பிரேஸிலில் ஆரம்பமானது. இப்போட்டிகளைக் காண இங்கிலாந்து ரசிகர்களான அடம் பேர்ன்ஸ்.டேவிட் பெவிக். பீட் ஜோன்ஸ்டன் மற்றும் பென் ஒல்ஸென் ஆகிய நால்வரே பிரேஸிலுக்கு நடந்து சென்றுள்ளனர்.

ஆர்ஜென்ரீனாவின் மெண்டொசா நகரிலிருந்தே இவர்கள் ஒன்றிணைந்து பிரேஸிலின் போர்ட்டோ அலேகிரி நகருக்கு 1,966 கிலோ மீற்றர் தூரத்தை நடந்துசென்றுள்ளனர். இதன் போது பிரேஸில் வறட்சியில் வாடும் ஏழை மக்களுக்குக் கிணறு தோண்டுவதற்காக 20 ஆயிரம் பவுண்ஸ்கள் (சுமார் 44 இலட்சம் ரூபா) நிதி திரட்ட முயற்சித்துள்ளனர்.

போட்டிகள் ஆரம்பமாகும் தினத்தில் பிரேஸில் நகரை அடைய எண்ணியபோதிலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை 3 நாள்கள் முன்பதாவே இவர்கள் அந்நகரை சென்றந்தடைந்துள்ளனர்.

பயணம் முடிந்துவிட்ட போதிலும் வீதிகளில் தங்கியிருப்பதை நாங்கள் தவறவிடுவதாக எண்ணுவதுடன் இது வாழ்நாள் பயணமாகவும் அமைந்துள்ளது.

29 நகரங்களையும் பல கிராமங்களைக் கடந்து வந்த பயணத்தில் ஏராளமான உதைபந்து ரசிகர்களைச் சந்தித்துள்ளதுடன் கடைசி வாரப் பயணத்தில் நாய் ஒன்று பயணத் துணையாக இவர்களுடன் இணைந்துள்ளது. (ரு)



## றொனால்டோவின் சாதனை முறியடிப்பாரா குளோஸ்?

ஜேர்மனியை சேர்ந்த மிரோஸ்லவ் குளோஸ், பிரேசிலைச் சேர்ந்த றொனால்டோவின் சாதனையை முறியடித்து உலக சாதனை படைப்பார் என்று உதைபந்தாட்ட ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

பிரேசிலை சேர்ந்த றொனால்டோ உலகக் கிண்ணப் போட்டியில் அதிக கோல்கள் அடித்த சாதனைக்குச் சொந்தகாரராக உள்ளார்.

அவர் 1998, 2002, 2006 ஆகிய 3 உலகக் கிண்ணத்தில் விளையாடியுள்ள 19 ஆட்டங்களில், 15 கோல்கள் அடித்துள்ளார்.

அவரது இந்த அதிரடிச் சாதனையை ஜேர்மனி வீரர் மிரோஸ்லவ் குளோஸ் இந்த உலகக் கிண்ணப் போட்டியில் முறியடிக்க அதிக வாய்ப்புள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

குளோஸ் இதுவரை விளையாடியுள்ள 2002, 2006, 2010 ஆகிய 3 உலக கிண்ணத்தில் 14 கோல்கள் அடித்துள்ளார்.

இந்த உலக கிண்ண போட்டியில் விளையாடும் குளோஸ் இன்னும் 2 கோல் அடித்தால் றொனால்டோவின் சாதனையை முறியடித்து அதிக கோல் அடித்த வீரர் என்ற பெருமையைப் பெறுவார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## உலகக் கிண்ணத் தொடக்க விழாவில் ரசிகர்களை உறைய வைத்த லோபஸ்



உலகக்கிண்ணத் தொடக்க விழாவில் அமெரிக்கப் பாடகியும், நடிகையுமான ஜெனிபர் லோபஸ் ரசிகர்களை உற்சாகப்படுத்தினார்.

இந்த தொடக்க நிகழ்ச்சியானது சாவ் போலோ நகரில் உள்ள கரிந்தியன்ஸ் அரீனா மைதானத்தில் பிரமாண்டமாக நடைபெற்றது. ஜெனிபர் லோபஸ், பிட்புல் மற்றும் பிரேசிலைச் சேர்ந்த பாடகி கிளாடியா லீயட் ஆகியோர் உதைபந்தாட்டப் போட்டியின் பாடலான 'வீ ஆர் ஒன்' பாடலைப் பாடினர்.

இவர்களின் ஆடல், பாடல் நிகழ்ச்சியால் ரசிகர்கள் கூட்டம் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தது. பாடலை பாடி முடித்த பிறகு ஜெனிபர் லோபஸ் ரசிகர்களின் அன்பைப் பார்த்து உருகிக் கண்கள் கலங்கி நெஞ்சில் கை[illegible] வைத்து நன்றி தெரிவித்தார். கடந்த உலகக் கிண்ண தொடரின் தொடக்க விழாவில் அமெரிக்க பொப் பாடகி ஷகிரா 'வக்கா வக்கா' என்ற பாடலைப் பாடினார். அந்தப் பாடல் உலகமெங்கும் கொடிகட்டிப் பறந்தது.

இந்நிலையில் தற்போது ரசிகர்கள் 'ஓலே ஓலா' என்ற இந்த ஆண்டுக்கான பாடலை பாட ஆரம்பித்து விட்டார்கள். (ரு)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna

கற்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 1883 PARIS இல் நிறுவப்பட்டது. யாழில் 1976 முதல். 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள். அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES பிரெஞ்சு மொழிபெயர்ப்புகள் AUDIO-VISUAL AIDS, பிரமாண்டமான நூலகம்.

குறிப்பு:
பிரான்ஸில் பிரெஞ் கற்பதற்கு AF இன் CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF A1, A2 = ILTES AF இன் கிளைகளில் மட்டுமே எழுத முடியும்) மட்டுமே அங்கீகரிக்கப்படுகின்றன.
தனிநபர்களிடம் சென்று பணத்தையும், நேரத்தையும் இழக்காதீர்கள்.

பிரான்ஸ் செல்வோர் அனுமதிகளுக்கு முந்துங்கள்
14.06.2014 11.00a.m
021 222 8093 61, கச்சேரி, நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி → கிறிஸ்தவ ஆலயம் ✝ → Alliance Française
ஆரியகுளம் → நக்கா றோட் (J/John Bosco's School) → AF
(48946) (7.6.3)



## நெய்மரின் ஆசை நிறைவேறுமா?

ரசிகர்கள் தங்களின் ஆதரவை பிரேசில் அணிக்கு கொடுத்தால் பிரேசிலை உலகக்கிண்ணத்தில் வீழ்த்துவது கடினமாகவே இருக்கும் என நெய்மர் கூறியுள்ளார்.

பிரேசில் அணி தனது முதல் ஆட்டத்தில் குரேஷியாவை வீழ்த்தி தனது முதல் வெற்றியைப் பெற்றது. இதில் பிரேசில் அணியின் இளம் நட்சத்திர வீரர் இரண்டு கோல்கள் அடித்து பிரேசில் அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.

வெற்றிக்குப் பிறகு பேட்டியளித்த நெய்மர், உலகக்கிண்ண உதைபந்தாட்டப் தொடரில் முழுவதும் ரசிகர்கள் தங்கள் உற்சாகத்தையும், ஆதரவையும் பிரேசில் அணிக்கு கொடுத்தால் நம் அணியை வீழ்த்துவது கடினம்.

மேலும் எனக்கு அதிக கோல் அடித்த வீரராக ஜொலிக்கவேண்டும் என்ற ஆசை கிடையாது.எனது விருப்பம் பிரேசில் அணி உலக சம்பியன் ஆக வேண்டும் என்பது தான் என்று கூறியுள்ளார். (த)

மிக குறைந்த விமான கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கொழும்பு - மதுரை | - 16500 | RTN |
| கொழும்பு - சென்னை | - 21900 | RTN |
| கொழும்பு - திருச்சி | - 22400 | RTN |
| கொழும்பு - டோகா | - 26000 | O/W |
| கொழும்பு - பெங்களூர் | - 27600 | RTN |
| கொழும்பு - மலேசியா | - 30000 | RTN |
| கொழும்பு - சிங்கபூர் | - 30200 | RTN |
| கொழும்பு - பிரான்ஸ் | - 45500 | O/W |
| கொழும்பு - லண்டன் | - 44800 | O/W |
| கொழும்பு - சுவிஸ் | - 83500 | RTN |
| கொழும்பு - கனடா | - 105700 | O/W |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்
யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்
Nation Popular Travels & Tours
#128,Brown Road, Jaffna
128,பிறவுண் வீதி யாழ்ப்பாணம்
0114375357, 0773083820
0214 920 920
நீங்கள் பறந்து செல்ல நாங்கள் சிறகுகளாகின்றோம்

பணியாளர்கள் தேவை

பிரபல்யமான உல்லாசப் பயணிகள் விடுதி ஒன்றிற்கு கீழே குறிக்கப்பட்டுள்ள பணியாளர்கள் தேவை.
1) சமையலாளர் (Cook)
2) பரிமாறுபவர் (Waiter) (3 மொழியும் தெரிந்தவர் விரும்பத்தக்கது)
3) காவலாளர் (Security guard)
4) தோட்ட வேலை செய்பவர்

இன்று (14.06.2014) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கும் 4 மணிக்குமிடையில் நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்.
76/60, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021 222 5876, 077 601 6310
(48947 (7.6.3)

A/L பொருளியல்
MCQ
BOOK - 1
BOOK - 2
BOOK - 3
தரம் 12
BOOK - 4
BOOK - 5
BOOK - 6
தரம் 13
மற்றும் வினா விடை நூல்கள்
வே.கருணாகரன்
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
021 567 11 11
advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.